OFFICE 13 MAR 1911 MADRAS.

# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரண௵ தை௴ 1911-௵ பிப்ரவரி௴ { பகுதி 8

## ஹ்ருதய க்ரந்திகள்

### SUBTLE ATTACHMENTS

உள்ளபடி மோக்ஷவழியில் பாடுபட எண்ணுபவர் பின்வரும் க்ரந்திகளை நன்கு உணர்ந்து நீக்கமுயலவேண்டும்.

1. **லோகவாஸனை.**—'உலகத்தவர்கள் நம்மைப் புகழவேண்டும். அவர்கள் இகழ்ச்சிக்கு நாம் இடமாகக் கூடாது' என்று ஒருவனுக்கு உண்டாகும் ஆவலே இந்த வாஸனையின் உண்மை ஸ்வரூபம். இது எல்லாரிடமும் மறைந்து கிடக்கும். 'உலகத்தில் நல்ல பிள்ளை என்று பெயர் எடுக்கவேண்டும்' என்று பெற்றோர் பிள்ளைகளுக்குக் கூறும் புத்திமதி இந்த வாஸனையால்தான் ஏற்படுவது. இவ்வாஸனை ஸாதாரண ஜனங்களை நல்லவழியில் நடக்கும்படித் தூண்ட ஓர் காரணமாக இருந்தபோதிலும், நல்லவழியிலேயே நடக்கும் குணமுடைய முமுக்ஷுக்களுக்கு மேற்செல்லவொட்டாது தடுக்கும் ஓர் தடையாகவே நிற்கும். உலகில் பழகப்பழக 'எல்லோருக்கும் நல்லவனாகஇருத்தல் முடியாது' 'யதார்த்த வாதி பஹுஜன விரோதி' என்ற வாக்யங்களின் கருத்து எவனுக்கும் நன்றாக வெளியாகும். ஆதலால் முமுக்ஷுக்கள் இந்த வாஸனை தமக்குத் தடையாகாவண்ணம் வேரறுக்க முயலவேண்டும். பெரியவரான **நாரதரால்** புருஷருள் சிரேஷ்டர் என்று **வால்மீகிக்கு** எடுத்துக் கூறப்பட்ட ராமருக்கும் பரமசுத்தையான ஸீதைக்கும் அபவாதம் வந்தது. தோன்றினபடி கூறப்படும் உலக நிந்தனையைப், பெரியோர்களாலும் தடுக்கமுடியாது என்று அடிக்கடி மனனம் செய்வதே இந்த வாஸனையை ஒழிக்கும் வழி. இந்த வாஸனை எளிதில் மாறாது. இந்த வாஸனை மஹான்கள் மனத்திலும் மறைந்து கிடக்கும். ஸ்தோத்திரத்தில் பிரியப்படாத பெரியோர்கள் அபூர்வம். இதுபற்றியே ஓர் கவி 'கீர்த்தி விரும்பல் சீரியர்க்கும் உள்ளதோர் நோய்' என்று கூறினர். ஆதலால் முமுக்ஷு இந்த வாஸனையை விடாமுயற்சியாலேயே நீக்கவேண்டும்.

2. **சாஸ்த்ர வாஸனை.**—மோக்ஷ சாஸ்த்ரங்கள் தவிர, மற்றைய 'சாஸ்த்ரங்களை யெல்லாம் அத்யயனம் செய்யவேண்டும், அவைகளின் அர்த்தத்தை உணரவேண்டும், அல்லது அர்த்தப்படி நடக்கவேண்டும்' என்று தோன்றும் ஆவலுக்கே சாஸ்த்ரவாஸனை என்று பெயர். ஸாதாரணமாகப் புத்திவிசாலப்படுவதற்காகவும், அல்லது ஜீவனம் பண்ணுவதற்காகவும் சில சாஸ்திரஞானங்கள் அவச்யமாக இருக்கலாம். அவைகளை மாத்திரம் கற்று, மற்றவைகளை முழுவதும் உணர துர்ஆசை கொள்ளாது புத்திமான் ஆத்ம சாஸ்த்ரங்களை உணர உடனே முயலவேண்டும். 'கற்றது கையளவு; கல்லாதது கடலளவு' என்பதை முமுக்ஷு ஒருபோதும் மறக்கவே கூடாது. முற்கூறிய இரண்டு விஷயங்களுக்காகமாத்திரம் வேண்டியசாஸ்த்ரங்களை அப்யஸித்து விட்டு, மற்றைய காலங்களை எல்லாம் ஒருவன் ஆத்ம விஷய ஆராய்ச்சியிலும், ஈச்வர க்ருபை ஸம்பாதிக்க வேண்டிய ஆராதனைகளிலும், மனதின் நிலையை உணரக் கூடிய அந்தர்முக நாட்டத்திலும் கழித்து வந்தால் சாஸ்த்ர வாஸனை வரவரக் குறைந்து கொண்டேவரும்.

3. **தேஹவாஸனை.**—'தேஹமே நாம். இதற்கு வரும் ஸுகம் நமக்கு வருவது. இதன் துக்கம் நம்மைச் சேர்ந்தது. ஆதலால் ஸுகத்தைத்தேடிக்கொள்ளவேண்டும்; துக்கத்தை நீக்கவேண்டும்' என்று கொள்ளும் எண்ணமே, இந்த வாஸனையின் ஸ்வரூபம். தேஹமே நான் என்று வரும் எண்ணத்தைத் தூக்கம் மரணம் முதலியவைகளைப்பற்றி அடிக்கடி மனனம் பண்ணி தேஹத்திற்கு அப்பாற்பட்டவஸ்து நாம் என்று ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டும். பின்னர் 'நாம் தேஹத்தைவிட வேறு அதற்கு வரும் ஸுகதுக்கங்களை நம்மவை என்று பாராட்டுவது தவறு' என்று அடிக்கடி மனனம் செய்யவேண்டும். மேலும் தேஹம் ஸதா அசுத்தமாக இருப்பது; தன்னோடு சேர்ந்த நல்ல வஸ்துக்களை அசுத்தப்படுத்தும் குணமுடையதே ஒழிய அது ஒருபொழுதும் சுத்தமாவதில்லை. மேலும் தேஹம் அநித்யம். ஆதலால் இருக்கிறவரையில் அது தரித்துநிற்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமே ஒழிய வேறுவித விசேஷக்கவலை அதன் விஷயத்தில் கொள்ளலாகாது' என்று மனனம் செய்து இந்த வாஸனையை நாளடைவில் நீக்கவேண்டும்.

# விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரண௵ தைமீ [பகுதி 8

## முக்ய உபநிஷத்துக்கள்

### THE PRINCIPAL UPANISHADS

### IX. சாந்தோக்ய உபநிஷத்து (1)

### THE CHHANDOGYA UPANISHAD.

சாந்தோக்ய உபநிஷத்து பெரிய உபநிஷத்துக்களில் ஒன்று. இது ஸாமவேதத்தைச் சேர்ந்தது. அத்யாயம் ஒவ்வொன்றிற்கு 13-க்குக் குறையாமலும், 26-க்கு மேற்படாமலு மிருக்கும் கண்டங்களை உடைய எட்டுப் பெரிய அத்யாயங்களை உடையது. இவ்வுபநிஷத்தில்தான், சிறந்த வேதக்கதைகள் இருக்கின்றன. மேலும் உபாஸனாபாகம் வெகு விரிவாக அனேகவித உபாஸனா மார்க்கங்களை அடக்கியுள்ளது. இவைகளில் சில, ஸாமவேத கர்ம காண்டப் பழக்கமில்லாதவர்களுக்கு விளங்க மாட்டா. ஆதலால் அவைகளைக் கூறாமல் ஆங்காங்கு விட்டுவிடுவோம். இந்த உபநிஷத்தில் ஸாமவேத மஹாவாக்யமாகிய தத்வமஸி என்பது காணப்படுகிறது. வேதங்களுள் சிறந்தது ஸாமவேதம் என்றும், அதில் சிறந்த பாகம் இவ்வுபநிஷத் என்றும், இதில் சிறந்த பாகம் தத்வமஸி மஹா வாக்யம் என்றும் பெரியோர் கூறுவர்.

அத்யாயம் 1:—முதலில் பிரணவத்யானம் கூறப்படுகிறது. இந்தப் பிரணவத்திற்கு இங்கு உத்கீதம் என்று பெயர். இது ஸாமகானத்திற்கு முக்கிய எழுத்தாதலால் இதற்கு இப்பெயர் வந்தது. பூதங்களின் ஸாரம் பூமி, இதன் ஸாரம் அப்பு, முறையே அப்பு, ஓஷதிகள், மனிதன், வாக்கு, ருக், ஸாமம், உத்கீதம் இவைகளுள் பின்னது முன்னதின் ஸாரம். ஆதலால் பிரணவம் முக்ய ஸாரமான வஸ்து. வாக்கே ருக்கு; பிராணனே ஸாமம். இவை இரண்டும் சேர்ந்த சேர்க்கையே ஓம். இந்தச் சேர்க்கையாலே ஓம் ஏற்படுவதால் இது ஸகல அபீஷ்டங்களையும் பூர்த்திசெய்து வைக்கும் திறனுடையது. வைதிக கர்மங்கள் எல்லாவற்றிற்கும் இந்த ஓம் முக்ய உபயோகமானது. ஸோம யாகம் இந்த ஓங்காரப் பிரணவத்தையே முக்யமாக உடையது. இதை உணர்ந்தும் உணராதும் த்யானம் செய்பவர்கள் உண்டு. உணர்ந்து செய்பவர்களுக்குப் பலன் அதிகம், உணராது செய்பவர்களுக்குப் பலன் இல்லாமல் போகமாட்டாது.

இந்த உத்கீதம் என்ன என்பதைப் பின் வருங்கதையால் விளக்கப்படுகிறது. முன்னொரு காலத்தில் ப்ரஜாபதியின் பிள்ளைகளாகிய தேவாஸுரர்கள் தம்முள் சண்டையிட்டுக் கொள்ள, இந்த உத்கீதத்தைக் கைப்பற்றிக் கொண்டு அஸுரர்களை வென்று விடலாம் என்று தேவர்கள் எண்ணினார்கள். உடனே மூக்கிலிருக்கும் சுவாஸமே உத்கீதம் என்று மதித்து அதைத் தியானித்தனர். அஸுரர்கள் அதனுள் புகுந்து கலக்கசுவாஸம் பாபஸம்பந்தமாகி நல்ல நாற்றம் துர்நாற்றம் இவைகளை உணரத் தொடங்கியது. இம்மாதிரி முறையே வாக்கு, கண், காது, மனம், ஆகிய இவைகளை உத்கீதம் என்று எண்ணி த்யானித்தனர். இவைகளுள்ளும் அஸுரர்கள் புகுந்து கலக்க இவைகளும் நல்லவை கெட்டவை ஆகிய இருவிதத் தொழில்களைச் செய்யும் திறனுடையவையாயின. முடிவில் வாயில் இருக்கும் பிராணனை உத்கீதமாகத் தேவர்கள் த்யானிக்க இங்கும் அஸுரர்கள் வந்து தாக்கினர். கல்லில் எறியப்பட்ட மண்ணுண்டைபோல் அவர்கள் சின்னாபின்னமாகச் சிதறிப்போக, தேவர்கள் ஜயம் அடைந்தனர். இந்தப் பிராணனே ஆஹாராதிகளை உட்கொண்டு மற்றைய முற்கூறியவைகளை திடப்படுத்துகின்றது. மரணகாலத்திலும் இது நீங்க, ஜந்துக்கள் வாய்திறந்த வண்ணம்

செயலற்று விடுகின்றன. இதை ஆங்கிரஸ், ப்ருஹஸ்பதி, அயாஸர், பகதால்ப்யர் முதலிய ரிஷிகள் த்யானம் செய்து மேன்மை அடைந்திருக்கின்றனர். (இங்குத்தேவர்கள் என்பது மனிதனது வேதசாஸ்த்ரங்களால் சுத்தப்படுத்தப்பட்ட இந்த்ரிய வ்யாபாரங்கள் என்றும், அஸுரர்கள் என்பது விஷயப் பற்றுக்களில் உழன்று தத்தளிக்கும் இந்த்ரிய வ்யாபாரங்கள் என்றும் பொருள் படுத்தி இக்கதைக்கு உட்பொருள் கொள்வர் பெரியோர்).

பின்னர் உத்கீதத்யானம் கூறப்படுகிறது. அண்டத்தில் ஸூர்யனையும், பிண்டத்தில் வ்யான வாயுவையும் உத்கீதமாகப் பாவிக்க வேண்டும். மேலும் பின்வரும் அட்டவணைப் படியும் த்யானம் செய்யலாம்.

| உத் | கீ | த |
|---|---|---|
| பிராணன் | வாக் | அன்னம் |
| ஆகாயம் | அந்தரிக்ஷ | பூமி |
| ஸூர்யன் | வாயு | அக்னி |
| ஸாம | யஜுர் | ருக் |

இவ்வாறு த்யானம் செய்யுங்கால் ஒவ்வொருவனும் தான் சொல்லப்புகும் ஸாமம் அதை அடக்கியுள்ள ருக், அதை உணர்ந்த ரிஷி, அது சென்றடையும் தேவதை, அதன் விருத்தம், அதன் மந்த்ரம், துதிக்கப் போகும் திசை, தன் மனத்தின் கண்ணுள்ள கோரிக்கை இவைகளை நன்றாய் மனத்திற்குக்கொண்டு துதிசெய்தால் அவனவன் இஷ்டம் பூர்த்தியாகும்.

முன்னொரு காலத்தில் தேவதைகள் மரணத்திற்குப் பயந்து வைதிக கர்மங்களை மந்த்ர பூர்வமாக அனுஷ்டிக்க முயன்றனராம். இவ்வாறு செய்தும் அவர்களுக்கு அப்பயம் நீங்காமற்போக உடனே கர்மங்களைவிட்டு ஓம் என்ற ப்ரணவத்தைத் த்யானம் செய்து மரணபயம் நீங்கி ஸுகித்தார்கள். இதை நன்ருக உணர்ந்து பிரணவத்யானம் செய்பவன் முடிவில் தேவதைகளைப்போல நிர்ப்பயனுவான். கர்மங்களால் மாத்திரம் மரணபயம் நீங்காதென்பதையும், த்யானம் அவச்யம் வேண்டும் என்பதையும் இக்கதையால் ச்ருதி குறிக்கின்றது.

இதன் பின்னர் ஸாம உபாஸனை கூறப்படுகின்றது.

| அண்டம் | | பிண்டம் | |
|---|---|---|---|
| ருக் | ஸாமம் | ருக் | ஸமாம் |
| பூமி | அக்னி | வாக் | பிராணன் |
| ஆகாயம் | வாயு | கண் | ஆத்மா |
| நக்ஷத்ரம் | சந்திரன் | காது | மனம் |
| ஸூர்யன் வெள்ளை ஒளி | ஸூர்யன் காரொளி | கண்ணின் வெள்ளை ஒளி | கண்ணின் காரொளி |
| ஸா | அம | ஸா | அம |

இவ்வாறு த்யானம்செய்து ஸூர்யனுள் இருக்கும் புருஷனையும், கண்ணுள்ளிருக்கும் புருஷனையும் துதிசெய்து ஸாமம் சொன்னல் பரத்திற்கும் இஹத்திற்கும் ஸாதகமாக இருக்கும்.

சிலகசாலவத்யர், செய்கிதான தால்பியர், பிரவாஹஜைவலி என்னும் மூன்று உத்கீத த்யானத்தில் தேர்ந்தவர்கள் அதைப்பற்றிவிசாரணை செய்யத் தொடங்கினர். அப்பொழுது

க்ஷத்ரியனாக இருந்த மூன்றாவான் மற்றவரை நோக்கி 'நீங்கள் விசாரணை செய்யுங்கள். பிராஹ்மணர்கள் ஆராய்ச்சியைநான்கவனிக்கட்டும்' என்று கூற, முதலவர் இரண்டாமவரை நோக்கிக் கேள்விகள் கேட்டார். ஸாமம்,ஸ்வரம்,பிராணன், அன்னம், அப்பு, ஸ்வர்க்கம், இவைகளுள் முறையே பின்னது முன்னதன் ஸாரம் என்றுகூறி ஸ்வர்க்கத்தின் ஸாரம் இன்னது என்று கூறமுடியாது தால்பியர் விழித்தார். அப்பொழுது, சாலவத்யர், 'ஸ்வர்க்கத்தின் ஸாரம் இப்பூமி, இதன் ஸாரம் ஒன்றும் இல்லை' என்று தால்பியருக்கு உபதேசித்தார். இதைக்கேட்டுப் பிரவாஹஜைவலி என்பவர் தால்பியரை நோக்கி 'பூமியின் ஸாரம் ஆகாயம். எல்லாம் ஆகாயத்திலிருந்து தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றன. இதுவே உத்கீதம்' என்று கூறி ஓங்காரம் எல்லாவற்றையும் அடக்கியுள்ளது என்பதை உபதேசித்தார்.

குரு தேசத்தில் இடி மழையால் பஞ்சம் உண்டான காலத்தில் உஷஸ்தி என்பவர் தமது சிறு பெண்சாதியுடன் ஆனைப்பாகர் க்ராமத்தில் வஸித்து வந்தார். எங்கும் தேடி உணவு அகப்படாதது கண்டு ஓர்யானையஜமானனிடம் வந்து பிச்சை கேட்டார். அதற்கு அவன் 'நான் சாப்பிட்ட மிச்சமாகிய இந்தப் பயறுகள் தான் இருக்கின்றன. என்னிடம் வேறு உணவு இல்லை' என்றான். 'அதையே கொடு' என்று உஷஸ்தி கேட்டு வாங்கிக் கொள்ள, யஜமானன் 'இதோ இன்னொருவர் குடித்த தண்ணீர் இருக்கிறது. இதையும் எடுத்துக்கொள்ளும்' என்றான். 'இது குடித்த மிகுதி. யான் எடுத்துக்கொள்ள மாட்டேன்' என 'பயறுகள் மாத்திரம் அவ்வாறல்லவோ?' என்று அவன் கேட்டான். அதற்கு உஷஸ்தி 'பயறுகள் தின்னாதிருந்தால் நான் உயிரிழக்க வேண்டிவரும். தண்ணீர் இல்லாதிருந்தால் அவ்வாறாகாது. மேலும் தண்ணீர் எங்கும் அகப்படும். ஆதலால் எனக்கு வேண்டாம்' என்று ஆபத்தர்ம ஸ்வரூபத்தை எடுத்துக் கூறிவிட்டு, தான் உண்டு மிச்சமாக இருந்தவற்றைத் தன் பெண்சாதி கையில் கொடுத்தார். அவள் முன்னரே எங்கேயோ ஆகாரம் செய்து விட்டபடியால் அதை வாங்கித் தின்று விடாது வைத்திருந்தாள். மறுநாள் காலையில் எழுந்ததும் 'ஏதாவது உணவு இருந்தால் உண்டுவிட்டு, அரசன் செய்யும் யாகத்திற்குப்போனால் ஏதாவது ஸம்பாதித்து வரலாம்' என்று உஷஸ்தி கூற, பெண்சாதி மிகுதிவைத்திருந்த பயறைக் கொண்டுவந்து கொடுத்தாள். இதை உண்டு யாகத்திற்குப்போய் உத்காதாக்கள் இருக்கும் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார். அப்பொழுது ஸாமகானம் செய்யப் புகும் உத்காதாக்களை நோக்கி 'கானங்கள் சென்றடையும் தேவதைகளின் ஸ்வரூபம் உணராது கானம் செய்தால் உங்களுக்கு ஆபத்து ஸம்பவிக்கும்' என்று எச்சரிக்கை செய்தார். அவர்கள் பொட்டை உருவிட்டிருந்தவர்கள் ஆகையால் பயந்து தொடங்காது விட்டனர். உடனே யஜமானன் உஷஸ்தியினுடைய சிறப்பை யுணர்ந்து, அவருக்கே உத்காத அதிபதி ஸ்தானம் கொடுத்தார். மற்றவர்களுக்குக் கொடுக்கும் தக்ஷிணைபோல தனக்கும்கொடுக்க வேண்டும் என்று பேசிக்கொண்டு தன் அதிகாரத்தைச்செலுத்தத் தொடங்கி 'பிரஸ்தாவத்திற்குத் தேவதைஎல்லாம் தோன்றி ஒடுங்குவதாகிய பிராணன்; உத்கீதத்திற்கு தேவதை எல்லாராலும் துதிக்கப்பெற்ற ஸூர்யன்; பிரதிஹாரத்தின் தேவதை ஜீவாதாரமான அன்னம்' என்று உபதேசித்து 'நான் எச்சரிக்கை செய்தபின்பு, நீங்கள் அறியாதிருக்கும் பொழுதே இந்தக்கானத்தைச் செய்திருப்பீர்களாயின் உங்களுக்கு அபாயமே நேரிட்டிருக்கும். நல்ல வேளை தப்பினீர்கள்' என்று கூறி முடித்தார். (இதனால் ஸாதாரணமாகத் தேவதாஞானம் முதலியன இன்றி யாகாதிகர்மங்கள் செய்யலாம் என்றிருந்தபோதிலும், இந்த ஞானம்

உடையவர்கள் முன்னிலையில் அவ்வாறு செய்யவே கூடாதென்பது நன்றாக வெளியாகிறது. மேலும் அர்த்த ஞானத்துடன் செய்யப் படும் கர்மம், அவ்வாறின்றிச்செய்யப்படும் கர்மத்தை விட அதிகப் பலனைத் தரக்கூடியது என்பதும் தெரியவருகிறது).

தர்மம் மூன்று பாகங்களை உடையது. அவைகளுள், யஞ்ஞம், த்யானம், தானம் ஆகிய இவைகளே முதல்பாகம்; தபஸ் இரண்டாவது; குருகுலவாஸம், பிரஹ்மசரியம் இவையே மூன்றுவது பாகம். இவைகளின்படி மாத்ரம் நடப்பவர்கள் புண்யலோகங்களை அடைவார்கள்.

| ஸாம பாகங்கள் | ஹிங்காரம் | ப்ரஸ்தாவ | உத்கீத | ப்ரதிஹாரம் | நிதானம் | பலன் |
|---|---|---|---|---|---|---|
| பொருள் | தொடக்கம் | பக்தி | துதி | தோற்றம் | நிலை | |
| அண்டங்கள் | ப்ருதிவி | அக்னி | அந்தரிக்ஷம் | ஸூர்யன் | ஆகாயம் | பரலோக ஸுகம் |
| உலகம் | ஆகாயம் | ஸூர்யன் | அந்தரிக்ஷம் | அக்னி | ப்ருதிவி | இஹலோக ஸுகம் |
| மழை | முன் காற்று | மேகம் வருதல் | பெய்தல் | இடிமின்னல் | முடிவு | மழை பெய்தல் |
| அப்பு | மேகம் சேர்வது | மழை பெய்தல் | கிழக்கே ஓடுவது | மேற்கே ஓடுவது | ஸமுத்ரம் | ஜல அபாயம் வாராது |
| ருதுக்கள் | வஸந்தம் | கோடை | வர்ஷக்காலம் | சரத்ருது | பனிக்காலம் | எக்காலத்தும் ஸுகம் |
| ப்ராணிகள் | வெள்ளாடு | ஆடு | பசு | குதிரை | மனிதன் | பசு முதலியவைகள் விருத்தி |
| இந்த்ரியங்கள் | மூக்கு | வாய் | கண் | காது | மனம் | இந்திரியங்களுக்கு அப்பாற்படுவது |

அத்யாயம் 2.—ஸாமத்யானம் ஸாதுவானது. அஸாதுவாக இருப்பதற்கு அஸாமம் என்று பெயர். ஐந்து கூறுடைய ஸாமத்தை இந்த அட்டவணைப்படி எண்ணி த்யானிக்க வேண்டும்.

இதன் பின்னர் விஸ்தாரமாக ஏழு கூறு உடைய ஸாமத்தை அநேக விதமாக மதித்து த்யானிக்கும் வகை கூறப்பட்டிருக்கிறது. இது ஸாமவேத கர்மகாண்ட பாகங்களில் பழக்கமுள்ளவர்களுக்குமாத்திரம் விளங்கும் ஆதலின் இங்கு எடுத்துக் கூருமல் விட்டு விடுவோம்.

பிரஹ்மத்தில் நிலை பெறுபவன் எவனோ அவன் மாத்ரம்தான் அழிவற்றவனுவான். (இந்த வாக்யம்தான் மோக்ஷத்திற்கு நேரான வழி இன்னதென்றும், மற்றைய வழிகள் எவ்வளவு உபயோககரம் என்றும் குறிப்பாகக் காட்டுகின்றது.)

ப்ரஜாபதி அண்டங்கள் விஷயத்தில் தமது மனத்தைச் செலுத்தினர். அப்பொழுது மூன்று வித்யைகள் உண்டாயின. அதை த்யானிக்க முதல் மூன்று வையாஹ்ருதிகள் உண்

டாயின. அவைகளிலிருந்து ஸாரமான ஓம் வெளிப்பட்டது. இதுதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

இதன் பின்னர் இக்காண்டம் முக்கால ஸவனங்களைக் குறித்துக் கூறிவிட்டு முடிவு பெறுகின்றது.

அத்யாயம் 3.—இங்கு முதலில் ஸூர்யன், காயத்ரி, இந்திரியங்கள் ஸம்பந்தப்பட்ட வாயுகள் ஆகிய இவைகளைப்பற்றி முதலில் பிரஸ்தாபித்துவிட்டு ஆத்மவிஷயம் பின்வருமாறு கூறப்படுகின்றது.

'இவை எல்லாம் பிரஹ்மமே. இதனுள்ளேயே ஆதி மத்யம் அந்தம் எல்லாம் உண்டாகின்றது. இந்தப் பிரஹ்மத்தை மன உறுதியோடு த்யானம் செய்யவேண்டும். மரணத்தின் பின் ஒவ்வொருவனுக்கும் அவனவன் மன உறுதிக்கு ஏற்ற நிலையே உண்டாகும். இந்த உறுதி ஞான ஸம்பந்தமாயும், இந்த்ரிய ஸம்பந்த மற்றதாயும், நிஸ் ஸந்தேகமாயும் இருத்தல் வேண்டும். இந்தப் பிரஹ்மமே என்னுள் அணுவைவிட அதிஸூக்ஷ்மமாயும், பூமி ஆகாயம், ஸ்வர்க்கம் முதலியவைகளை விட மிக விரிந்ததாயும் இருக்கும் ஆத்மா. மரணகாலத்திற்குப்பின் நான் இந்நிலையைப் பெறுவேன். இந்த மன உறுதி உடையவனுக்கு எவ்வித சஞ்சலமும் ஏற்படாது'என்றார் சாண்டில்யர் என்ற ரிஷி. பின்னர் தைத்ரீய உபநிஷத்தில் கூறியபடி மனிதனது வாழ்க்கையை யாகமாகக் கொள்வதற்கு வேண்டிய விஷயங்களை ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டிருக்கின்றது.

பிண்டத்தில் மனதை பிரஹ்மமென்றும், அண்டத்தில் ஆகாயத்தைப் பிரஹ்மமென்றும் பாவிக்கவேண்டும். பிரஹ்மத்திற்கு நான்கு பாதம். அதுபோல மனத்திற்கும் வாக்கு, மூக்கு, கண், காதும்; ஆகாயத்திற்கு அக்னி, வாயு,ஸூர்யன், திக்குக்களுமே நான்கு பாதங்கள். இவைகளை உணர்ந்து த்யானிப்பவனுக்குக் கீர்த்தியும் பிரஹ்ம தேஜஸ்ஸூம் உண்டாகும்.

ஸூர்யனே பிரஹ்மம் என்று கருதவேண்டும். பிரபஞ்சம் ஆதியில் நாமரூப மில்லாதிருந்தது. பின்னர் இவை உண்டாயின. கொஞ்சகாலத்திற்கு எல்லாம் இது முட்டை ரூபமாயிற்று. பின்னர் இரண்டாகப் பிளக்க, ஒருபாகம் பொன்மயமாயும், மற்றைய பாகம் வெள்ளிமயமாயும் ஏற்பட்டது. பின்னது தான் ப்ருதிவியும், முன்னது ஆகாயமும் ஆயின. முட்டையின் சிறியபாகங்களிலிருந்து மலைகள், மேகங்கள், ஆறுகள், ஸமுத்திரங்கள் முதலியன உண்டாயின. முட்டை உள்ளிருந்து தேஜோரூபியாய் ஸூர்யன் வெளிப்பட்டான். உடனே ஸந்தோஷ சப்தங்களும், ஜீவராசிகளும், விஷய வஸ்துக்களும் உண்டாயின. இதை அறிந்து ஸூர்யோபாஸனை செய்பவன் ஸுகம் அடைவான்.

அத்யாயம் 4.—ஜானச்ருதி யென்ற அரசன் வம்சத்தில் ஓர் பேரப்பிள்ளை இருந்தான். அவன் கொடையாளி, உதாரகுணம் உடையவன், தன் வஸ்துக்களாலே எல்லோரும் நன்மை யடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் சத்திரம் சாவடிகள் முதலியவற்றை எங்கும் கட்டுவித்தான். இவன் ஒருநாள் இரவில் தன் உப்பரிகைமேல் உட்கார்ந்திருக்கையில் மேலே பறந்து போன சில அன்னப் பறவைகளுள் ஒன்று மற்றொன்றை நோக்கி 'ஜானச்ருதி பேரன் மஹாகீர்த்திமான். அவன் தேஜஸ் ஸ்வர்க்கம் முழுவதும் பரவியிருக்கிறது. அவனிடம் அணுகினால் நீ பஸ்பமாகி விடுவாய்,' என்றதையும் அதற்கு இரண்டாவது பறவை 'இவன் சகட ரைக்வரா என்ன? அவர் மஹாஞானி. அவருக்கு ஸகல கர்மங்கள் பலனும் கிடைக்கும் அவரைப் போல அறிந்தவர்களுக்கும் அவ்வாறு உண்டாகும். இந்த அரசன் அவருக்கு எம்மட்டு? ஏன் வீணாகத் துதிக்கிறாய்' என்றதையும் கேட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 13 MAR 1911 MADRAS.

உடனே அந்த ரைக்வரைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி தன்வாயில்காப்போனை ஏவினன். ஸேவகன் தேடி எங்கும் காணாது பின்னர் பிராஹ்மணர்கள் இருக்கும் இடத்தில் தேடிவர அங்கு ஓர்வண்டி அடியில் சிரங்கு சொரிவந்துரைக்வர்உட்கார்ந்திருப்பதைக்கண்டான். இதை அறிந்த அரசன் ஏராளமான திரவ்யங்களை எடுத்து வந்து அவர் முன்வைத்து 'தாங்கள் உபாஸிக்கும் தேவதா ரஹஸ்யத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்,' என்று (மஹா விநயத்துடன் கேட்டான். 'ஏசூத்ர! கேட்கும் விதம் அறியாது ஸம்ஸார துக்கத்தால் பீடிக்கப்பட்டவனே!) இவைகள் எனக்கு வேண்டாம். போய்வா' என்றார். இவர் கிருஹஸ்தாச்ரமம் நடத்துவதற்கு உரிய பெண் சாதி வேண்டும் என்று அபேக்ஷிப்பதாக அறிந்த அரசன், திரவ்யங்களோடு தன் பெண்ணையும் கொண்டுவந்து ரிஷிமுன் நிறுத்த அவர், 'இவள் தான் என்னை உனக்கு இப்பொழுது உபதேசிக்கும்படி தூண்டுகிறாள்' என்று கூறி பின்வருமாறு அரசனுக்கு உபதேசிக்கலானார்.

'வாயுதான் எல்லாவற்றையும் சோஷிப்பது. எல்லாவஸ்துவும் வாயுரூபமாகி அடங்கி மறைகின்றன. இதேமாதிரி தேஹத்திலும் ப்ராணனே எல்லாவற்றையும் அடக்கிக்கொள்ளும் திறனுடையது. வாக்கு, பார்வை, கேட்டல், மனம் எல்லாம் தூங்கும் காலத்தில் இந்தப் பிராணனுள் அடங்கும். இம்மாதிரியாக அடங்கும் வஸ்துக்கள், அடக்கும் வஸ்துக்கள் ஆகிய 10-ம் விராட்ஸ்வரூபம். இதுதான் எல்லா ஆஹாரத்தையும் உட்கொள்வது. இதனால் தான் எல்லாம் விளங்குகிறது. இதைத்யானிப்பவன் எல்லாவிஷயங்களையும் உட்கொள்ளும் திறனுடையவனவான்,' என்றார். (இக்கதையால் நற்குணங்கள் ஞான ஸம்பாதனத்திற்கு ஏற்பட்டுள்ள வழிகள் என்பது விளங்கும்.)

# தமிழ்மொழியின் பரிபாலனை

## PATRONAGE IN TAMIL LITERATURE

(214-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி ஒவ்வோர் புலவர் செய்தியையும் பற்றி விசாரிக்கப் புகின், அவரவர்களையும் பிரபுக்கள் எவ்வளவோ மேன்மையாக நடத்தினர்களென்பதும் அவர்களைத் தெய்வம் போலப் பாவித்து பூஜித்து வந்தார்களென்பதும் இனிது விளங்கும்.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிளம்பொறை யென்பவன் போர் செய்யுங்காலத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்ததாகப் புறநானூற்றுச் செய்யுளால் தெரிகிறது. ஆதிகாலத்தில் யுத்தகளத்தில் அடிக்கப்பெறும் பேரிகை அல்லது முரசு என்ற வாத்தியத்தை அதிக பயபக்தியோடும் நீராட்டி, தூபம், தீபம், மாலை முதலிய மரியாதைகளையும் அதற்குச் செய்து, அதனை ஓர் உயர்ந்த பீடத்தில் வைத்திருப்பது மரபு. அவ்வாறு, மேற்கூறிய சேரமான் பெருஞ்சேரலிளம்பொறை தனது வீர முரசத்தை ஓர் கட்டிலில் வைத்திருந்தான். அதனைத் திருமஞ்சனம் ஆட்டுவதற்காகச் சேவகர்கள் எடுத்துப்போக, வீரமுரசம் வைக்கும் கட்டில் என்பதை யறியாமல் * மோசிகீரனர் என்ற வித்வான் ஒருவர் அக்கட்டிலிற் படுத்துத் தூங்கிவிட்டார். அதைக்கண்ட அரசன் அவர் மீது கோபியாமல் அவர் தமிழ்ப் புலவர் என்ற அபிமானத்தால், அவரை யணுகித் தனது இரு கைகளாலும் கவரிபெடுத்து வீசினன். விழித்தெழுந்த புலவர் அரசன் செய்கையைக் கண்ணுற்று, தாம் அந்தக் கட்டிலிற் படுத்துக்கொண்டது தவறென்று அறிந்து, அரசனுடைய அபிமானத்தையும் பெருந்தன்மையையும் புகழ்ந்து பாடினர். "வீரமுரசம்

* மோசுகீரனாரெனவும் இவர் பெயர்வழங்கும்

நீராடி வருவதன் முன்னே முரசுகட்டி லென்பதை யறியாமல் ஏறியவனை வாளால் வெட்டி விடாமற் காப்பாற்றியதே உனது தமிழ்ப் புலமையைச் செம்மையாகக் காண்பிக்கும். அதோடு நில்லாமல், உனது வீரம்பொருந்திய தோளை யெடுத்துச் சாமரை வீசினுய். இவ்வுலகத்திற் புகழை யடைந்தவர்களுக்கே மறுமையில் நல்ல பதவி கிடைக்குமென்ற விஷயத்தை யுத்தேசித்தா, அல்லது வேறு எந்தக் காரணத்தை உத்தேசித்து நீ இவ்வாறு செய்தாய்? வெற்றி பொருந்திய தலைவா! நான் அறியச் சொல்வாயாக" என்று பொருள் படும்படி, மோசுகீரனுர் சேரமானைப் பார்த்துச் சொல்லிய செய்யுளால் அவனுக்குப் புலவர்களிடத்திருந்த மரியாதையும் அன்பும் நன்ருகத் தெரியவரும்.

"அறியா தேறிய வென்னைத் தெறுவா
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறித
லதனெடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே."

இவ்வாறு புலவர்களை யாதரித்த பிரபுக்கள் அநேகம் பேரிருக்க, சிலர் தமிழ்ப் புலமையின் பெருமையை யறியாதாரிடத்துஞ் சென்று அவர்களுடைய செய்கைகளை வெறுத்திருக்கிருர்கள். அதனுற் புலவர்களது மனோதைரியம், ஊக்கம், கல்வியின் பெருமை முதலிய யாவும் நாம் அறிந்துகொள்வதற்கு இடமுண்டு.

பெருஞ் சித்திரனுர் என்ற புலவர் வெளிமான் என்ற ஓர் அரசனைக் காண்பதற்குப் போனுர். அவர் போனஸமயம் வெளிமான் இறந்து அவன் தம்பியான இளவெளிமான் தேசத்தையாண்டு கொண்டிருந்தான். அவன் "வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" யானது "ஓங்குபுகழ் மண்ணுள் செல்வ மெய்திய" வர்களைப்போன்ற தலைமையை யுடைத்தென்பதை யறியாமல் அவருக்குச் சிறிது கொடுக்க வந்தான். பெருஞ்சித்திரனுர் அப்பரிசிலை யேற்றுக்கொள்ளாமல் வெறுத்து அவ்விடத்தினின்றும் நீங்கிப் போய்க் குமணனைக்கண்டு அவன் ஓர் யானையைக்கொடுப்ப, அதனைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் இளவெளிமானிடம் வந்தார். அவர் இளவெளிமானைக் கண்டு சொன்ன வார்த்தைகளின் கம்பீரமான தொனி, புலவர்களின் ஸுதந்திரத்தையும் அவர்களது பெருமையையும் ஒருங்கே தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே."

என்ற செய்யுள் சுருக்கமாகவும் தெளிவாகவும் விஷயங்களை யெடுத்துச் சொல்லி இளவெளிமானை அவமானப்படுத்தியதாகக் கொள்ளப்பெறும்.

இதன்றி, வந்த புலவர்களுடைய பெருமையையும் அவர்கள் காலத்தின் அருமையையும் அறியாமல், சிறிது கொடுத்தாலும் ஸரி, அல்லது சிலநாள் தாமதித்துக்கொடுத்தாலும் ஸரி, அப்பரிசிலை வெறுத்து எண்ணிறந்த புலவர்கள் பிரபுக்களை அவமதித்துப் போயிருக்கிருர்கள்.

"கடுமான் றோன்றல் நெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்"

என ஒளவை அதிகமானெடுமானஞ்சியின் அரண்மனையை விட்டு நீங்கியதும்;

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே"

யென்று பெருந்தலைச்சாத்தனுர் சொல்லியதும்;

"காணு தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே."

என்று தன்னைக் கண்டு கொடாத பெரும் பொருளையும் அவமதித்த பெருஞ் சித்திரனுருடைய கல்விச் செருக்கும்; ஆனந்தத்தை விளைப்பன.

பிற்காலத்தில் ஒட்டக்கூத்தர் இஷ்டப்படியெல்லாம் இருப்பதற்கு அரசன் இடங்கொடுத்திருந்த விஷயம் யாவர்க்குந் தெரியும். "கம்பர் போன வழிகண்டு கழிந்தது;" "கதிர்வேய் மங்கலம்." முதலிய சொற்களால் கம்பரை அரசன் எவ்வளவு மேன்மையாகப் பாராட்டி வந்தானென்ற விஷயம் நன்கு விளங்கும். அப்படி யிருக்கவும் அரசனோடு தமக்குப் பகைமையுற்ற காலத்தில் "உன்னையறிந்தா தமிழை யோதினேன்" என்று அவர் அரசனை அவமதித்துச் சொல்லிய வார்த்தை பொது ஜனங்கள் அபிமானமொன்றையே பார்ப்போம் என்ற பொருளைத் தொனிக்கின்றது. இது போலவே, "பெரிதே யுலகம் பேணுநர் பலரே" என்பதாலும் உலகத்திலுள்ள பொது ஜனங்களே புலவர்களைப் பரிபாலிக்க வேண்டுமே யல்லாது சிற்சில பிரபுக்கள் பரிபாலிப்புமாத்திரமே போதாது என்பதை விளக்கும்.

புலவர்களை யாவரும் அபிமானிக்க வேண்டியது மிக்க அவசியம். ஏனெனில் கற்றறிவுடையோர் லோகோபகாரிகள். அவர்கள் ஜனங்கள் ஸுகத்தையே பார்ப்பவர்கள். தைரியமாக ஒன்றையெடுத்து அரசர்கள்முன்னேசொல்லத் தக்கவர்கள். மலயமான் என்ற ஒரு சிற்றரசன் மக்களைப் பிடித்து அச்சிறுவர்களை யானையாற் கொல்விக்க எண்ணங்கொண்ட ஓர்சோழராஜன் செய்கை தவறென்று சொல்லி அவ்விஷயம் நடவாமற் காத்த பரம உபகாரியாரெனின் ஓர் தமிழ்ப் புலவரே. இன்னும் இக்காலத்தில் மிகவும் படித்தறிந்து கல்வி கேள்வியுடைய பெரியோர்களே அமைச்சராக விளங்கி வருவதுபோல, முற்காலத்திலும் வித்வான்களே மந்திரி ஸ்தானத்திலிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்துவந்ததாகத் தெரிகின்றது. இவ்வாறு, தமிழ்ப் புலவர்கள் அரசர்களாலும் பொது ஜனங்களாலும் பரிபாலிக்கப்பெற்று அநேகம் நூல்களை யியற்றி யுதவினர்கள்.

சிறிது காலத்துக்கெல்லாம் தமிழ் மடங்கள் உண்டாகித் தமிழ்ப்பாஷையை விருத்திசெய்யத் தொடங்கின. ஆதீனத் தலைவர்களும்சிறந்த கல்வி கேள்வி யுடையவர்களாகவே யிருந்து தமிழ்ப்புலவர்களின் அருமை பெருமைகளை நன்குணர்ந்து அவர்களை அன்போடு நடத்தி வந்தார்கள். ஸமீபகாலத்தில் சீதக்காதியென்ற பெயருள்ள ஓர் மகம்மதிய பிரபு அநேகம் தமிழ்ப்புலவர்களுக்கு விசேஷ வெகுமதி யளித்து வந்தார். அவர் இறந்துபோன பிறகு அவர் பிரிவாற்றாது வருந்திய ஓர் புலவர்,

"மறந்தாகிலுமரைகாசுங்கொடாமடமாந்தர்மண்மேல்
இறந்தாவதென்னவிருந்தாவதென்னவிறந்துவிண் [போய்ச்
சிறந்தநாளுங்காயற்றுரைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப்பிழைப்பில்லையே"

என்று மன முருகிப் பாடியுள்ளார்.

இவ்வாறு அநேகம் கனதனவான்கள் புலவர்களைப் பரிபாலித்து உலகமுள்ளளவையிற் றமது புகழை நிலைநிறுத்தி யிருக்கிறார்கள். கம்பருக்கு உதவி செய்யாதிருந்தால் சடையப்பவள்ளலின் பெருமையைப் பிற்காலத்தார் எவ்வாறு அறியமுடியும்? இம்மை மறுமைப் பயன்களை யுத்தேசித்தும், கல்வியின் அபிவிருத்தியையும், நூற்பெருக்கையும், பாஷையின் செம்மையையும்,நாட்டின் அறிவுமுதிர்ச்சியையும் உத்தேசித்தும், லோகோபகாரமாக நூல்களியற்றிய புலவர்கள் தமிழ்ப்பாஷையில் எவ்வளவோ பேரிருந்திருக்கிறார்கள்.

இப்படி யிருக்கவும், இக்காலத்தில் தமிழ்க் கல்வி குறைந்திருக்கிற தென்றும், தமிழை

பொருவரும் படிப்பதில்லை யென்றும் பலர் சொல்வதையும் நாம்கேட்டுவருகிறோம். கிராமங்களிலும் மற்றும்வெளிப்பிரதேசங்களிலும், எண்ணிறந்தபேர் இப்போதும்தமிழை ஓயாமற் படித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். தாங்கள் மாத்திரமே படித்தவர்கள் என்று மேல் விழுந்து சொல்லாமற் போனாலும் அவர்களுடைய படிப்பின் பெருமை எங்கே போய் விடும்? அடக்கமும், கல்வியறிவும், பெருந்தன்மையும் ஒரே இடத்தில் நிலை நிற்கும் குணங்களாகும்.

அவ்வாறன்றித் தேசத்தில் தமிழ்க் கல்வி குறைந்திருந்தால், இவ்வளவு புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலிய பொருள் நோக்கங் கொண்ட ஊக்கம் முற்றும் பயன் பெறாமற் போகும்; எப்போது அவை பயன் பெறுகின்றனவோ அப்போது அநேகர் தமிழைப் படித்துக்கொண்டுதானிருக்கிறார்கள் என்பது ஒரு சாரார் கொள்கை. இது உண்மையான அபிப்பிராயமே யென்பது யோசித்தால் இனிது விளங்கும். ஆனால், தமிழ்த்தேசம் எவ்வளவோ பெரிதாக இருப்பதற்கு இன்னும் எவ்வளவோ பத்திரிகைகள், புஸ்தகங்கள் முதலிய பயன் பெறக் கூடும் என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். பொதுஜன பரிபாலனம் உரையாணி போன்றது. ஓர் புஸ்தகமோ, பத்திரிகையோ, எல்லாருக்கும் இனிமை பயப்பதாக இருந்தால் தான் அது விசேஷமாகப் பரவும். ஆயினும் யார் படித்தவர்கள், யார் படியாதவர்கள், எந்தப் புத்தகத்தைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது, எது பிழையின்றி யிருக்கிறது, எது பிழை நிரம்பி யிருக்கிறது; என்ற விஷயங்களையும் பொது ஜனங்கள் உய்த்துணர்வார்களானால் தமிழ்ப் பாஷையின் தூய்மை கெடாமலிருக்கும். நல்ல புஸ்தகங்களும் பத்திரிகைகளும் நன்றாக ஆதரிக்கப் பெற்றுப் பொதுஜன நன்மையை விருத்திசெய்யும் இவ்விஷயம்தான் மேல் நாட்டில் மிக்குள்ளது.

ஸமீபகாலத்தில் இந்தியா காரியதரிசியாக விருந்த லார்டு மார்லி துரையவர்கள் அக்கிராஸனம் வகிக்க ஓர் ஸபைகூடியதாகக் கேட்டு ஆனந்த முண்டாகிறது; இங்கிலீஷ் பாஷையில் அனுவசியமாக அன்னிய பாஷைச் சொற்களின் கலப்பில்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும்; அந்த நோக்கத்தோடு எழுதப் பெற்ற புஸ்தகங்களை மிகுதியும் பரிபாலிக்க வேண்டும்; தக்க நிர்வாஹிகளாகிற புலவர்களுக்கு உதவி செய்யவேண்டும்; நல்ல கிரந்தங்கள் வெளிவரவேண்டும் என்ற சிறந்த நோக்கங்களோடு அந்த மஹாசங்கம் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது.

தமிழ்த்தேசத்தில் தமது ஸொந்த திரவியத்தைச் செலவிட்டு, தமிழ்ச் சங்கத்தையும் புஸ்தகசாலையையும் ஸ்தாபித்தும், தமிழ்ப் பரீக்ஷைகளை நடத்தியும், பரீக்ஷையிற்றேறி வருபவர்களுக்குப் பரிசுகொடுத்து ஊக்கமளித்தும், இன்னும் ஆங்காங்குப் பிரஸங்கங்கள்செய்தும், தமிழில் முழு அபிமானங்கொண்டு வேலை செய்து வரும் ஸ்ரீமான் பொ. பாண்டித்துரை சாமித் தேவர் அவர்களின் பெருந்தகைமை இக்காலத்தில் மிக மேன்மையாகப் பாராட்டத் தக்கது.

இதுகாறும் என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் ஆங்காங்கு ஒவ்வோர் முக்கிய நிகழ்ச்சியை மாத்திரம் எடுத்துக்கொண்டு தமிழ்ப் பாஷையின்பரிபாலனத்தைப்பற்றிச் சிலமுக்கிய அபிப்பிராயங்களை மட்டில் எடுத்துக் கூறினேனேயன்றி, இவ்விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யத்தக்க கல்வி கேள்வியுடைய பெரியோர் இதனை முற்றும் ஆராய்ந்து சொன்னால் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் தெரியலாம். தமிழ்த் தேசத்தில் இருந்த "காவலர்பல்லோர் பாவலர் பல்லோர், மாசரி தத்தை யாசற விளக்கும்" புறநானூறு போன்ற சொற்சுவை பொருட்சுவைபொலியும் நூல்களை நமக்கு அச்சிற்றந்து உதவி, பழைய தமிழ்ப்புலவர்களின் பெருமையையும், அவர்களை யாதரித்த பிரபுக்களின் பெருந்தகைமையையும் எல்லாரும் உணர்ந்து களிக்கும்படிச் செய்யும் ஐயரவர்களது சிறந்த முயற்சிக்கு ஏற்ற கைம்மாறு ஒன்றுமில்லாமை கண்டு,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

என்ற திருக்குறட் செய்யுளைச் சிந்தித்தவனாக, இவ்வியாஸத்தை இத்துடன் நிறுத்துகின்றேன். ஸி. பி. வெங்கடராமய்யர், எம். ஏ.

பாட்டுப்பாடி மாடு கறத்தல்.—"அடிக்கறக்கிற மாட்டை அடிக்கறக்கவேண்டும், பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும்" என்னும் பழமொழியை அநேகர் கேட்டிருக்கலாம். ஆனாலும் அந்தப் பழமொழியின்படி நம்முடைய நாட்டில் எவரும் செய்வதாய்த் தோன்றவில்லை. இங்கிலாந்தில் வேளாண்மைத் தொழில் செய்யும் ஆடா எப்ஹௌவ்வி என்னும் ஒரு துரை மகள் தான் செல்வமாக வளர்த்து வரும் பசுமாடுகளுக்குத் தகுந்த பாட்டுகள் பாடிப் பால் அதிகமாகக் கறக்கிறாளாம். பாட்டு மனதுக்கு ஒருவிதமான சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குவதினால் மாடுகளுக்கு அதிக சத்துள்ளதும் சுத்தமுமான பால் ஏராளமாய் சுரக்கிறதாம். இப்படிச் செய்து வந்ததினால் அந்தத் துரைமகளுக்குப் பால் வெண்ணெய் வியாபாரங்களில் அதிக லாபம் கிடைக்கிறதாம். இந்த விஷயம் நம்முடைய அனுபோகத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. ஏனென்றால், இடி, மின்னல் இன்னும் பலவிதமான சத்தங்களினால் மாடுகள் திடீரென்று பயந்து கொண்டால் பாலே நன்றாய் சுரக்கிறதில்லையென்பது நாம் எல்லாரும் அறிந்த விஷயமே. அப்படியில்லாமல் தப்பித்தவறி பால் கொஞ்சம் சுரந்தபோதிலும் அந்தப்பால் ருசியிலும் ஸத்திலும் குறைந்திருப்பதை அனேகர் கண்டறிந்திருக்கிறார்கள். எப்படி மாடுகள் சத்தங்களினால் ஒருவிதமான வெறுப்பையும் பயத்தையும் அடைந்தால் பாலானது அளவிலும், குணத்திலும், ஸத்திலும் குறைவுபடுகிறதோ அப்படியே அவைகளுக்குப் பிரியமான தொனிகளால், அதாவது, பாட்டுகளால் மாடுகளை உற்சாகப்படுத்தி விட்டால் எல்லாவிதத்திலும் உயர்ந்த பாலை ஏராளமாய்க் கறந்து கொள்ளலாம் என்பது தெளிவாகிறது. மாடுகள் பாட்டுக்களைக் கவனித்து உற்சாகமடைகின்றனவென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஏனென்றால் மாடு மேய்க்கிற பையன்கள் புல்லாங்குழல் வாசித்தால் மாடுகள் சமீபத்தில் வந்து உற்றுக்கேட்பதை அனேகர் பார்த்திருக்கலாம். சாதாரணமாக மாடுகளெல்லாம் சாந்தமும் அமைதியுமுள்ள பிராணிகள். ஆகையால் கர்ண கடோரமான சத்தங்கள் அவைகளுக்குத் துன்பத்தை உண்டாக்குவதோடு அஜீரணத்தையும் உண்டாக்குவதாகச் சொல்லப்படுகிறது. மாடுகள் சாந்தமாயும் அமைதியாயும் படுத்துக்கொண்டு அசைபோடுவதே அவைகளின் இயற்கையான குணத்தைக் காட்டுகிறது; இந்த விஷயங்களையெல்லாம் நன்றாயறிந்த அந்தத் துரைமகள் ஒவ்வொரு மாட்டுக்கும் ஒவ்வொரு பாட்டும் பாடிக்கொண்டே பால் கறக்கிறாளாம். இப்படிச் செய்துவந்ததினால் ஒரு மாடு முன் கறந்துகொண்டிருப்பதைவிட இப்பொழுது மூன்று மடங்கு அதிகமாகப் பால் கறக்கிறதாம்.

# வியாஸ விதானம்

## ESSAY WRITING

## I. வர்ணனை வியாஸங்கள்

## DESCRIPTIVE ESSAYS

### 7. ஸந்தர்சன விஷயங்கள்—

### விடுமுறை யாத்திரை

Subjects involving observation—*A Holiday trip*

குறிப்பு.—முகவுரை—வர்ணனை, நோக்கம்—கண்ட அற்புத விஷயங்கள்—கேட்ட அற்புத விஷயங்கள்—முடிவு, அபிப்ராயங்கள்.

1910௵-முடிவில் விடப்பட்ட ஸங்கராந்தி விடுமுறைக்காலத்தில் நாங்கள் இரண்டுவித யாத்திரை செய்தோம். அவற்றில் முதல் யாத்திரை ஸ்வாமிதர்சன விஷயமாகவும், மற்றையது காட்சிகளைக் காணும் விஷயமாகவும் ஏற்பட்டது. இவைகளுக்கு ஏற்பவே முன்னது பழைய நாள் யாத்திரையைப் போல வண்டியிலும்; பின்னது இக்காலத்திய நாகரீகத்திற்கேற்ப இருப்புப்பாதை வண்டியிலும் செய்யும்படி நேர்ந்தது. இவைகள் முறையே நான்கு நாட்களிலும் இரண்டு நாட்களிலும் நடந்தேறின.

ஓர் வியாழக்கிழமை யன்று திருநெல்வேலியிலிருந்து பகல் 12-மணிக்கு வண்டி ஏறித் திருச்செந்தூர் நோக்கிப் புறப்பட்டோம். அன்று 3-மணிக்குக் கருங்குளம் என்று ஸுமார் 11-மைல் தூரத்திலுள்ள ஊர் சத்திரத்தில் இறங்கி அருகிலிருந்த தாம்பிரபர்ணி யாற்றில் சிற்றுண்டி உட்கொண்டோம். இவ்வூர் முதல்தான் வண்டிப்பாதை தாம்பிரபர்ணிக்கரை ஓரமாகப் போகத் தொடங்குகிறது. இங்கிருந்து புறப்பட்டுப் போகையில் கருங்குளம் குன்றையும், அதன் மேலுள்ள விஷ்ணு கோயிலையும், அதன்வடபுறத்து அடிவாரத்தில் இருந்த சிவன் கோயிலையும், கீழ்ப்புறமுள்ள கிராமத்தையும் கண்டோம். இருபக்கங்களிலும் வயல்கள் பச்சைபசேல் என்று கண்ணுக்கெட்டியதூரம்

வரையில் தோன்றின. அன்றிரவு 15-வது மைல் ஆற்றைக்கடந்து வடகரையிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற கிராமத்தில் தங்கினோம். அங்கு வைகுண்ட நாதருக்கு நடந்த ஏகாதசி உற்சவத்தில் அன்று கருடசேர்வை, கஜேந்த்ர மோக்ஷ அவஸரம். அதைக் கண்ணாரக்கண்டு ஸேவித்து விட்டு, வெள்ளிக்கிழமை காலை 4-மணிக்கு வண்டி ஏறி 8-மணி ஸுமாருக்கு அம்மாப் பேட்டை சத்திரம் வந்து சேர்ந்தோம். இது 13-மைல் தூரத்திலிருப்பது. இதன் அருகாமையில் தாம்பிரபர்ணிக் கால்வாய் ஒன்று சத்திரத்தை ஒட்டினாற்போல் வருகிறது. இங்கு வரும் முன்னரே ஸூர்யோதய காலத்தில் பாதை ஓரமாய் இருந்த கால்வாயில் பல் தேய்த்து அனுஷ்டானாதிகள் செய்திருந்தோம். இங்கு வந்ததும் சத்திரத்திலிருந்து காலைச்சிற்றுண்டிவாங்கித்தின்றுவிட்டுஸுமார் $10\frac{1}{2}$-மணிக்குத் திருச்செந்தூர் போய்ச் சேர்ந்தோம். அங்கு மத்யாநம் தர்சனம்செய்ய முடியவில்லை. இரவு தர்சனம், அபிஷேக தர்சனம் முதலியவைகள்செய்துகொண்டு, மறுநாட்காலை (சனிக்கிழமை)யில் ஸமுத்ர ஸ்நாநம், தர்சனம் முதலியவைகளைச்செய்துகொண்டோம். அன்று நடுப்பகல் வண்டிஏறி இரவு ஆழ்வார் திருநகரி,(திருச்செந்தூரிலிருந்து 16-மைல் தூரத்தில் இருக்கும் திவ்யதேசம்) வந்தோம். இங்கு வருமுன் திருச்செந்தூரிலிருந்து10-மைல்தூரத்திலிருந்த ஆனப்பிள்ளை சத்திரத்தில் சிற்றுண்டி கொண்டிருந்தோம். இரவில் ஆற்றுக்கு வடகரையிலிருக்கும் ஏகாந்தீச்வரர் தென்கரையிலிருக்கும் ஆதிநாராயண ஸ்வாமி நம்மாழ்வார் தவம் செய்தருளிய புளியமரம் முதலியவைகளையும், நம்மாழ்வார் ஏகாதசி உத்ஸவத்தில் கண்ணன் திருக்கோலம் கொண்டிருக்கும்திவ்ய ஸேவையையும் ஆழ்வார்திருநகரியில் கண்டு களித்தோம். மறுநாள் நம்மாழ்வார் மூல ஸ்தானம் திருப்பள்ளியெழுச்சி விமர்சையைத் தரிசித்து விட்டு நடுப்பகல் வண்டியேறி மாலை 6-30 மணிக்குத் திருநெல்வேலி வந்து சேர்ந்தோம். போகும் வழியில் கண்ட ஆறு, மலை, குன்று பொத்தை, பாம்பு, வயல்கள், சத்திரங்கள், பாதைகள் இவைகளின் அமைப்பு முதலியன மனதைக் கவரும் தன்மையவாக இருந்தன.

திங்கட்கிழமை நடுப்பகல் புகைவண்டி யேறித் திருநெல்வேலியிலிருந்து கொல்லம் நோக்கிக் காட்சி காணப் புறப்பட்டோம். இப்பாகத்தில் இருப்புப்பாதை அதிக வளைவாக அநேக இடங்களில் காணப்படுகின்றது. திருநெல்வேலிக்கப்பால் 15-மைல் தூரத்திலிருந்து செங்கோட்டை வரையில் மேற்குத்தொடர்ச்சி மலைகளிலிருந்து ஸுமார் 3-அல்லது நான்குமைல் தூரத்திலேயே இருப்புப்பாதை போகிறது. முக்யஊர்கள் வழியாகப் போவதற்காக அடிக்கடி வளைந்தும் போகின்றது. இங்கு மலைக்காட்சி மிகநேர்த்தியாக இருக்கும். அம்பாஸமுத்திரத்திற்கு அருகாமையிலும் சேர்மாதேவிக்கு அருகாமையிலும் இப்பாதை தாம்பிரபர்ணியைக்கடக்கின்றது. தாம்பிரபர்ணியில் உள்ள பாபநாசம், பாணதீர்த்தம் முதலிய அருவிகள் கீழ் ஆம்பூருக்கு அருகாமையில் மேகச்சிதைவுபோல காணப்படுகின்றன. திருக்குற்றாலம் அருவிகள் செங்கோட்டைக்கு முன்னால் 492/14 தந்திக்கம்பிமுதல் 492/20 வரையில் நன்றாகத் தெரியும். செங்கோட்டையிலிருந்துதான் மலைப்பாகம் தொடங்குகிறது. இதுமுதல் 31-மைல் தூரத்திலுள்ள புனலூர் வரையில் இருப்புப்பாதை வளைந்துவளைந்து மலைகளின் இடையில் போகின்றது. செங்கோட்டை முதல் 9-மைல் தூரத்திலுள்ள ஆரியங்காவு வரையில் இருப்புப்பாதையில் ஸுமார் 21 வளைவும், 20 மலைப்பிளவுகளும், 990-கஜம் நீளமுள்ள ஓர் துரப்பும் இருக்கின்றன. (இது 503-1-

லிருந்து 502-6 வரையில் உள்ள இடையில் காணப்படும்). ஆரியங்காவில் பள்ளத்தாக்குள் ஓர் சாஸ்தா கோயிலிருக்கிறது. இங்கிருந்து இரண்டு புறமும் மலைதான். இங்குவர இருப்புப்பாதை $4\frac{1}{2}$ மைல் வடக்கேபோய் பின்னர் $4\frac{1}{2}$ மைல் தெற்கே வந்திருக்கிறது. செங்கோட்டையிலிருந்து ஆரியங்காவு ஸுமார் $4\frac{1}{2}$ மைல் மேற்கேதான் இருக்கும். இதுமுதல் புனலூர்வரையில் இருப்புப்பாதைபள்ளத்தாக்கின் வழியே போகிறது. இருபக்கமும் உள்ள காட்சியின் கம்பீர்யம் பார்த்தால்தான் தெரிய வரும். மனிதர் அணுகமுடியாதது போலக் காணப்படும், மரம் அடர்ந்த காடுகளால் மூடப்பட்ட மலைகளும் அதன் கீழே வெகு ஆழமான மரமடர்ந்த ஆனைக்காடு என்ற பள்ளத்தாக்கும், அதன் இடையே நம்முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட வண்டிப் பாதையும் புகைவண்டியின் இடப்புறம் காணப்படும். வலப்புறம் செங்குத்தான பாறைகளும் சிற்சில ஸமயங்களில் உயர்ந்த மலைச்சிகரங்களும் காணப்படும். இம்மாதிரியான காட்சிகளை ஸுமார் இரண்டுமணிநேரம் பார்க்கும்படி இங்குதான் நேரிடும். இதைக்கண்டதும் பகவத் ஸ்ருஷ்டியின் பெருமையும், அதை நன்கு உபயோகப்படுத்தும்படி அவர் நமக்கு அருளி இருக்கும் அறிவின் சிறப்பும் எவருக்குத்தான் தோற்றாமற் போகும்! ஆரியங்காவிலிருந்து 8 மைல் தூரமுள்ள தேன்மலை என்ற ஊர் போவதற்குள் இருப்புப்பாதையில் 58 வளைவும், 39 மலைப்பிளவும், அடுத்து அடுத்து இரண்டு சிறு தூரப்பும் இருக்கின்றன. (510/1, 510/3) இங்குதான் தெற்கே போகும் மேற்குத் தொடர்ச்சி மலைகளை விட்டுப் பாதை மேற்கே போய்விடுகின்றது. தென்மலையிலிருந்து 8-மைல் தூரமுள்ள இடமன் என்ற அடுத்த ஊர் போவதற்குள் இருப்புப்பாதையில் 60-வளைவும், 31 பிளவும், இரண்டு தூரப்பும் இருக்கின்றன. இதில் முதல் தூரப்பு $\frac{1}{4}$ மைல் நீளமுள்ளது. இடமனிலிருந்து போகும் பொழுது வரவர பள்ளத்தாக்கு அகன்றும், மலை உயரம் குறைந்தும் வருகின்றது. 6 மைல் தூரத்திலுள்ள புனலூர் போவதற்குள் பாதையில் 22 வளைவும், 19 பிளவும் காணப்படுகின்றன. கொல்லம் போகும்வரையில் பாதை மலையாளக்குன்றுகளால் தடுக்கப்பட்டு வளைந்தே போகின்றது. இரவு 8 மணி கொல்லம் சென்று மறுபடி செவ்வாய்க்கிழமை காலை அங்கிருந்து புறப்பட்டு முற்கூறிய காட்சிகளை மறுபடியும் பார்த்துக்கொண்டு அன்று மாலை ஊர் வந்து சேர்ந்தோம்.

இந்த யாத்திரையில் சிற்சில அற்புத விஷயங்கள் கேள்விப்பட்டோம். ஸ்ரீ வைகுண்டத்தில் மண்மதிலாலாகிய கோட்டை ஒன்று காணப்பட்டது. அதன் வரலாற்றை விசாரித்ததில் அதனுள் ஒரு வேளாள ஜாதியார் இருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு அதனால் கோட்டை வேளாளர்கள் என்னும் பெயர் வந்தது என்றும், அவர்கள் பெண்பிள்ளைகள் கோட்டையை விட்டு வெளியே வரக்கூடாதென்றும், உள்ளே தாய்தந்தையர் கணவன் என்னும் இவர்கள் முகங்கள் தவிர வேறு எவர்கள் முகங்களையும் அவர்கள் பார்க்கக்கூடா தென்றும், பெண்கள் இறந்தால் பிணத்தைப் பைகளில் கட்டி உள்ளிருந்து பெண்கள் வெளியே தள்ளிவிட ஆண்பிள்ளைகள் கோட்டைக்கு வெளியே கொண்டுபோய் தகனம் செய்வார்கள் என்றும், ஊரிலுள்ள பெண்பிள்ளைகள் கோட்டையுள் போகலாமே ஒழிய ஒரு வயதுக்கு மேற்பட்ட ஆண் குழந்தைகள் கூட போகக்கூடா தென்றும், கோட்டையுள் உள்ள ஸொத்துக்கள் பெண்கள் மூலமாக மருமக்கத்தாயம் போலப்போவன என்றும், இச்சாதியார் ஆதியில் இராமநாதபுரம் ராஜாவுக்கு ஊழியக்காரர்களாகவிருந்து,

பின்னர் அவரிடம் இருக்க மன மில்லாது தெற்கே புறப்பட்டு ஸ்ரீ வைகுண்டம் வந்து குடி ஏறினவர்கள் என்றும் கேள்விப்பட்டோம். அவ்வூர் புருஷர்கள் இக்கோட்டையுள் எவ்வாறிருக்கின்றது என்று தமது மாடிகள் மீதிருந்தும், தமது ஸ்திரீகள் சொல்லுங் கதைகளிலிருந்தும் தெரிந்து கொண்டிருக்கின்றனர். இந்நாட்டில் ஒளி மறைவாய்த் திரிபவர்களை 'என்னடா கோட்டை வெள்ளாட்டிச்சிமாதிரி திரிகிறாய்' என்று கேட்பது வழக்கமாம். நாகரீகம் நிறைந்த இக்காலத்தில் புருஷர்கள் படிக்காமலும் ஸ்திரீகள் அடைபட்டும் கிடப்பது மிகப்பரிதாபப் படக்கூடியதில்லையே. திருச்செந்தூருக்கு ஸ்ரீ ஜயந்தீபுரம் என்று பெயராம். இங்கு ஸுப்ரஹ்மண்யர் சூரபத்மாவை ஸம்ஹாரஞ் செய்து முடித்ததால் இதற்கு இப்பெயர் வந்ததாம். இந்தப் பிரதேசத்தில் கொஞ்சகாலமாக ஓர் நம்பூரி தனது சிறப்பால் கிறிஸ்தவர்களாகப்போன பெரிய சாணார்களை ஹிந்து மதத்திற்கு திருப்பி ஸுமார் 300 பெயர்களை நல்லவழிக்குக் கொண்டு வந்தாராம். அப்பொழுது உண்டான பாதிரிச் சச்சரவில் இவர் ஏதோ ஓர்விதமாக நடக்கும்படி நேரிட சண்டை பலப்படும் போல இருந்ததாம். இவர் மேல் பேசி தமது பாதிரித் தொழிலை நடத்த முடியாமல் போய் விட்டதாம். இம்மாதிரி கீழ்ஜாதியாரை, அவரது கடமைகளை நன்கு உணரும் வண்ணம் செய்து நமது மதத்திற்குத் திருப்பும் பிரயத்தனங்கள் செய்யவேண்டும். அப்பொழுது அந்த வழியில் இந்த நம்பூரி செய்த செயல்கள் நமக்கு மிகுந்த தைர்யத்தைத் தரும் என்பதற்கு என்ன ஸந்தேஹம்?

யாம் செய்த இரண்டுவித யாத்ரைகளையும் உற்று நோக்கில் விடுமுறை யாத்திரைக்கு, முன்னவர்கள் செய்ததுபோல வண்டிப்பாதை யாத்திரையே சிறந்தது என்று தோற்றுகிறது. இதில்ஊர்களையும் வழிகளையும் பார்ப்பதுபோல இருப்புப்பாதை யாத்திரையில் பார்க்க முடியாது. மலைக்குள் செங்கோட்டை முதல் புனலூர் வரையில் போகும்பொழுது திருச்செந்தூருக்குப் போனதுபோல வண்டியில், நமது முன்னோர் செய்திருக்கும் வழியே, மலைக்குள் போயிருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும் என்று எனக்கு அடிக்கடி தோன்றிற்று. அங்கிருந்த காட்சிகள் அவ்வளவு அற்புதமாக இருந்தன. அவஸர வேலைகளுக்கு இருப்புப்பாதை மிக உபயோகம் உடையதே ஒழிய விடுமுறைப் பிரயாணத்திற்கு அது அவ்வளவு தகுந்ததல்ல.

[இதேமாதிரி விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்.]

1. விடுமுறை கழிக்கும் விதம். 2. வண்டிப் பிரயாணம்.
3. இருப்புப்பாதை யாத்ரை. 4. நிலாச் சாப்பாடு.
5. இருப்புப்பாதையில் தங்கும் இடம்.
6. மாலை உலா. 7. மழைக்காலம்.
8. கடற்கரை.
9. ஸூர்யாஸ்தமனம் அல்லது உதயம். [முதலியன.
10. பார்த்த காட்சிகள்:—துறைமுகம், காட்சிக்கூடம்

## போதுக் குறிப்புகள்

(இங்குக் காட்டப்பட்டிருக்கும் குறிப்புகள் எல்லாம் சிற்சில வியாஸ விஷயங்களில் எடுத்து விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.)

| | |
|---|---|
| 1. முகவுரை | 4. கேட்ட விஷயங்கள் |
| 2. வர்ணனை, நோக்கம் | 5. முடிவு—அபிப்பிராயங்கள் முதலியன. |
| 3. பார்த்த விஷயங்கள் | |

முன் பகுதி 215-ம் பக்கம் காவிரி என்ற வியாஸத்தின் பின் அமைத்திருக்க வேண்டிய விஷயம்.

இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1. தாம்பிரபர்ணி | 6. திருப்பதி |
| 2. கங்கை | 7. மலைப்பிராந்தியங்கள் |
| 3. திரிசிரபுரம்; ஸ்ரீரங்கம் | 8. கடல் |
| 4. ஹிமாலயம் | 9. அருவிகள் |
| 5. திருவண்ணாமலை | 10. காடுகள். |

## போதுக்குறிப்புகள்

(இக்குறிப்புகளுள் சிற்சில எல்லா வியாசங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்).

| | |
|---|---|
| 1. பொதுவிஷயங்கள் | 4. சிறப்பு |
| 2. அமைப்பு | 5. கதைகள் |
| 3. உபயோகங்கள் | |

## ப்ளாரென்ஸ் நைடிங்கேல்—
## பரோபகாரமே மதமாகக்கொண்ட சீமாட்டி
## FLORENCE NIGHTINGALE—
## *The Greatest active Benefactress*

பிறப்பும் வளர்ப்பும்.

1820-ம் வருஷம் மேமீ 20வ ப்ளாரேன்ஸ் நைடிங்கேல் என்னும் ஐரோப்பிய சீமாட்டி இத்தாலியாவில் அழகாபுரி என்று பொருள் படும் ப்ளாரேன்ஸ் நகரத்தில் பிறந்தனர்.

இவர் பெற்றோர் ஐசுவர்யவந்தர். தங்கள் ஸ்வதேசமான இங்க்லாந்துவிட்டு ப்ளாரென்ஸ் நகரத்தில் வஸித்து வந்தவர். இவர்கள் தங்கள் குழந்தைக்குப் பிறந்த இடம்பற்றி ப்ளாரென்ஸ் பெயரிட்டு அருமையாய்ச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். இவர்கள் தங்கள் குழந்தைக்கு, மிகுந்த புத்திமதிகளையும் தக்க நீதிகளையும் அடிக்கடி புகட்டி அவைகளுக்குத் தக்கவாறு நடக்கவும் கற்பித்தனர். இம்மாது சிறுமியாயிருக்கும் பொழுதே கஷ்டப் படுபவர்களைக் கண்டால் ஸஹியார். பிறர் படும் வருத்தத்தைத் தன்னாலியன்ற மட்டும் ஆறுதல் செய்ய வேண்டுமென்ற நோக்கம் இந்த அம்மாளுடைய மனது முழுமையும் கவர்ந்து ஆயுள் முடியுமளவும் தங்கி நின்றது. இருபத்திரண்டாவது வயதில் கேய்ஸர் வோர்த்திலுள்ள (Kaiser Worth) கன்னிகா மடஞ் சென்று நோயாளிகளைக் கவனிக்கும் தாய்த்தொழில் வேலை பயின்றார். பிறகு பாரிஸ் மாநகரத்தில் நோய்த் (Sick nursing) தாய்த் தொழில் விஷயமான பலவற்றையும் வயித்திய சாலைகளைப் பராமரித்துச் செவ்வனே நடத்தி வரும் முறைகளையும் நன்றாகக் கற்றறிந்தார். இவர் இங்கிலாந்துசென்று லண்டனிலுள்ள ஹார்லித் தெரு வயித்தியசாலையைச் சீர்திருத்தி நன்றாய் நடத்திவந்தார்.

க்ரிமியா யுத்தத்தில் அவர் செய்கை.

க்ரிமியா யுத்தத்தில் காயப்பட்டும், ஸஹிக்க முடியாத மாரிகாலக் குளிரினாலும் ஆஹாரம் வகையராக்கள் ஸரியாக இல்லாமையினாலுமுண்டான நோய்களினால் பெருங் கஷ்டங்கள் படும், ராணுவ வீரர்களைக் கவனித்துப் பராமரிக்கும் பொருட்டு இம்மாது அநேகம் நோய்த் தாய்களைச் சேர்த்துக் கொண்டு, தங்களுடைய ஸௌகர்யா ஸௌகர்யங்களைக் கொஞ்சமும் பாராமல், க்ர்மியா சென்றார். யுத்தம் நடக்குமிடத்தில் இவர்கள், தங்கள் ஸ்வயசுய ஸுகங்களைக் கொஞ்சமேனும் பாராட்டாமல்நோயாளிகளைக் கவனித்து அவர்களுக்குச் செய்த உபஹாரம் இவ்வளவவ்வளவென்று சொல்லிமுடியாது. இச்செய்கையினால் ப்ளாரேன்ஸ் நைடிங்கேலுக்கும் அவளுடன் சேர்ந்து பாடுபட்டவர்களுக்கும் ப்ரபஞ்சமெங்கும் புகழ்ச்சியும் க்யாதியும் ஏற்பட்டது.

அம்மாதின் பிற்பட்ட பெருங்கார்யங்கள்.

இங்க்லாந்துக்குத் திரும்பி வந்ததன்பேரில் 1856-ம் வருஷத்தில் லண்டன் மாநகரத்தில் பரோபகாரார்த்தமாக நோய்த்தாய் வேலைக்கு மாதர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு ஒரு பெரிய கலாசாலையை இவர் ஸ்தாபித்தார். இதனால் அம்மஹா நகர ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகளுக்குண்டான அநுகூலம் மிகவும் அதிகம். இம்மாது சிரோமணி நோய்த்தாய்த் தொழிலைப்பற்றி ஒருப்ரபந்தமும் ஆஸ்பத்திரியைக் கவனித்துப் பராமரிக்கும் முறையைபபற்றி ஒரு க்ரந்தமும் எழுதியிருக்கிறார். மேலும் இவர் ப்ரேரேபணையின் மூலமாய் ஆஸ்பத்திரிச் சீர்திருத்தமும் ஏற்பட்டது.

இம்மாதின் பெருந்தன்மையும் தயாளகுணமும்.

சாகுமளவும் இம்மங்கையர் திலகம் விவாஹமின்றியே காலங் கழித்து, தன் மனம் முழுமையும் தான் ப்ரீதியுடன் கவனித்து வந்த பரோபகாரத் தொழிலிலேயே சென்று நின்றமை பற்றியே

தான் பழுத்த பழமாகத் தொண்ணூற்றிரண்டு ஆண்டு அளவும் பூர்ண ஆயுளோடிருந்து 1910ஞு ஆகஸ்டுமீ 13உ தேகவ்யோஹமாயினர். இவரது அந்தியக்ரியை அவர்மனோநோக்கப்படி ஆடம்பரமொன்றுமில்லாமல்நடந்தது. அக்காலத்தில் க்ரிமியா யுத்தத்தில்போர்புரிந்தவர்களில் அப்பொழுது உயிர்த்திருக்கின்ற வீரர்களும் எண்ணிறந்த நோய்த்தாய்களும் சென்று மரியாதை செய்தனர். நமது சக்ரவர்த்தினி மேரியும், இன்னும் அநேகசீமாட்டிகளும் வழக்கம் போன்ற அருமையான உபசாரங்களைக் காட்டினர். இதில் நமது மாட்சிமை தங்கிய மேரி மஹாராணியார் அவர் கல்லறை மீது புஷ்பச்செண்டில், நைடிங்கேலின் க்யாதிக்கும் புகழுக்கும் அறிகுறியாய், பரோபகாரமே (The Greatest active Benefactress of the suffering humanity) மதமாகக் கொண்ட சீமாட்டி என்னும் தமிழ்ப்பொருள்படும் ஆங்கில வாக்யமெழுதி யனுப்பினர் என்பதினாலேயே, இம்மாதர்திலகத்தை இங்கிலீஷ்ராஜாங்கத்தார்எவ்வளவோ மதிப்பில் வைத்திருந்தனர் என்பது தெளிவாய்த் தெரிகின்றது. அசேதனமான நாய்க்கு நேரிட்ட கஷ்டத்தை யுணர்ந்து சிகித்ஸைசெய்துகாப்பாற்றின இம்மாது மிருதியும் புகழ்தற்குரியவளேயாம்.

முடிவுரை. இப்பெருமாட்டியின் மனது அவர் காலம் முழுமையும் நோயால் வருந்தும் பிறருக்கு நோய்தீர்த்து ஸுகம் தருவதிலேயே, சென்றது பற்றியே என்றுமழியாப் பெருங்கீர்த்தி பெற்றனர். கைம்மாறு கருதாமல் ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவும் பரோபகாரம் செய்து வருவதற்கு இகத்திலும் பரத்திலும் ஈடொன்றுமில்லையென்னும் உண்மையை இச்சரிதையிலிருந்து நாமறிகிறோம்.

வீ. சுப்ரமண்ய ஐயர்.

# தமிழ்மொழி

## TAMIL LITERATURE

தமிழின் பாகுபாடு.—தமிழ் மொழி, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்னும் மூன்று பிரிவினை யுடையதாய் தொன்றுதொட்டு வழங்கிவரும் பான்மை யுடையது. இயற்றமிழென்பது தமிழர் யாவர் மாட்டும் பொதுமையின் உலகவழக்கு, செய்யுள்வழக்கு என்னும் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமும்செய்யுளுமாகும் நூல்களின்தொகுதியாம். இதனுள் இலக்கியங்களும் இலக்கணங்களும் அடங்கும். சங்கச்செய்யுள்களும், உரைகளும், புராணம் முதலிய ஏனை நூல்களும் இயற்றமிழேயாம். இயற்றமிழ் ஏனைய இசைத்தமிழ் நாடகத்தமிழ் ஆகிய இரண்டற்கும் முன்னர்த் தோன்றினமைப்பற்றி முதற்கண் வைக்கப்பட்டதாகும். ஏனைய இரண்டும் இயற்றமிழின்றி இயங்கும் வன்மை யுடையனவல்ல.

இசைத்தமிழென்பது பண்ணொடு கலந்து தாளத்துடன் கூடி இயங்கும் தமிழ்ப்பாட்டுக்களானியன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூலின்தொகுதிகளாம். குழல், யாழ், முழவு முதலிய இசைக்கருவிகளின் பெயர்களும் செவ்வழி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி முதலிய பண்ணின் பெயர்களும், இசைத்தமிழ் தமிழர்கட்கு அநாதியாய் உண்டென்பதை உணர்த்தும்.

நாடகத்தமிழென்பது நூலாராய்தற்கு அவகாசமில்லாத பணியாளர்களும், படிக்கத்தெரியாதவர்களும் உற்றுநோக்கி நல்லுணர்வை யடையுமாறு வகுக்கப்பட்டது. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும் முன்னைய இரண்டும் கேள்வி யின்பம் மட்டுமே பயப்பனவாய் நின்றன. நாடகத்தமிழோ கேள்வியின்பத்தோடு காட்சி யின்பமும் பயக்கின்றது. நாடகம் என்னும்

சொல் வடமொழியாதலை நோக்கித் தமிழர்கள் ஆரியரோடு கலந்த பின்னரே நாடகத்தமிழ் உண்டாயிருத்தல் வேண்டுமென்பது சிலர் கொள்கை. அக்கொள்கை தவறுடைத்தென்பதைப் பண்டைக்காலந்தொட்டுத் தமிழர்க்குரிய கூத்தின் விகற்பங்களை விரித்துக் கூறும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையே வலியுறுத்தும்.

தமிழ் மொழியின் நெடுங்கணக்கு.—தமிழ் மொழியின் நெடுங்கணக்கு மிகவும் அழகுபெற அமைந்துளது. ஏனைய பாஷையிலுள்ள எழுத்துக்களைப் போலல்லாமல் வலம்படச் சுழித்தெழுதும் மாண்பு இத்தமிழ் மொழியொன்றற்கே உரிமையானது. ஒரே எழுத்துக்குப் பல ஒலியில்லை. ஓரொலிக்குப் பலவெழுத்து வேண்டா. கூட்டெழுத்துக்கள் கிடையா. "மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி" என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரச் சூத்திரமும் இதனை வலியுறுத்தும். எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. மொழிக்கு இறுதியில் எல்லாஎழுத்துக்களும் வாரா. எல்லா எழுத்துக்களும் மொழிக்கு இடையில் மயங்கா.

தமிழிலக்கம்—தமிழ்ப்பாஷையே அநேக பாஷைகட்கு இலக்கங் கொடுத்ததென்பது சிலர் கொள்கை. தமிழ்நாடும் அதன் மொழியும் அநேகம் நூற்றாண்டுகட்கு முன்னரே சிறப்பு வாய்ந்திருந்தமையின் எந்நாட்டினரும் தந்நாட்டிற்கு வேண்டும் பொருள்களை எல்லாம் தென்னாட்டினின்றும் கொள்வாராயினர். வாணிகத்தின் பொருட்டும் இராஜசேவையின் பொருட்டும் யவனர் (Greeks) முதலிய தூரதேசவாசிகள் வந்து தென்னாட்டிற் குடிகொண்டனர். இதனை

"பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வைப்பும்"

என்னுஞ் சிலப்பதிகாரக் கூற்றான் பெறுதும். வாணிகம் காரணமாக வந்து குடிகொண்ட யவனர் தாம் கொள்ளவேண்டிய பண்டங்களை எல்லாம் நாளடைவில் சேர்த்துப் பொதிசெய்து அப்பொதிகளின்மீது தம் பெயரையும் எண்ணையும் இடுவித்துப் பண்டசாலைகளிலே அடுக்கிட்டுப் பின்னர் மரக்கலங்கள் மீளும்போது அவற்றிடை ஏற்றிக்கொண்டு செல்லும் வழக்கம் பூண்டிருந்தனர். இவ்வுண்மையை

வம்ப மாக்கடம் பெயர்பொ றித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணும் பலபொதி
கடைமுக வாயிலிற் கருந்தாழ்க் காவலும்

என்னும் சிலப்பதிகாரச் செய்யுள் வலியுறுத்தாநிற்கும். வாணிகம்முதலிய பலமுயற்சித்துறைகளில் தமிழர் வல்லுநராய் இருந்தமையின் யவனர் முதலியோர் வந்து வியாபாரஞ் செய்யலாயினர். தமிழர் யவனரோடும் பிறரோடும் வியாபாரம்முதலியசெய்து பொருளீட்டிவாழ அவர்க்கு எண்ணுக்குறி, அளவுக்குறி, நிறைக்குறி, முதலியன இன்றியமையாதனவாயின. நமது கைவிரல்களே எண்ணுக்குறிக்கு மூலாதாரம். ஒன்றன்குறி ஒருவிரல், இரண்டன் குறி இருவிரல், மூன்றன்குறி மூவிரல் ஏனையவும் இவ்வாறேயாம். வாணிபஞ் செய்வதற்குமுக்கியமாகிய இலக்கம் முதலியவற்றின் பெயர்களை யவனரும் பிறரும் தத்தம் தேயங்கட்குக் கொண்டு சென்றனர். இலக்கக் குறிகளின் பெயர்களெல்லாம் தமிழ் மொழியே. இதுவே தமிழர்கள் அநாதியாய் இலக்கக் குறியையுடையராயிருந்தனர் என்பதற்குப் போதிய சான்றாம். தமிழ் மொழியில் கீழ்வாய் இலக்கமும் உண்டு. அவற்றின் பெயர்களாய காணி, கால், அரை, முக்கால் என்னும் மொழிகளெல்லாம் தமிழ்மொழியே. தொண்ணூற்றொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களின் பெயரெல்லாம் தமிழ்ப்பெயரே. இவ்வெண்கள் பண்டைத்தமிழ்ச் செய்யுட்களின் கண்ணும் எடுத்தாளப்பட்டிருப்பதை "எட்டு

மிரண்டும் இனிதறிகின்றிலர்" என்னும் திருமந்திரச் செய்யுளடி விளக்கும். தமிழ் இலக்கமொழியின் மரூஉவே தெலுங்கு மொழியின் இலக்கம் என்பது சிறிது உய்த்து நோக்குவோர்க்குப் புலப்படாமற் போகாது. ஒன்று என்பதை "ஒகடி" என்றும், இரண்டு என்பதை "ரெண்டு" என்றும் மூன்று என்பதை "மூடு" என்றும் வழங்குவதே போதிய சான்றாம். ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலன் என்னும் முகத்தலளவையும்; சாண், அடி, முழம் என்னும் நீட்டலளவையும்; பலம், வீசை, மணங்கு என்னும் எடுத்தலளவையும் தனித்தமிழே.

தமிழிலக்கணம்.—தமிழ்ப் பாஷை அநேக காலங்கட்குமுன் இவ்விந்தியநாடு முழுவதும் பரவியிருந்ததெனினும் அதற்கு முதன் முதல் இலக்கணம் வகுத்தார் அகத்தியனாரே. அகத்தியனார்க்கு முன்னரே சில இலக்கண நூல்கள் பரவியிருந்தனவென்றும் அவை யாது காரணம்பற்றியோ இறந்தொழிந்தனவென்றும் சிலர் கூறுவர். அகத்தியனார் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிற்கும் இலக்கணம் வகுத்தார். அந்நூலின் சிற்சிலசூத்திரங்களே ஆங்காங்குக் காணக்கிடைக்கின்றனவேயன்றி முழுவதும் காண்பதரிதாகிவிட்டது. அகத்தியனார் முதன் மாணாக்கராகிய திரணதூமாக்கினியென்னும் இயற்பெயரையுடைய தொல்காப்பியனார் இயற்றிய இலக்கணமே நின்று நிலவுகின்றது. அவ்விலக்கண நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றதிகாரங்களை யுடையது எனினும் ஐவகை இலக்கணங்களின் எஞ்சியவாய யாப்பையும் அணியையும் செய்யுளியலினும் உவமவியலினும் அகப்படுத்திக் கூறினார். இதற்குப்பின் தோன்றிய இலக்கண நூல்கள் மிகப் பல; அவைகளில் பல எழுத்தையும் சொல்லையும் கூறுகின்றன. சில பொருளையே கூறின, சில யாப்பொன்றையே கூறின, சில அணியொன்றையே விளக்கின. தமிழிற்கென இலக்கண நூல் வேறில்லை எனவும் அது வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியதெனவும் சிலர் கூறுநிற்பர். அற்றன்று. "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட் படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறம் என்னும்பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி, முதலிய திணைப்பாகு பாடுகளும் அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணங்களும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று வடமொழி தென்மொழியாகிய இருமொழிக்கடலையும் நிலைகண்டுணர்ந்த ஆசிரியர் சிவஞானயோகிகளின் அருள்வாக்கே தமிழ் இலக்கணத்தின் பெருமையை நன்கு விளக்கும். தமிழ் இலக்கணம் கூறுவான் போந்த நன்னூலாசிரியராம் பவணந்தி முனிவரும் பதவியலினும் மெய்யீற்றுப் புணரியலினும் வட சொல்லாக்கமும் வடசொற் சந்தியும் அழகுபெற விதந்தது ஏனையவெல்லாம் தமிழ் மொழிக்கே உரியன என்பதை வலியுறுத்தும். பொருளதிகாரத்திற் கூறிய அகப்பொருளும் புறப்பொருளும் அதன் துறைகளும் தமிழிற்குரிய சிறப்பு விஷயங்களாம். இவற்றினின்றும் ஆதியிலிருந்த தமிழர்களது ஒழுக்கநிலை இத்தன்மைத்தென்பது நன்கு புலப்படும்.

தமிழ் என்பதன் சொற்பொருள். — தமிழ் என்னுஞ் சொற்கு யாது பொருள்? திராவிடம் என்னுஞ் சொல் திரமிளம் என்றாய்த் திரமிளம் என்பது தமிழ் எனத் திரிந்தது என்பர் ஒரு சாரார். தன் பெயரே பிறபாஷையின் பெயராக்கொண்டிருக்கும் பாஷை எவ்வாறு தனித்தியங்கும் ஆற்றலுடையது என்றும் ஆசங்கை நிகழுமாகலானும் மேற்கூறிப் போந்தவைக

ளால் தமிழ் மொழி பிறபாஷைகளின் உதவி யின்றித் தனித்தியங்கும் ஆற்ற லுடைமை பெறப்படுதலானும் அது பொருளென்பது யாண்டைய தென்க. ஒரு சாரார் தமிழ் என் னுஞ் சொல் (இகழ், உமிழ், கமழ், எனழகரப் பேறு பெற்ற சொற்கள்போல்) தனிமைப் பொருள் குறித்திடும் தமியென்னும் வினையடி யாற் பிறந்து வினை முதற் பொருளுணர்த்திய் விகுதி குன்றி ழகரம் விரிந்து தனக்கிணை யில்லா மொழி என்னும் பொருள் பயக்கும் என்று கூறி முடிப்பர். இதுவும் அத்துணைச் சிறப்பாதல் கண்டிலம். தமிழு என்னுஞ் சொல் தமிழ் என உகரம் புணர்ந்து கெட்டு நின்ற தோர் மொழியாம். இம்மொழி தன் பெய ரானே தனக்குரிய முதலெழுத்துக்கள் இன்ன வென்பதைக் குறிப்பான் உய்த்துணர நின்ற அருமை பெரிதும் பாராட்டற்பாலது. என்னை? தகர மகர ழகரங்கள் அகர இகர உகரங்களோடு இயைத்தமிழு என்னுஞ்சொற் பிறந்தமையான் மெய்யெழுத்துக்கள்மூவகைத் தென்பதும், சிறப்பு நோக்கித் தகரம் முன் னரும் அதற்கினமொத்த மகரம் அதற்குப் பின்னரும், ழகரம் அவ்விரண்டிற்குப் பின் னரும் நிற்றலின் அவை வல்லினம், மெல்லி னம், இடையினம் என்னும் மூன்று பிரிவினை யுடைய தென்பதூஉம் இம்மூன்று மெய் யெழுத்துக்களும் உயிரோடியைந்து நிற்றலின் மெய்கள் தனித்தியங்கும் ஆற்ற லுடையன வல்லவென்பதூஉம் பெற்றும். இனி உயி ரெழுத்துக்களில் குற்றெழுத்தின் விகாரமே நெட்டெழுத்தாகலானும், குற்றெழுத்துள்ளும் அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத் திசைத்து நாமடங்கல்போல் நிற்பது எகா மும், அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத் திசைத்து அவ்வாறு நிற்பது ஒகரமுமாகலா னும், இனமில்லாத ஐகார ஔகாரங்கள் "அம்முனிகரம் யகரமென்றிவை எய்தின் ஐயொத்திசைக்கும், அவ்வோடுவ்வும் வவ்வும் ஔவோரன்ன" என்ப ஆகலானும் அவற்றை யொழித்து ஒழிந்தன வாகிய தனித்தியங் கும் சிறப்பு வாய்ந்த அகர இகர உகரங் களின் பிறப்பிட முறையே முறையாக அமைந்து கிடக்க ஏனையவற்றை உய்த்துணர நின்றமைகாண்க. இத்துணையும் கூறியவாற்றால் தமிழ் என்னுஞ் சொல் தன்பெயர் கூறு முகத் தானே தனக்குரிய எழுத்துக்களை உணர்த் தினமை பெரிதும் வியக்கற்பாலது. விரிவஞ்சி இம்மட்டில் நிறுத்தினும்.

தமிழ் என்னுஞ்சொல் இனிமை என்னும் பண்புணர்த்தும். அது "மீனுங்கொடியும், விரிதிணையைந்தும், தேனுறைதமிழும் திரு வுறை கூடலும் மணத்தலின் மதிக்குலமன்ன, வணுகியும்" என்னும் கல்லாடத்தினாலும் "தமிழ் தழீஇய சாயலவர்தங்கு மலர்த்தூநீர்- உமிழ்காகம் ஏந்த உரவோனமர்ந்து பூசி" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில் தமிழ் தழீ இய சாயலவர் என்பதற்கு நச்சினார்க்கினியர் இனிமை தழுவிய சாயலை உடையவர் என்று உரைத்த பொருளினாலும் "குழல்வண்டு தமி ழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என்னும் இராமாவதாரச் செய்யுளினாலும் இனிது விளங்கும். தமிழ் என்னுந் தருமவாசகம் தருமி மேல் நின்றது; முருக என்னும் பண்பு முரு கன் என்னும் பண்பிமேல் நின்றவாறு போல்.

வடமொழிக் கலப்பு.—உலோக கால மனி தர்களையும் அவர்களை வென்ற நாகர்களையும் கீழ்ப்படுத்தி இவ்விந்தியாவைக் கைக்கொண் டவர்கள் தமிழர்கள் என்பது மேலே கூறிப் போந்தாம். இவர்கள் இவ்வாறிருக்க வட மேற்கே அநேக காவதங்கட்கு அப்புறமுள்ள தும் ஐரோப்பாக் கண்டத்தினொருபகுதியு மாகிய "ஸ்காந்திநேவியம்" என்ற இடத்தி னின்றும் ஆரியர் என்ற ஒரு சாதியார் புறப் பட்டு நாலாபக்கங்களிலும் சென்று சேர்ந்தனர், அவர்கட்குள் ஒரு பிரிவினர் மத்திய ஆசியா

விலுள்ள துருக்கிஸ்தானம் என்ற இடத்திற் றங்கினர். இவ்விடத்தில் தங்கிய ஆரியர்களே காபூல் வழியாக இந்தியாவில்பிரவேசித்தனர். இவர்கள்தான் தமிழர்களை வென்றவர்கள். இவர்கள் பாஷை ஸம்ஸ்கிருதம். ஆரியரும்தமிழரும் ஒரே நாட்டின்கண்ணிருந்து ஒருங்கு வாழ வேண்டியது அவசியமாயிருந்தமையால் ஆரியர் தமிழும் தமிழர் ஸமஸ்கிருதமும் பயில்வாராயினர். இவ்விரு திறத்தினரும் தம்முள் ஒத்து நடந்தமையின் அவ்விருவர் பாஷைகளும் தமக்குள் கலப்பனவாயின. வடமொழியாளர் தங்களுடைய சாமர்த்தியத்தினால் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர். தமிழருட் சாமானிய சனங்கள் அவ்வாரியரது விருப்பத்திற்கேற்ப இணங்கி நடந்தனர்கள். இவர்கள் வடமொழிச் சொற்கள் பலவற்றை மேற்கொண்டு வழங்கப் புகுந்தமையின் நாளடைவில் வடமொழிச் சொற்கள் தமிழ்ப்பாஷையின்கண் வேரூன்றிவிட்டன. தமிழ் மொழியானது வந்த விருந்தினர்களை அன்புடன் ஏற்றுக்கூடிக் குலாவும் பெரியோர் போல் ஆரியத்தோடு உறவுகொண்டு கலந்து இற்றைக்கும் இருவகை வழக்கறாமல் நிலவுகின்றது. ஆரியம் காலகதியில் பேச்சு வழக்கற்று அழிந்துபட்டது. பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்கில் மட்டிலிருக்கும் பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷை எவ்வாறு கூடி இயங்கும். இதுவே ஆரிய மொழிகள் தமிழ்மொழியில் வழங்குதற்கும் தமிழ்மொழிகள் ஆரியத்தோடு மருவாமைக்கும் காரணமாம்.

(தொடரும்.)

சே. சிவஞானம் பிள்ளை.

## சான்றோரினத்திரு

**BE IN THE COMPANY OF THE WISE**

சான்றோரினத்திருஎன்ற ஔவையின் வாக்கு பெரியாரைத் துணைக்கோள் என்ற பொருள் தரும். பெரியவர்கள் ஸங்கத்தில் அல்லது கூட்டத்தில் எவருமிருக்கப் பிரியப்படவேண்டியது,பெரியவர்களையே எக்கார்யத்திலும் துணையாகக்கொண்டு கார்யத்தை முடித்துக்கொள்ள வெண்டியது, என்பது இதன் பொருள். சாஸ்த்ர பரிசீலனங்களும் உலகத்திய விசேஷ அநுபோகமுமுள்ள பெரியவர்கள்தான் ஸாதுக்கள். ஸாத்வீக, தாமஸ, ராஜஸ, குணங்களில் உத்க்ருஷ்டமானதும் உன்னதமானதுமான ஸத்குணம் கொண்டவரே ஸாதுக்களெனப்படுவார். இப்பேர்ப்பட்டஸாதுக்களின் ஸ்நேஹமும், அவர்களின் ஸல்லாபமும் மிகவும் இன்பம் தரத்தக்கது. அதுவேபெரும் ஸ்வர்க்காநுபவம். இக்கருத்து அடக்கியே,"

"மாதுறக்க மென்றுரைத்தன் மாந்தரீர் கேண்மினோ
சாதுக்கள் கூட்டுறவு தான்.

என்று கூறியுள்ளார்போலும். வேதாந்த பரிசீலனங்களும், தத்வ விசாரங்களும் செய்யும் பெரியோரை அடைந்தோர் தம் மனதும் தேஜஸும் பரிசுத்த முள்ளவராகிறார்கள். பொன்மலையில் சென்ற காகம் பொன்மயமாக மாறுவதுபோல், ப்ரங்ககீட நியாயத்தின் வண்ணம் சான்றோரை யணுகி சுச்ரூஷை செய்து தந்யராக விரும்பிய கீழோர் தந்யராகவே ஆகிக் கடைசியில் முக்திபெறுவர் என்பதற்கு அநேக உதாரணங்கள் நம் புராதனக் கிரந்தங்களில் காணப்படுகின்றன. பெரியோர்களின் கடாக்ஷம் பெற்று நற்கதி யடைந்த பெரியோர்களில் வால்மீகமஹரிஷி ஒருவராவர்.

ப்ராஹ்மண ஜாதியிலே பிறந்து பூர்வகர்ம சேஷத்தினால் சூத்ர ஸஹவாஸம் மிகுதியும் பெற்று, சூத்ரமாதினை மணம் புரிந்து, வனத்தில் கிராதத் தொழிலையே புரிந்து, கடைசியில்

ஸப்தரிஷிகளின் கடாக்ஷத்தினாலும், உபதேசத்தினாலும், வால்மீகராகி, உலகம் புகழும் ராமாயண கிரந்தகர்த்தாவாக ஆனது யாவருமறிந்ததே.

தண்டகவனத்தில், மதங்கரிஷி ஸ்நானத்திற்குப் போய்த் திரும்பிவருகையில் யாருமில்லாத அநாதையான வேடஸ்திரீ ஒருத்தி அவர் கண்களில் தென்பட்டாள். மதங்கரிஷியைப் பார்த்த வேடஸ்திரீக்கு உடனே ஞானோதயம் உண்டாகி, தான் அதுவரையில் செய்த துஷ்க்ருத்யங்களை அறவே விடவேண்டிய ஞாபகம் வந்துவிட்டது. அப்படி விட்டுவிட்டு, மஹாத்மாவாகிய மதங்கரிஷியை யடைய வேண்டும், அவரிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற ஞாபகம் உண்டாகி அவருடைய சிச்ரூஷைக்குரிய காரியங்களை வெகு ஜாக்ரதையாய்ச் செய்வதென்னும் கொள்கைமேற்கொண்டு, ஆச்ரமத்திற்கு வேண்டிய ஸமித்துக்களை ஒடித்து வெகுதூரத்தில் ஆச்ரம வாஸிகளுக்குத் தெரியும்படியாய் வைத்துவிட்டுப் போவாள். ஆச்ரமமிருந்து ஸ்நானகட்டத்திற்குப்போகும்வழியைப் பஞ்சபஞ்ச உஷத்காலத்திற்கு முன்பே வந்து சுத்தி செய்துபோவாள். இக்கைங்கர்ய விஷயங்கள் நெடுநாளாக மஹரிஷிக்குத்தெரியாதிருந்து, கடைசியில் சிஷ்யர்களைக்கொண்டு விடியற்காலத்தில் கண்டு பிடிக்கச் சொன்னார். வேடஸ்த்ரீ விடியற்கால வேலைசெய்து கொண்டிருக்கும் வேளையில் சிஷ்பர்கள் அவளைப்பிடிக்க, ரிஷிசாபம் பொல்லாது என்ன நேரிடுமோவென அவள் பயப்பட, சிஷ்யர்கள் அவளைத்தேற்றி, அவளுக்கு மங்களமே யுண்டாகும் என்று சொல்லி, ரிஷியினிடம் அழைத்துப்போய் ஸங்கதி தெரிவிக்க, இதே கைங்கர்யம் செய்து கடைசியில் முக்தி பெறுவை யென்று சபரிநாமம் சூட்டினார். இப்படியாக ஞானசக்ஷுஸுக்கு இலக்கான சபரி மதங்கர் ஸ்வர்க்கத்திற்குப் போனபிறகு அவரது ஆச்ரமத்திலிருந்து, ஸ்ரீராமர் வருகைக்குக் காத்திருந்து அவருக்குத் தான் ருசி பார்த்து வைத்திருந்த அருமருந்தன்ன பழங்களைக் கொடுத்துப் புசிக்கப்பண்ணி, பின்னர் உத்தம கதி பெற்றாள் என்னப்படுகிற கதை ஞாபகத்தில் கொணரத் தக்கது.

தும்புரு நாரதர், கலக ப்ரிய நாரதர், பழைய காலமுதற்கொண்டே பூலோகப் பத்திரிகையாயிருந்துவரும் நாரதபகவான் ப்ரம்மனின் மானஸீக புத்ரர். இவர் தனது பூர்வ ஜன்மத்தில் * தாஸி புத்ரனும். மஹநீயர்களான ஸாதுக்கள் ஒருகால் † சாதுர் மாஸ வாஸத்திற்காக ஓரிடத்தில் கூடியிருக்க ஆங்கு ஒருத்தி மடம் கூட்டிக்கொண்டிருந்தாள். இவ்வேலைக்காரியின் மகன் ஸாதுக்கள் கூடியிருக்குமிடத்திற்கு வெகு தூரத்தில் நிற்கிறதும், அவர் பேசும் விஷயங்களை உற்றுக் கேட்கிறதும், அவர் குற்றேவல்களைச் செய்வதும் பார்த்து, அவர்கள் இப்பையன் மீது மிகவும் ப்ரியம் கொண்டார்கள். இதை அவர்கள் மனதிலேயே வைத்திருந்து அம்மடத்தைவிட்டு அவர்கள் வேறிடம் ப்ரயாணப் படும்பொழுது இப்பையனைக் கூப்பிட்டுச் சில புத்திமதிகளையும் கூறி உபதேசமும் செய்துபோயினர். இவ்வுபதேசம் மேற்கொண்ட பையன், நெடுநாள் அவ்வுபதேச மந்திரத்தை அநவரதமும் தியானித்து பல யுகங்கள் கழித்து ப்ரம்மனின் மானஸீக புத்ரனையவதரித்து, உலகமும், ஒரு சேர தேவர்களும் புகழும் தேவாநு கூலியாகிய நாரத பகவானாக அவதரித்தாரென்றால் ஸத்ஸங்கத்தின் மஹிமை இப்படிப்பட்டதென எவரும் சொல்லாமலே யறிய இடமாகின்றது. சேரிடமறிந்துசேர் என்று சொல்லியதும் இது பற்றியே என்னலாம். நல்லவரை யடுத்துச் செய்யும்

* தாஸி=சூத்ரஸ்த்ரீ. தாஸன்=சூத்ரன். முப்தன்=வைசியன். வர்மன்=க்ஷத்திரியன். சர்மன்=ப்ராம்மணன் எனமுறையே காண்க.

† சாதுர்மாஸம்=4 மாஸம். இங்கு மாஸம் 15 நாட்கள்

காரியம் பலிதமாகாது போகாது; அடுப்பங் கரைக் காத்தவன், அரண்மனை காத்தவன், பெரியாரைக்காத்தவன் முதலியவர்கள் எந்நாளும் நன்மையையே பெறுவர் என்பது மேற்கூறிய கதைகள் நன்கு விளக்கும். "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பதும், "நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க, நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே-நல்லார், குணங்க ளுரைப்பதுவு நன்றே அவரோடு, இணங்கி யிருப்பதுவு நன்று" என்னும் முதுரைவாக்யமும் இதுபற்றியே எழுந்தது போலும். ஸாதுஸங்கத்தினால் மோக்ஷமும் கிடைக்கிற தென்பதைக் கூட்டவேண்டி ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யஸ்வாமிகள் தமது பஜகோவிந்த ஸ்தோத்ரத்தில்.—

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் நிர்மோஹத்வே நிச்சல தத்வம் நிச்சலதத்வே ஜீவன் முக்திஹி" என்று கூறியிருக்கின்றனர்.

வீ. சுப்ரமண்ய ஐயர்.

இராமநாதபுரம் ஜில்லா, பாலயம் பட்டி வித்தியா காக்ஷி சாலை.—நாளது வருஷம் எப்ரல் மாதம் 6, 7, 8 தேதிகளில், பாலயம் பட்டி பாலசுப்பிரமணிய பிரதம வித்தியாசாலை உபாத்திமைச் சங்கத்தின் சம்பந்தமாய் ஒரு வித்தியாகாக்ஷி சாலை திறக்கப்பட்டு நடத்தப்படும். ராமநாதபுரம் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜ் துரையவர்கள் அக்ராஸனம் வகிப்பார்கள். 7-வது ஸர்க்கில், ஸ்கூல் இன்ஸ்பெக்டர் R. G. க்ரீவ் துரையவர்கள் காக்ஷி சாலையைத் திறப்பதற்கு முந்தி ஓர் உபந்யாஸம் செய்வார். இக்காக்ஷிசாலை நன்று நிறைவேறும்பொருட்டு எல்லா கனவான்களுடைய உதவியும் வேண்டியிருக்கிறது. கனவான்கள் காக்ஷிப்பொருள்களைத் தங்களால் கூடிய அளவு 1911ஞ மார்ச்சுமீ 25உக்குள்ளாக அனுப்பல் வேண்டும் என்று ஷை உபாத்திமைச் சங்கத்தின் அக்ராசனாதிபதியும், திருச்சுளி ரேஞ்சு ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டருமான ம-ா-ா-ஸ்ரீ ப. பார்த்தசாரதி நாயகரவர்கள் வேண்டுகிறார்.

## II சூரியன்

### THE SUN

203-ம் பக்கத் தொடர்ச்சி

சென்ற மாதத்து 'போதினி' யில், எப்படி ஒரு நெருப்பண்டை நெருங்க நெருங்க உஷ்ணம் அதிகப்படுமோ, அதே மாதிரி சூரியனை நெருங்கினால் சூடு அதிகரிக்குமென்று சொன்னோம்.

அதைப் படித்த ஒரு புத்திசாலி பையன் ஒருவன், "நீங்கள் சொல்வது அனுபவத்துக்கு ஒத்திருக்க வில்லையே. கோடை காலத்தில் தாழ்ந்த தேசங்களில் இருப்பவர்கள் சூரிய வெப்பம் தாங்கமாட்டாமல் உயர்ந்த மலைகளைத் தேடிச் செல்லுகிறார்களே. நம் நாட்டார்கள் சித்திரை, வைகாசி மாதங்களில் நீலகிரி கொடைக்கானல் முதலான மலைப்பிரதேசங்களுக்குப் போய் வஸிக்கவில்லையா? மேலே செல்லச் செல்லக் குளிர்ச்சியாயிருப்பதனா லல்லவா அப்படிச் செய்கிறார்கள். அதாவது பகலில் சூரியன் ஆகாயத்தில் பிரகாசிக்கும் போது, நாம் மலைமேலேறி அதை நெருங்க சூடு அதிகரிக்காமல் அதற்கு விரோதமாய் குளிரல்லவா அதிகமாகிறது. இதற்கெப்படிச் சமாதானம்" என்று கேட்டான். இது ஒரு யுக்தியான ஆக்ஷேபம் தான். ஆனால் அந்தப் பையன் ஒரு விஷயத்தை மறந்து விட்டான். நீங்கள் சாவதானமாகக் கவனியுங்கள்.

நன்றாய்க் காய்ச்சிச் சூடுண்ட ஒரு இரும்புக்குண்டைக் கம்பளி, கோணி, துணிகள், இவைகளால் சுற்றி வைத்தால் அந்த குண்டு வெகுநேரம் சூடாறாமல் இருக்கும். போர்வைகள் குறைந்தால் சீக்ரமாக ஆறிவிடும். அதேமாதிரி நாமும் அநேக போர்வை போர்த்துக்கொண்டால், நமது சரீர உஷ்ணம் நம்மைச்சுற்றிலுமுள்ள ஆகாயத்தில் பரவி ஓடிவிடாமல் சரீரத்திலேயே தங்கிநிற்கும். இதற்கும் முன்சொன்ன விஷயத்திற்கும் என்ன

சம்பந்தமென்று கேட்பீர்கள். கொஞ்சம் யோஜித்துப் பார்த்தால் தெளிவாகும். நாம் வசிக்கும் பூமிக்கும் அதனிடத்தில் சூரியனிடத்திலிருந்து வந்துசேரும் உஷ்ணத்தைச் சீக்கிரத்தில் வெளியே ஓடிவிடாமல் கார்ப்பதற்கு ஒரு போர்வையைக் கடவுள் தயைகூர்ந்து அளித்திருக்கிறார். அந்தப் போர்வை என்னென்று நினைக்கிறீர்கள்? நம்மைச் சுற்றிலும் வெகு மைல் தூரம் உயர்ந்து பூமி முழுமையும் பரவி நிற்கும் வாயுமண்டலமே. எங்கும் சம உயரமாய் பரவி யிருக்கும் இந்தத் தடித்த போர்வை, நாம் பூமி தலத்தை (Surface) விட்டு மேலே செல்லச் செல்ல, உயரத்தில் குறைந்து விடுமல்லவா. ஆகையால் சம நிலத்தில் இருப்பவர்களைச் சுற்றி இந்த ஆகாயப்போர்வையானது எவ்வளவு தடிப்பாயிருக்கிறதோ, அவ்வளவு தடிப்பாய் மலை முதலான உயர்ந்த இடங்களில் இருப்பவர்களுக்கு இராது. இது பின் வரும் சித்திரத்தில் தெளிவாய்க் காணலாம்.




இதில் B-என்னு மிடத்தில் இருப்பவனைவிட A-இடத்தில் இருப்பவன் மேலிருக்கும் போர்வை அதிகம். அதனால் A-இடத்தில் நாம் பெறும் சூரியோஷ்ணம், தடித்த போர்வையால் கார்க்கப்பட்டு வெகு நேரம் தங்கி நிற்கிறது. B-இடத்தில் வந்து சேரும் உஷ்ணம், அந்தப் பிரதேசத்தில் அவ்வளவு தடித்த போர்வை யில்லாததனால் சீக்ரம் பூமியை விட்டு அகன்று ஓடிவிடுகிறது. மேலும் நமக்கும் சூரியனுக்கும் சுமார் ஒன்பதுகோடி மைலென்று சொன்னோமல்லவா? இவ்வுலகிலுள்ள மலைகளில் 5-மைலுயரத்துக்கு மேல் ஒன்றும் கிடையாது. அப்படிப்பட்ட உயர்ந்த மலைகளில் ஏறினால் கூட நாம் சூரியனை நெருங்கி செல்லும் தூரம் மகாகொஞ்சம். நீலகிரி முதலான மலைகளைப்பற்றி சொல்லவேண்டுமா.

இப்படிப்பட்ட மலைகளிலேறி, நாம் சூரியனை நெருங்குவதனால் உண்டாகும் உஷ்ணலாபம் உணரக்கூட முடியாதபடி அவ்வளவு சுவல்பம். அதிநுட்பமான உஷ்ணபரீக்ஷை கருவி (Thermometer) கூட அந்த லாபத்தைக் காட்ட முடியாது. ஆனால் மலை யேறுவதில் போர்வை நஷ்டத்தினாலுண்டாகும் உஷ்ணநஷ்டமோ, இந்த ஸ்வல்பலாபத்தை விட மிக அதிகம். ஆதலால் தான் சமதலத்திலிருப்பவர்களைவிட மலைமேலிருப்பவர்கள் அதிகக் குளிர்ச்சியை அநுபவித்துக் கோடைக்காலங்களில் ஆநந்திக்கிறார்கள்.

இது மாத்திரமல்ல. சுமார் மூன்றுமைல் உயரத்துக்குமேல் தண்ணீரே உறைந்து பனிக்கட்டியாய் போகும்படி குளிர் அவ்வளவு அதிகமாயிருக்கும். இந்த உயரத்துக்கு மேலுள்ள மலைகளின் சிகரங்கள் எப்போதும் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கின்றன.

நம்மைப் படைத்த கடவுளுக்கும் நம்மீதிருக்கும் அபார கருணையைப் பாருங்கள். நாம் குளிரால் விறைத்து நாசமடையாமலிருப்பதற்குச் சூரியோஷ்ணத்தையும் தந்து, அந்த உஷ்ணம் நம்மைவிட்டுச் சீக்கிரம் அகன்றுவிடாமலிருப்பதற்கு தகுந்த போர்வையையும் அளித்திருக்கிறார். கடவுளின் கருணை சூரியன் மூலமாய் இன்னம் அநேக விஷயங்களில் வெளியாகிறது.

உயர்ந்த மலைகளின் சிகரங்களில் கிடக்கும் பனிக்கட்டிகளைத் தன் உஷ்ணத்தினால் உருக்கித் தண்ணீராக்கி ஆறுகளை நிறைத்து நமக்கு ஸ்நானம், பானம், பயிர்த்தொழில் முதலான காரியங்களை நடத்தி வருகிறது சூரியனே,

மலையில்லாப் பிரதேசங்கள் செழிக்க, சமுத்திரம், ஏரி முதலான ஜலாசயங்களினின்று தன் உஷ்ண கிரணங்களால் நீரை ஆவியாக ஆகாயத்தில் கிளப்பி மேகங்களை உண்டு பண்ணி எங்கும் மழையை வர்ஷித்து எல்லாப்பிராணிகளுக்கும் விருக்ஷங்களுக்கும் உண வூட்டி வளர்க்கிறதும் சூரியனே.

மகா சமுத்திரங்களால் பிரிக்கப்பட்டிருக்கிற தேசங்களை ஒரே தேசமாக்கி மனிதர்கள், சாமான்கள் முதலியவைகளின் போக்கு வரவுக்கு ஸாதனமான கப்பல்களை ஓட்டியும், மேகங்களைப் பலதேசங்களுக்கு துரத்தி மழை பெய்யச்செய்தும், ஜனமடர்ந்த பட்டினங்களிலுள்ள அசுத்த வாயுவை கலைத்தும், உஷ்ணத்தால் ஆயாஸப்பட்டு தவிக்கும் பிராணிகளுக்கு ஆனந்த முண்டாகும்படியும் வீசும் காற்று சூரியனின் உஷ்ணத்தினுல் தான் உண்டாகிறது. சூரியோஷ்ணமும் வெளிச்சமு மில்லாவிட்டால் விருக்ஷங்கள் விருத்தியாகா. ஒளி, உஷ்ணம் இவைகளின் பலத்தினுல் தான் அவைகள் ஆகாயத்திலிருக்கும் உணவை இலைகளின் வழியாய் உட்கொண்டு வளர்கின்றன. செடி, கொடி, விருக்ஷங்கள் இவைகள் மிருகங்களுக்கும் பூச்சி பறவை முதலியவற்றிற்கும் ஆகாரத்தைக் கொடுக்கின்றன. இலை, கறிகாய்கள், மாம்ஸம் முதலியவைகளைக் கொண்டு மனிதன் ஜீவிக்கிறுன். மனிதனுக்கு, சரீரம், புத்தி இவைகளால் வேலை செய்யும் சக்தி அவனுண்ணும் ஆகாரத்தால் உண்டாகிறது. ஆகையால் ஸகலசராசர சிருஷ்டிகளுக்கும் சூரியவெளிச்சமும், வெப்பமும் இன்றியமையாதவை. ஆனது பற்றி இவ்வளவு உபயோகமுள்ளதும் அத்தியாவசியமுமான சூரியனென்னும் கடவுளால் நம்மீது தயவுகூர்ந்து அளிக்கப்பட்ட பெரும் கொடையையே ஈசுவராம்சமாகப் பாவித்து மனிதன் பூஜைசெய்து போற்றுவதில் ஆச்சரியமென்ன?

S. B. அய்யர், பீ.ஏ., எல்.டி.

# ஹிமயவதி
## HIMAYAVATI

ஹிமயமலைச்சாரலில் மாகமாஸத்தில் காற்றில் பனியானது உறைந்து வெளுத்துப் பனிக்கட்டியாகி எங்கும் பஞ்சுபோல் பறந்துகொண்டு இருந்தது. சாளரத்தின் வழியாக இந்த விசித்ரத்தைக்கண்டு அவ்வூர் அரசி அதிசயித்துக் கொண்டிருக்கையில் கையிலிருந்த வெள்ளி ஊசியின் முனை விரலுள் பாய்ந்து ரக்தம் சிந்தும்படி செய்தது. இதைக்கண்டதும் "பனிபோல் துல்யமானதும் ரக்தம்போல சிவந்த மேனியும், மை போல் கறுத்த மயிருமுள்ள அழகிய குழந்தையை என்று அடைவேன்" என்று எண்ணினுள்.

கொஞ்சகாலமானதும், அவளுக்குப்பனிபோல துல்யமும், ரக்தம்போல சிவப்பும், மைபோல கறுப்புமிருங் கூடிய அழகிய பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை அவ்வாறு இருந்ததால் ஹிமயவதி என்று அதற்கு நாமகரணஞ்செய்தனர். அக்குழந்தை பிறந்ததும் அதன் தாய் இறந்துவிட்டாள்.

ஒரு வருஷத்திற்குள் அரசன் மற்றொருத்தியை மணந்தான். அவள் மிக்க ரூபவதி. கர்வமும் வீண் டம்பமு முடையவள். தன்னைக்காட்டிலும் ஒருவள் அழகாக இருக்கிறுள் என்று கேட்டால் பொறுக்க மாட்டாள். அவளிடத்தில் ஒரு ஜாலக்கண்ணுடி இருந்தது. காலையிலெழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு கண்ணுடி யண்டைப்போய்,

"கண்ணுடி யப்பா கண்ணப்பா,
அழகு மிக்காளை சொல்லப்பா!"

என்று கேட்பது வழக்கம்.

கண்ணுடியும்,

"கண்ணே மணியே கண்மணியே
அழகில் மிக்கவள் நீதாண்டீ" என்றுசொல்லும்.

அதைக்கேட்டதும் அவளானந்தப் படுவள். ஏனென்றுல் அது மெய்யையே உரைக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

ஆனல் ஹிமயவதி பிறைபோல வளரவளர அவள் அழகும் வளர்ந்தது. அவள் ஏழுவயதானதும் உடம்பு திரண்டு பச்சென்று விளங்கி சோபை அடைந்தாள். அவளது சிற்றுயைக் காட்டிலும் அழகோடு விளங்கினுள். ஒருநாள் ராணி தனது கண்ணுடியைப்பார்த்து,

"கண்ணுடி யப்பா கண்ணப்பா
அழகில் மிக்கவ ளாரப்பா?"

என்றாள்.

"அழகில் மிக்கவள் நீதாண்டி
உன்னிலு மழகாள் ஹிமயவதி"

என்று அக்கண்ணாடி பதில் கூறியது.

இதைக்கேட்டதும் அவளுக்குக் கோபமூண்டு விட்டது. அதுமுதல் ஹிமயவதியைக் கண்டால் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். அவள் இருக்கும்வரை அவளுக்கு இரவும் பகலும் சிந்தனை இல்லாமல் இருக்கமுடியவில்லை. கடைசியாகதலையாரியைக் கூப்பிட்டு 'இவளைக் காட்டில் கொண்டு கண்டதுண்டமாக நறுக்கி அவளது ஈரலை எனக்கு எடுத்துக் கொண்டு வந்து காட்டுவாய்' என்று ஏவினாள்.

தலையாரியும் குழந்தையோடு காட்டிற்குச் சென்றான். தனது வாளை வீசி அதைத் துண்டிக்க முயன்றான். குழந்தை பயப்பட்டுக்கொண்டு கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

"அப்பா என்னை விட்டுவிடு, நான் காட்டுள் ஓடிவிடுகிறேன். நான் மறுபடியும் திரும்பி வருகிறதில்லை" என்று அழுதாள். தலையாரிக்கும் அவளுடைய அழகைக் கண்டதும் மன இரக்கம் உண்டாகியது.

"குழந்தாய்! நீ இங்குச்சற்றும் நிற்காதே ஓடிவிடு" என்று கூறி "எப்படியானாலும் மிருகங்கள் அவளைக் கொன்றுவிடும்" என்று தேறி, பக்கத்தில் ஓடிய ஒரு மிருகத்தின் உடலைக்கீறி உள்ளிருந்த ஈரலை எடுத்துக் கொண்டு, குழந்தையைக் கொல்லாமையால் தலைச்சுமை நீங்கினவன்போல ஸந்தோஷமுற்று சென்று தான் கொண்டு வந்த ஈரலை ராணியிடம் கொடுத்தான். அவளும் அவ்வீரலைச் சமைக்கச்செய்து ஸந்தோஷமாகத் தின்றாள். ஹிமயவதியின் ஈரலைத் தின்னதாகவே அவள் எண்ணம்.

இது நிற்க. அக்குழந்தை நாலாபக்கங்களிலும் ஓடி ஓடி தனியாகித் துணையில்லாமல் அலைந்தாள். மிக்கபயத்தால், ஒவ்வொரு இலையின் கீழும் யாராவது ஒளிந்துகொண்டிருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே நடந்தாள். பின் ஓட ஆரம்பித்தாள். கரடு முரடான பூமிமேல் ஓடிக் காலில் முள் தைக்கவும் உடல் முழுதும் சிறு செடிகள் தாக்கவும் ஓடினாள். அனேக கொடிய மிருகங்களினிடையே ஓடினாள். அவைகள் எல்லாம் கண்ணுற்கூட பார்க்கவில்லை. நாள் முழுதும் ஓடி ஒரு சிறியவீட்டை அடைந்தாள்.

அவ்வீடு உள்ளே நன்றாக அமைக்கப்பெற்றிருந்தது. சுத்தமாக எங்கு எங்கு என்ன இருக்கவேண்டுமோ அவைகளை எல்லாமமைக்கப்பெற்றிருந்தது. உள்ளே சமையல் செய்யப்பட்டிருந்தது. ஏழு பேர்க்குச் சமைக்கப்பட்டிருந்தது. ஹிமயவதி நடந்து வந்த ச்ரமத்தால் பசி மிக அடைந்தவளாய் ஒவ்வொருவருடைய ஆஹாரத்திலும் ஒரு கபளம் எடுத்து உண்டு அயர்ச்சியால் கட்டிலருகு வந்தாள். முதலாறுபேருடைய கட்டில்களும் அவளுக்குச் சரியாகவில்லை. ஏழாவது அவளுக்கென்றே அமைத்தது போலிருந்ததால் அதில் படுத்து நன்றாகத் தூங்கினாள்.

இதற்குள் அவ்வீட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய ஏழு சித்ரகுள்ளர்கள் உள்ளே நுழைந்து வந்தார்கள். அவர்கள் மலைக்குச்சென்று ரத்னம்வெட்டுவதுவழக்கம். அவைகளைப் பரீக்ஷை செய்து எடுத்து வந்து வீட்டில் சேகரிப்பார்கள். அன்று அவர் வந்ததும் முதல்வன் "என் மணையை யாரோ தள்ளிவிட்டான்" என்றான். இரண்டாவதவன் "என் கத்தியை யாரோ எடுத்திருக்கிறான்" என்றான். மூன்றாவதவன் "என் இலையை யாரோ நறுக்கி இருக்கிறான்" என்றான். நான்காவதவன் "சோற்றை யாரோ திறந்து இருக்கிறான்" என்றான். ஐந்தாவதவன் "நெய்யை யாரோகொட்டியிருக்கிறான்" என்றான். ஆறாவதவன் "யாரோ இங்குச் சாப்பிட்டிருக்கிறான்" என்றான். ஏழாவதவன் "என் செம்பில் யாரோ தீர்த்தம் குடித்திருக்கிறான்" என்றான்.

நாலாபக்கங்களிலும் பார்த்தார்கள். உணவு கொண்டதும் முதல்வன் படுக்கப்போனான். "என் படுக்கையை யாரோ கலைத்திருக்கிறான்" என்றான். இரண்டாவதவனும் அப்படியே சொல்லினான். மூன்றாவதவனு மப்படியே சொல்லினான். நான்காவதவனும் அப்படியே சொல்லினான். ஐந்தாவதவனு மப்படியே சொன்னான். ஆறாவதவனும் அப்படியே. ஏழாவதவன் படுக்கையருகு சென்றதும் ஹிமயவதி அயர்ந்து தூங்குவதைக் கண்டான். பின் எல்லாரும் விளக்கைக் கையிற்கொண்டு அவளது அழகைக்கண்டு ஆனந்தித்தார்கள். அவளை எழுப்பாது அவ்வேழுபேரும் ஆறு படுக்கைகளையே ஸரிப்படித்திக்கொண்டு நித்திரை செய்தார்கள்.

காலை, பொழுது விடிந்ததும், தூக்கத்திலிருந்து ஹிமயவதி எழுந்தாள். ஏழுபேர்களையுங் கண்டதும் பயந்தாள். ஆனால் அவர்கள் அன்போடு "நீ யார்? உன் பெயரென்ன? இங்கு எப்படி வந்தாய்?" என்று ஆதரவோடு கேட்டார்கள். ஹிமயவதியும் தன்னைத் தன் சிற்றாய் கொல்லச் செய்தது முதலாகிய ஸமாசாரமுழுதும்

சொல்லினுள். "ஆனல் ஸரி எங்களுக்கு வேண்டிய வைகளைச் செய்துகொண்டிருந்தால் எங்களோடு கூடப் பிறந்தவள் போல நீ இருக்கலாம். உனக்கு ஒன்றிற்கும் குறைவராது" என்றார்கள். "நீங்கள் சொல்லியவிதம் நான் நடக்கிறேன்" என்றாள்.

பின் இவ்வாறு அவள் அவர்களுக்குக் காலையில் அன்னம் வடித்திட்டுத் தானுமுண்டு இருப்பாள். மத்யானவேளை முழுதும் குள்ளர்கள் வேலைக்குப்போய் விடுவார்கள். இவளைத் தனியாய் விட்டுப்போகக் கூடாதென்று அறிந்த சித்ரகுள்ளர்கள் "குழந்தாய், ஜாக்ரதை. உன்னை உன் சிற்றம்மைக் கொல்ல வழி தேடிக்கொண்டே இருப்பாள். ஆகையால் மத்தியான காலத்தில் யார் வந்து கூப்பிட்டாலும் கதவைத் திறக்காதே" என்று சொல்லிவிட்டுத் தமது வேலைக்குப் போவார்கள். பின் ராத்ரி வந்துசேர்ந்து உண்பது அவர் வழக்கம். அவர்கள் ஏழுபேர்களும் வெளியே போனார்கள். ஹிமயவதியும் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

ஹிமயவதியின் ஈரலென்றெண்ணி ஆனந்தத்தோடு உண்ட அவ்விராணி 'ஹிமயவதி இறந்துவிட்டாள். இனி நாம்தான் அழகிற் சிறந்தவள் என்று எண்ணிக் கொண்டு கண்ணாடியைப் பார்த்து,

"கண்ணாடி யப்பா கண்ணப்பா
அழகில் மிக்கவ ளாரப்பா?"

என்று கேட்டாள்.

"அழகில் மிக்கவள் நீதாண்டி,
பழகாக் காட்டில் ஏழுவருடன்
அழகே உருவாய் அமைந்தவளாய்
உன்னிலு மழகாள் அவள்தாண்டீ
உன்னிலு மழகாள் ஹிமயவதி"

என்று கண்ணாடி பதில் கூறிற்று.

ராணிக்குக்கோபமதிகரித்துப்பொறுமைமூண்டிற்று. கீழ்மை அலைபாய்ந்து அவளை யாட்டி ஹிமயவதியைக் கொல்லும் உபாயங்கள் யாதென்று அவள் மனத்தைச் சலிக்கச் செய்தது. அவளும் கடைசியாக ஓர் வழி அறிந்தாற்போல முகமெல்லாம் வர்ணம்பூசி, ஹரிதளம் துடைத்துக் கிழவிபோல் வேஷங்கொண்டு,

"விந்தைப் பொருள்களிவை வேண்டளவுங் கொண்டிடலாம்
அந்தங் கெடாத அழகியவை—ஐந்தாங்
கலைநுதலீர் கொள்ளீர் கடையகத்தே விற்கும்
விலைக்குங்கீழ் என்றன் விலை"

என்று கூவிக்கொண்டு சில சிறு சாமான்களை ஓர் தட்டில் எடுத்துக்கொண்டு அக்காட்டில் ஏழுவர் வீட்டை அடைந்து அங்கு நிற்க, சாளரத்தின் வழியாகப் பார்த்த ஹிமயவதி 'இது என்ன' என்ன, 'என்னிடம் நவராத்ரி பொம்மைகள், அழகிய ஸரிகைகள், பட்டுக் குச்சுகள், சிறுபவழம், கொடிப்பவழம், வங்காளத்து முத்து இன்னமும் அனேக அழகிய ஸாமான்கள் இருக்கின்றன' என்று சொல்ல, ஹிமயவதி இவள் நம்மை என்ன செய்யப்போகிறாள் என்று நினைத்துக் கொண்டு கதவைத்திறந்து கிழவியை உள்ளே வரச் சொன்னாள்.

வந்ததும் அக்கிழவி "குழந்தாய்! உனதழகிற்கும் நீ அணிந்திருக்கும் சடையில் ஸரிகைமாத்திரமிருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும். நான் உனக்கு வேண்டிய ஸரிகையின் அளவையை எடுப்பேன். இந்த நீளம் கைக்குப் போதும். கழுத்துக்கு அளவாக எடுக்கிறேன். உன் கழுத்தை நன்றாகக்காட்டு" என்று சொல்லிக்கொண்டு வெகுவேகமாக அவள் கழுத்தை அளவெடுப்பவள் போல அவள் கழுத்தைச் சுற்றி ஸரிகையை வெகு தீவ்ரமாகச் சுற்றி இறுக்கி முடியிட்டாள். குழந்தை ஹிமயவதி நிலைதவறி மூச்சு விடமாட்டாது கீழ் வீழ்ந்தாள். கிழவி மஹா ஸந்தோஷத்தோடு "நீ இனிப் பிழைக்கமாட்டாய். இனி நீ அழகிற் சிறந்தவளில்லை" என்று சொல்லிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றாள். ராத்ரியானதும் ஏழுபேர்களும் வந்து தமது அன்பிற்குரிய ஹிமயவதி இருக்கும் நிலைமையைக் கண்டு அவள் கழுத்தைச் சுற்றி இறுக்கிக் கட்டி இருந்த ஸரிகையை இரண்டாகத் துண்டித்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாக ஹிமயவதியும் மூச்சுவிட ஆரம்பித்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஹிமயவதி தனது ஸ்வய நிலைமையை அடைந்தாள். அவர்கள் என்ன விசேஷமென்று கேட்க நடந்தவைகளை எல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னாள். "அக்கிழவி யாரென்று இருக்கிறாய். அவள்தான் உன் சிற்றாய். ஜாக்ரதையாக இனி நீ இருக்கவேண்டும். நாம் இங்கு இல்லாது இருக்கும்பொழுது யாரையும் உள்ளே விடாதே" என்று அவர்கள் ஹிமயவதிக்குப் புத்தி கூறினார்கள்.

இதற்குள் தன் அரண்மனையை அடைந்த இராணி மஹா ஸந்தோஷத்தோடு தான்தான் எல்லாரைக் காட்டிலும் அழகென்னுமானந்தம் பொங்கக் கண்ணாடியைப் பார்த்து,

"கண்ணாடி யப்பா கண்ணப்பா
அழகிற் சிறந்தவ ளாரப்பா"

என்றாள்.

"அழகில் மிக்கவள் நீதாண்டீ
பழகாக் காட்டில் எழுவருடன்
அழகே உருவாய் அமைந்தவளாய்
உன்னிலு மழகாள் அவள்தாண்டீ
உன்னிலு மழகாள் ஹிமயவதீ."

என்று கண்ணாடி பதில்கூறிற்று.

அவளுக்கு வந்த கோபத்திற்களவே இல்லை. இனி இம்முறை அவளை விடுவதில்லை, என்று வேஷங் கொண்டு, அவ்வெழுவருடைய வீட்டருகு சென்று,

"வாச மயிர்க்கெண்ணை, வாரழகு சீப்பினொடு
பூச மணம்வீசு பூச்சுளதால்—மாசில்
தலைமேற் பொருள்கொள்ளீர் சாற்றுங் கடையின்
விலைக்குங்கீ ழென்றன் விலை."

என்று கூவினாள். ஹிமயவதி அவள் காட்டிய சீப்பின் அழகைக்கண்டு அதை வாங்குவதாகக் கதவைத்திறந்தாள். திறந்ததும் வேஷங்கொண்ட ராணி மஹாஸத்தியவதிபோல் "இந்தச் சீப்பு தலையை நன்றாக வாரினால் நீ வாங்கிக்கொள்" என்று சொல்லிக்கொண்டு ஹிமயவதியின் தலைமயிரைக் கோதி வார ஆரம்பித்தனள். சீப்பு தலையிற்பட்டதோ இல்லையோ ஹிமயவதி சோர்ந்து கீழ் வீழ்ந்துவிட்டாள். "அழகே! ஹே! அழகே! துலைந்தாயா! அப்பாடி! இனி என் சனிஸ்சரன் விட்டுவிட்டது" என்று சொல்லிக்கொண்டு தன் அரண்மனைக்குப் புறப்பட்டாள்.

விஷப்பல் நிறைந்த சீப்பினால் தலைவாரப்பட்டு ஹிமயவதி சோர்ந்து வீழ்ந்திருப்பதை இரவு வந்த எழுவருங்கண்டு அந்தச் சீப்பை எடுக்க அவள் தன் ஸ்வய நிலைமையை அடைந்தாள். மறுபடியும் அவர்கள் "நாங்கள் இல்லாத காலத்தில் யார்க்கும் கதவைத் திறக்காதே" என்று ஜாக்ரதைப் படுத்தினார்கள்.

இதற்குள் ராணி தனது அரண்மனையில் கண்ணாடியைப் பார்த்து

"கண்ணாடி யப்பா கண்ணப்பா
அழகிற் சிறந்தவ ளாரப்பா"

என்றாள்.

"அழகில் மிக்கவள் நீதாண்டீ
பழகாக் காட்டில் எழுவருடன்
அழகே யுருவாய் அமைந்தவளாய்
உன்னிலு மழகாள் அவள்தாண்டீ
உன்னிலு மழகாள் ஹிமயவதீ"

என்று பதில் கூறிற்று.

இவ்வாறு சொல்வதைக் கேட்டதும் மஹா கோபத்தோடு "நான் செத்தாலும் ஸரி, ஹிமயவதியை கொல்லாது விடுவதில்லை" என்று ஆத்ரம்கொண்டு, யாரும் வராத ஓர் அறையுள் தாளிட்டுக்கொண்டு மாங்கனி ஒன்று தயார் செய்தாள். அது பார்ப்பதற்கு மிக்க அழகினை உடையது. ஓர்பக்கம் குங்குமம்போல் சிவந்து, மறுபக்கம் பச்சென்று சோபை கொண்டு கிளி மூக்குபோல் விளங்கி, காம்பிடை அப்பொழுதறுத்த பழம்போல் பால் சிந்துவதைக் கண்டார் எல்லாரும் அதை உட்கொள்ள விரும்புவார்கள். ஆனால் ஒரு அணுவளவு எவன் வாயிலாவது செல்லுமாயின் உடனே அவனுயிர் அவனை விட்டுவிடும். கொடியவிஷம் கலந்து செய்யப்பட்டது. அப்பழத்தைக் கையிலெடுத்துக்கொண்டு குடியானவள் வேஷங்கொண்டு காடும் மலையும் கடந்து அவ்வெழுவர் இருக்குமிடம் வந்து கதவைத் தட்டினாள். "நான் யாரையும் உள்ளேவிட மாட்டேன்" என்றாள் ஹிமயவதி. "அது போனால் போகட்டும். இந்த மாம்பழங்களை என்னால் தூக்கமுடியவில்லை. அவற்றைக்கீழ் எறிந்து விட்டுப் போவதைவிட இங்குக் கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். எனக்கு இதற்கு விலை ஒன்றும் வேண்டாம்" என்றாள் அக்குடியானவள்.

'நான் அவைகளை வாங்க எனக்கு உத்திரவு கிடையாது" என்றாள்.

"விஷமிருக்கிறதென்று பயப்படவேண்டாம். நான் உண்டபாதியை நீ யுண்டு பின் வாங்கிக்கொள்" என்று சொல்லிக்கொண்டு தான் செய்த பழத்தின் பச்சையான பாகத்தைத் தான் கொண்டு குங்குமவர்ணமாக விருந்ததை ஹிமயவதிக்குக் கொடுத்தாள். அப்பழம் வெகு ஜாக்கிரதையாகச் செய்யப்பட்டது. பச்சையான பாகத்தில் விஷமே கிடையாது. சிகப்பான பாகம் முழுதும் விஷம்தவிர வேறொன்றுமில்லை. அக்குடியானவள் பழத்தைத் தின்றதும் தானும் அதை உண்ணவேண்டும் என்னும் ஆசையோடு வாங்கி வாயுள்போட்டதும் பேச்சு மூச்சில்லாது ஹிமயவதி மரம்போல் கீழ்வீழ்ந்தாள். அவள் வீழ்ந்ததை ஸந்தோஷமாகக் கண்டு "ஹஹ்ஹா! இனி உறைந்த பனிபோல் துல்யமாயும், ரக்தம்போல் சிவப்பாயும் மைபோன்ற கூந்தலோடுங்கூடிய அழகாள் என்னும் பதம் என்காதில் விழாது. ராமேச்வரம் போனாலும் சனிஸ்சரன் தொலையாதென்றது இன்றுதான் பொய்த்ததென்று" சொல்லிக்கொண்டு தன் அரண்மனையை அடைந்து கண்ணாடியைப்பார்த்து,

"கண்ணாடி யப்பா கண்ணப்பா
அழகிற்சிறந்தவ ளாரப்பா?"

என்றாள்.

"அழகிற் சிறந்தவள் நீதாண்டி
உன்னிலு மழகாள் யாருமிலே"

என்று பதில் கூறிற்று.

ஏழுபேர்களும் ராத்திரி வந்து ஹிமயவதியின் நிலைமையைப் பார்த்தார்கள். பல முயற்சிகள் செய்தார்கள். விஷமெங்கிருக்குமென்று தேடினார்கள். அவள் இறந்துவிட்டாளென்று எண்ணினார்கள். ஆனால் அவளைக் கொளுத்த மனம் இல்லாதவராய் வாசனைக் கட்டி அவளுடைய ப்ரேதத்தை ஓர் கண்ணாடிப் பெட்டியில் அமைத்து அதன்மேல் தங்கத்தால் "இவள் அரசன் மகள்" என்று எழுதி எல்லாப் பக்கங்களிலும் தெரியும்படியாக வைத்து ஜாமத்திற்கொருவராக அப்பெட்டியைக் காவல் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள்மாத்திரம் ஹிமயவதிக்காகத் துன்பமடையவில்லை. கிளிகள் வந்து அவளுக்காக அழுதன. குயில்கள் வந்து அவளுக்காக அழுதன. தனியாயிருக்கும் ஆந்தையும் அவளுக்காக வந்து அழுதது. நாயும் பேயும் அவளுக்காக அழுதது. அவளுக்காக அழாதவர்கள் யார்?

இவ்விதமாகச் சிலநாள் கடந்தது. அப்பெட்டியில் அவள் தூங்குவதாகத் தோன்றியதே அன்றி அதில் ஒரு சவமிருப்பதாக யார்க்கும் படவில்லை. இவ்வாறு இருக்குநாளில் அக்காட்டின் வழியாக ஓர் அரசிளங்குமரன் ஒருவன் வேட்டையாடிவிட்டு வந்துகொண்டிருக்கும் பொழுது கண்ணாடி பெட்டியிலிருக்கும் பெண்ணைப்பார்த்து அவ்வெழுவர்களை நோக்கி "அப்பெட்டியைக்கொடுத்தால் நான் எவ்வளவு கேட்டாலும் தருவேன்" என்றான். அதற்கு அவர் "இவ்வுலகத்திலிருக்கும் பொருள்களைக் கொடுத்தாலும் நாங்கள் அதைத் தரமாட்டோம்" என்றார். "அது எப்படியிருந்தாலும் ஸரி, நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். அப்பெட்டியை எப்படியேனும் தயவுசெய்து கொடுக்கவேண்டும். நான் அதை வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்வேன்" என்றான். அவன் சொல்லிய விதத்தில் மனமிரங்கி அவனுக்கு அப்பெட்டியைக் கொடுத்தார்கள்.

அவ்விளங் குமரனும் தனது ஆட்களின் தலைமேல் அப்பெட்டியைச் சுமத்தி எடுத்துப்போனான். அவர் கொண்டுபோகையில் பெட்டி அசைந்து அசைந்து போனதால் ஹிமயவதியின் நெஞ்சிற் பதிந்திருந்த பழம் தவறிக் கீழ் வீழ்ந்தது. உடனே அவள் எழுந்து உட்கார்ந்துகொண்டு "ஹா! இதென்ன! நான் எப்படி இங்குவந்தேன்" என்று கூவினாள். மஹா குதூஹலத்தோடும் ஆனந்தத்தோடும் அவளைக்கண்டு ராஜகுமாரன் நடந்தவைகளைச் சொல்லி "என்னோடு வா. என் தகப்பனது அனுமதியின் பேரில் உன்னை மணப்பேன்" என்றான். அவளும் ஸம்மதித்து உடன் சென்றாள்.

மணம் செய்வது நிஸ்சயமாயிற்று. ஹிமயவதியின் சிற்றாயும் அழைக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு ஹிமயவதியின் கல்யாணம் நடக்கப்போகிறதென்று தெரியாது. மஹா ஸந்தோஷத்தோடு பல ஆபரணங்களை அணிந்துகொண்டு தன்னைக் காட்டிலும் அழகில்லை என்று எண்ணிக்கொண்டு கல்யாண மண்டபத்திற்கு போவதன் முன் கண்ணாடியைப் பார்த்து,

"கண்ணாடி யப்பா கண்ணப்பா
அழகிற் சிறந்தவ ளாரப்பா?"

என்றாள்.

"இங்குச் சிறந்தவள் நீதாண்டி
தங்கு நல்மண மண்டபத்தின்
நங்கை அழகாள் உன்னிலுமே"

என்றது.

இதைக் கேட்டதும் என்ன செய்வதென்று எண்ணி மண்டபத்திற்குப் போவதில்லை என்று நிஸ்சயித்தாள். பின்பு அவளழகையும் பார்ப்போமென்று புறப்பட்டாள். அங்குச் சென்றதும் மணமாவதற்கு முன் ஹிமயவதியின் சிற்றாயின் நடத்தை முழுதையும் ஸபையோர் எல்லாம் கேட்கும்படிச் சொல்லி, இவள்தான் ஹிமயவதி என்றும் அந்த ராஜகுமாரன் சொன்னான். இதை எல்லாம்கேட்டுக்கொண்டிருந்த ஹிமயவதியின் தந்தை, தான் இதுவரையும் இறந்துவிட்டதாக எண்ணிய ஹிமயவதியைக் கண்டு மிக்க ஆனந்தமடைந்து தன் மனைவியைச் சுண்ணாம்பு காளவாயிலிட்டு வேகவைத்தான். பின் ஹிமயவதிக்குக் கல்யாணமாகி ஸுகமாக இருந்தாள். ஹிமயவதியின் தந்தை பின் மணஞ் செய்துகொள்ளவே இல்லை.

வா. சேஷகிரி.

## பிழைதிருத்தம்

**முன்பகுதி 210-ம் பக்கத்தில் 2-வது பத்தி 20-ம் வரியில் இதையே பகவான் கீதையில் என்று தொடங்கும் வாக்கியத்தின் பின் பின் வருவதை வருவித்து வாசிக்கவும்.**

'அர்ப்பிக்கும் கரண்டி ப்ரஹ்மம்; ஹவிஸ் ப்ரஹ்மம்; அக்னியாகிய ப்ரஹ்மத்திலே, (யஜமானனாகிய) ப்ரஹ்மத்தால், ஹோமம் செய்யப்படுதல் ப்ரஹ்மம்; ப்ரஹ்மமாகிய கர்மத்தினாலே ஸாமாதியுள்ள ஒருவனால் அடையப்படுவதும் ப்ரஹ்மமே,' என்று வெளியிடுகிறார்.

## ஈனக் ஆர்டென்

**ENOCH ARDEN**

(245-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் முகஞ்சுளிக்க ஆர்டென் கண்டதில்லை. ஆதலின் இருவருடைய அன்பும் நாடோறும் பெருகி வந்ததேயன்றிக் குறைந்து வரவேயில்லை. மனமொத்த மகளிரை மணம் புரிவதனால் வரும் நன்மைகள் கணக்கிலகப்படா.

ஏழைக்குடியில் சனீசுவரன் புகுதல் எளிது. ஆர்டென் கடற்றுறையிற் போய் வேலை செய்துகொண்டிருந்தபோது அகஸ்மாத்தாய்க் கீழே வீழ்ந்து கைகால்களிற் காயம்பட்டு வேலை செய்யக்கூடாமல் வீட்டிலேயே சும்மாவிருக்கும்படி நேரிட்டது. மிகுத்து வைத்த பணத்தில் அதிக பாகம் செலவாய்விட்டது. முன்போலவே உழைக்க ஆர்டெனுக்குச் சரீர பலமில்லை. குடும்பக் கார்யங்கள் நடப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. அன்னிலீயின் முகமலர்ச்சியோ எள்ளளவேனும் மாறவில்லை. தன் நாயகன் முன்போலவே திடகாத்திரனாக வேண்டுமென்று ஸதாகாலமும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். தன் சுகத்தைக் குறைத்துக்கொண்டு, புருஷன், மக்களுடைய நன்மையையே நாடிவந்தாள். கடவுளும்ஒருவாறு அன்னிலீயின்வேண்டுகோளுக் கிணங்கினார். ஆர்டெனுக்கு உடம்பு தேறிற்றாயினும் அந்தப் பெருங்கண்டத்திற்கு முன், எவ்வளவு பலமுடையவனாயிருந்தானோ அதில் நாலிலொரு பங்கு பலந்தான் இருந்தது. முன்போல அதிக ஊதியங் கிடைக்கக்கூடிய வேலை அவனுக்கு அகப்படவில்லை. ஒருநாள் தன்னிலைமையை எண்ணிக் கவலையுற்றிருக்குங்கால் தன் மனைவி எதிரில் வரக்கண்டு, "என்னருமைப் பத்தினியே! உன்னை நான் விவாகஞ் செய்த காலத்தில், என்கால்கைகள் முறிந்து உன்னையும் நமது மக்களையும் சோற்றிற்குப் பறக்க விடுவேனென்று எண்ணவேயில்லை. இது தெய்வத்தின் கார்யம். விதி வலிது, அதன் முன் நம்முடைய உபாயம் பலிக்காது. இவ்வூரிலோ எனக்குத் தக்க சம்பளங் கொடுப்பாரில்லை. தூர தேசத்திற்குப் போய்ப் பொருள் தேடி வருகின்றேன். எனக்கு ஒருகாலம் யஜமானாயிருந்தவர் சீனதேசத்திற்குப் போய் வியாபாரஞ் செய்ய உத்தேசித்திருக்கிறார். அவர் என்னை மாலுமியாக வேண்டுகிறார். தக்க சம்பளங் கொடுப்பார். போய் வருவதற்கு மூன்றுவருஷ காலமாகும். அதுவரையில் நீ இந்த வீட்டிலேயே இருந்து நின்னையும் நின் மக்களையும் பாதுகாத்துவா. மூன்று வருஷத்திற்குப் போதுமான முதலும் ஒரு தொழிலும் உனக்கு ஏற்படுத்தி வைக்கின்றேன். எத்தனையோ சண்டமாருதங்கள் வீசின காலத்திலெல்லாம் என் பிதாவையும் அவருக்குப் பிறகு என்னையும் காத்துக் கரை சேர்த்த சிறு மரக்கலம் நமக்குச் சொந்தமாயிருக்கின்றது. அதை விற்று முதல் தருகின்றேன். நமது வீட்டு வாசலிலேயே ஒரு கடையையும் கட்டிக் கொடுக்கின்றேன். நீயும் மக்களும் கடையில் கிடைக்கும் லாபத்தை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்து வாருங்கள், புறத்தேசத்திற்குப்போய் வியாபாரஞ்செய்து பெரும் பொருள் தேடித் திரும்பி வருகிறேன். நமது மக்கள், தரித்திரத்தை அனுபவித்தல் கூடாது. செம்மை நெறி வழுவாமல் அவர்களைப் பாதுகாத்துவா. எல்லாம் வல்ல கடவுள் நம்மிடத்துக் கருணைவைப்பார். இன்னாள் வரையில் ஒருவனைப்போய் ஒன்றுதாவென்று இரந்தேனில்லை. அப்படியே என்னாயுள் முழுமையும் போக்கி விடுகின்றேன். வறுமை கொடிது. இளமையில் வறுமை மகாகொடியது. ஆதலின் வறுமையிலும் செம்மையை மறத்தலாகாது. கணக்குக்குப் பிள்ளைகளைப் பெறலாகாது. நல்லொழுக்கமில்லாத மக்கள் நாட்டிற்கே கேடிழைப்பவர்கள். உலகத்தாரின் அபவாதம் எனக்கு வராமற் காப்பது உன்னுடைய கடமை. நீ முழுமனத்துடன் எனக்கு அனுமதிகொடு. நாளைக்கே கப்பலை விற்று முதலாக்கிக் கடையையுங் கட்டுவித்து அதற்கு வேண்டிய சரக்குகளையும் வாங்கி வைக்கிறேன். பொருளுதவியில்லாத ஸம்ஸாரி அரை மனுஷன். உனக்கும் நமது மக்களுக்கும் க்ஷேமம் விருத்தியாகவேண்டுமென்றே இந்த யோசனை சொல்லலானேன். நீ இணங்குவாயாக," என்று பரிதபித்துச் சொன்னான்.

படி சொற்றவறாத பாவையாகிய லீ பர்த்தாவின் மொழிகளைச் செவியுற்றவுடனே ஒன்றுந் தோன்றாதவளாய் மதிமயங்கி, "நாதா, நீர் கீறின கீற்றை என்றும் நான் கடந்ததில்லை. நீர் சொல்லும் விஷயம் எனக்குக் கிஞ்சித்தேனும் ஸம்மதமாகவில்லை. இந்த நாட்டிலேயே ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குப் போவதில் அளவிறந்த ஆபத்துக்கள் உண்டாகின்றன. இருபத்தையாயிரம் மைல் தூரத்திலுள்ள சீனதேசத்துக்குப் போய்ச் சேருகிறது என்ன நிச்சயம்? ஸமுத்திரத்துக்கு இரத்னாகரமென்று பெயரிடுவதிலும் பிரேதாகரம் என்று பெயரிடுவது தகுதியாயிருக்கும். நீர்க்குட் பாறைகளும் மேலே சூறைகளும் மனி

தர் உடல், பொருள், ஆவிகளையே அபகரிக்க ஏற்பட்ட திருடர்களாம். இவர்கள் வசப்படாது தப்பிச் சீனுவுக்கே போய்ச்சேருவதாக வைத்துக் கொண்டாலும், அங்குள்ளார் நமக்கு உறவினருமல்லர், உற்றாருமல்லர். அவர்கள், ஜாதி, மதம், நடை, உடை, பாவனை முதலியவை நமக்குத் தெரியாதவை. அச்சீனர்களும் அபின் என்னும் லாகிரி வஸ்துவைத் தின்று வெறிகொண்டு அந்நியதேசத்தாரை அடிக்கடி வெருட்டுகிறார்களாம். கொடுக்கிற தெய்வம் ஓட்டைப்புரட்டியுங் கொடுக்குமன்றோ? தமதுடம்பு இப்போதிருக்கிற நிலைமையிலேயே என்றுமிருக்காது. நல்லஸ்திதிக்கு வரலாகும். என்னுடைய பராமரிப்பு இல்லாவிடின் மெலியுமென்று எனக்கு அச்சமுண்டாகின்றது. எனக்கு வயது இருபத்தைந்து: குழந்தைகளோ மூன்று உற்பத்தியாகிவிட்டன. என்றும் பண்டமாற்றுச் செய்து வழக்கமில்லாதவள். தமது ரக்ஷணையை நம்பியிருந்தேன். தாம் என்னைக் கைவிடலாகாது. தாம் நேரிலிருந்து என்னை எந்த வேலை செய்யச்சொன்னாலும் செய்யத் திடமுண்டு. தாங்கள் ஊரைவிட்டுச் சென்றால் எனக்குப் பலம் எங்கே? என்னைக் கைவிட்டுப் பொருளாசையால் பரதேசம் போதல் தகுதியல்ல. எனக்குப் பெற்றார், உற்றார், கடவுள், எல்லாம் தாமேயாதலால் இப்பெருங்குடும்ப பாரத்தை என்னை வகிக்கும்படி விட்டுத் தாம் அந்நிய தேசத்திற்குப் போதல் தெய்வ ஸம்மதமாகவுமிராது," என்று கதறினாள்.

ஆர்டென் தன் மனையாளை என்றுங் கண்ணுங் கண்ணீருமாகப் பார்த்திராமையால் உள்ளங்கனிந்து "கண்மணி, உன்னுடைய இனிய பார்வையால் எனக்குப் பலமும் தைரியமு முண்டாயிருந்தது. இன்று தான் உன் புத்தியும் கண்ணும் கலக்க முற்றிருக்கின்றது. என்மனத்தின் உறுதியும் சற்றுத் தளர்ச்சி அடைகிறது. உன்னைப்போலப் புத்திசாலிபெண்கள், புருஷர்கள் கோழைமனத்தர்களாயிருக்குங்கால், தைரியப்படுத்திக் கீர்த்திகரமாயிருக்கும் காரியங்களைச் செய்வித்தல் வேண்டும். அன்றேல் மனையாட்டிக்கு உயிர்த்துணை என்னும் பெயர் தகாது. **தோன்றிற் புகழொடு தோன்றுக. அஃதின்றேல்,தோன்றலிற் றோன்றாமை நன்று.** பௌருஷமும் கீர்த்தியும் ஸமகுணங்கள். நான் புருஷனாயிருப்பதால் ஆபத்துக்களுக்கு அஞ்சாமல், திரைகடலைத் தாண்டித் திரவியத்தையுந்தேடி நானுமனுபவித்துச் செழுங் கிளைகளையும் தாங்குவது பெருமை. இவ்வூரில் எனக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் என் சாப்பாட்டுக்கே காணாது. நீயும் நம்மக்கள் மூவரும் பிழைப்பதெப்படி? எனக்கு யஜமானாக வருகிறவர் என் சம்பளத்தில் ஒரு பாகத்தை முன்னதாகவே கொடுப்பதாகச் சொல்லுகிறார். அதையும் உனக்கே கொடுத்துவிட்டுப் போகிறேன். நீ பூரண மனத்தோடு நான் போவதற்கு விடைகொடு" என்று மன்றாடினான். அன்னிலீ கூர்மையான புத்தியுள்ளவ ளானதால் பர்த்தா சொன்ன வார்த்தைகளை மனத்தில் வாங்கி மிகவும் வினயத்துடன் "பிராண நாதா, நானும் என் குழந்தைகளும் கஷ்டப்படாம விருப்பதற்கு உபாயங்கள் சொல்லுகிறீரே யன்றி, உத்தம ஸ்திரீகளுக்குக் கணவனை விட்டுப் பொருளை இச்சித்துத் தனியே இருத்தல் தகுதியல்லவென்பதைச் சற்றும் யோசித்தீரில்லை. பொன் புருஷனாகுமா? தாம் நெடுந்தூரயாத்திரை செல்லுங்கால் தங்களுக்குச் சிசுருஷை செய்யத் தங்களோடு நானிருப்பதல்லவோ பார்யா தர்மம், அதைவிட்டுத் தாம், "உனக்கு வீடு, கடை, தனம் பிள்ளைகள் எல்லாமிருக்கிறது. வியாபாரஞ் செய்து ஜீவனம் செய்துகொண்டிரு. ஈரமில்லாத் தண்கடலில் புசலிலும், பாறைகளிலும் அகப்பட்டுக் கஷ்டத்தையனுபவித்து உனக்குப் பொருள் தேடி வருவேன்," என்று சொல்வது தங்கள் மனம்போலும். எல்லாம் கடவுள் செயல். ஆக்கல், அழித்தல் இரண்டையும் தம்மிடத்தில் ஒப்புவித்துவிட்டேன். கடவுளும், தாமும் விட்ட வழியில் நடக்கத் தயாராயிருக்கின்றேன். தங்கள் வாக்குக்கு எதிர்வாக்கு ஒன்றுஞ் சொல்லாதவளாகிய யான் இன்று இவ்வளவு பேசினதற்காக க்ஷமித்தல் வேண்டும்," என்றாள்.

குடும்பப் பொறுப்பை வகித்த ஆர்டென் இதுதான் ஸமயமென்று எண்ணித் தன் மனைவிக்குத் திடஞ் சொல்லிப் பிதுரார்ஜிதமாயிருந்த கப்பலைவிற்று, வீட்டு வாசலில் கடையையுங் கட்டிச் சரக்குகளை வாங்கிக் கடையில் அவைகளை யொழுங்காய் வைத்து இரண்டொருநாள் அன்னிலீயைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வியாபார முறைகளைப் பயிற்றித் தன் பிரயாணத்துக்குரிய காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். வீட்டுக்கு நாயகன் வெளியே போகின்றானென்றறிந்தே வீட்டின் லக்ஷ்மீகரம் குறைந்தது. குழந்தைகள் குரல் வெளியிற் கேட்பதேயில்லை. இழவுபடுமாறு எங்குந் தோன்றிற்று.

புறப்படுவதற்கு முதல் நாளிரவில் ஆர்டென் தன் மகனை அருகிலழைத்து, "தங்கமே, நாளைக் காலையில் நான் தூர தேச யாத்திரை போகின்றேன். நீ உன் மாதா சொற்படி நடந்து உன் தம்பிமார் இருவருக்கும்

இன்னொரு தாய்போல விருந்து, நன்னடக்கையையும் தெய்வபக்தியையுங் கைவிடாது வேதபுத்தகத்தை நாடோறும் படித்துவரல் வேண்டும். உன் அன்னையையே பிதாவாகவும் இரண்டு மூன்று வருஷகாலம் பாவித்துக் கடவுளுடைய கிருபைக்கும் என் அன்புக்கும் பாத்திரமாயிரு," என்று கூறி உச்சிமோந்து முத்தமிட்டுப் படுக்கையில் கொண்டுவிட்டான். தன்னிரண்டாவது குழந்தையாகிய ஆண்பிள்ளையை மார்போடணைத்துக் கண்ணீர் சொரிந்து பரம காருண்யக் கடவுள் அவனைக் காத்தல் வேண்டுமென்று முழந்தாளிட்டுப் பணிந்து பிரார்த்தித்தான். நோய்கொண்ட கைப்பிள்ளை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அதை எழுப்பினால் அழுமென்று நினைத்துக் கடவுளிடத்தில் அந்தக் குழந்தையின் க்ஷேமத்தை ஒப்புவித்தான். ஆர்டென் புத்தியில் மூன்றாவது குழந்தை தீர்க்காயுள் உடையதல்லவென்று பட்டபடியால் அதன் தலையிலுள்ள கேசத்தில் ஒருபாகத்தைக் கத்தரித்து அதை ஒரு ஸம்புடத்தில் பத்திரமாய் வைத்துத் தன் மூட்டையில் கட்டிக்கொண்டு மனைவியிடத்தில் விடைபெறப்போனான். அவள் ஆறாத்துயரமேற்கொண்டு ஊணுறக்கமின்றிப் பிரமையடைந்திருந்தாள். நாயகன் கிட்டவந்தவுடன் அவரைத்தழுவி "ஏழுவயது முதல் என்னிடத்தில் அன்பு வைத்த நீர் என்னைக் கைவிடப்போகிறீர். **நான் இனி உமது முகாரவிந்தத்தைப் பார்க்கப் பாக்கியம் பெற்றிலேன்"** என்று சொல்லிக் கோவென்று அழுதாள். பெண்ணென்றால் பேயுமிரங்குமன்றோ? ஆர்டென் மனம் சற்றுச் சஞ்சலித்தது. ஆயினும் கார்யவாதியாயிருத்தல் புருஷனுக்கு உரிய தர்மமாகையால் துக்கத்தை மறைத்து **"நீ என்னைப் பாராவிடினும் நான் உன்னைப் பார்த்தல் நிச்சயம். நீ கவலைப்படாதே"** என்று சொல்லி அன்னிலீயைத் தேற்றி மூட்டைகளை யெல்லாம் கட்டவும் பொழுது விடிந்தது. அற்ப ஆகாரம் செய்துவிட்டு ஆர்டென் மக்கள், மனைவி, வீடு வாசல் எல்லாவற்றையும் விட்டுக்கிளம்பிக் கப்பல் துறைக்குச் செல்வானாயினான். அவன் மனைவி அவனுருவத்தைப் பார்த்துப் பார்த்துக் கண்பூத்துப் போகிறவரையில் தெருவில் நின்றுகொண்டேயிருந்தாள். ஆர்டென் ஏறிய கப்பல் கண்ணிற்கு மறைந்த வுடனே அவள் தன்னைக் கைம்பெண்ணாக எண்ணி விட்டாள். அவள் துக்கத்தின் பெருக்கத்தை எதற்கு நாம் உவமித்தல் கூடும்.

பண்டமூற்றறியாத லீயின் வியாபாரம் சிறிது காலம் ஒழுங்காகவே நடந்தது. அவ்விடத்திலேயே வேறு இரண்டு கடைகள் புதிதாக உற்பத்தியானபடியால் லீயிக்கு வியாபாரம் குறைந்துவிட்டது. ஒரு ஊரில் மூன்று பைத்தியக்காரர்கள் சேர்ந்தால் எப்படியோ அப்படியாயிற்று. கொள் முதலுக்குக் குறைவான விலைக்கு விற்கும்படி நேரிட்டு லீயின் முதலில் பாதிக்குமேல் அழிந்துவிட்டது. ஆர்டென் ஊரை விட்டுப்போய் இரண்டு வருஷத்திற்கெல்லாம் நோய்கொண்ட மூன்றாவது பிள்ளை இறந்தது. ஆர்டென் ஸமாசாரமும் ஒன்றுந் தெரியவில்லை. மூத்தபெண்ணும் பிள்ளையும் பாடசாலைக்கு அனுப்பப்படாமல் வீட்டில் இருந்து வீண் காலங் கழிப்பவர்களாயிருந்தார்கள். எப்பக்கந் திரும்பினாலும் அன்னிலீக்குத் துக்கமே அதிகரித்துக்கொண்டிருந்தது.

அன்னிலீ ஆர்டெனை மணம் புரிந்த காலம் முதற்கொண்டு **பிலிப்ரே** அவ்விருவரையுங்கண்டுபேசினதேயில்லை. நோய்கொண்ட பிள்ளை இறந்தமைப்பற்றி லீயைத் துக்கம் கேட்க அநேகர் வந்தார்கள். ரேயும் பலநாள் ஆலோசனை செய்து, லீயிடத்தில் ஒரு நாள் வந்தான். லீ இறந்த குழந்தையையும், பரதேசம் போன தன் நாயகனையும், தனக்கு அதிகரித்து வரும் வறுமையையும் நினைத்து அழுது கொண்டிருந்தாள். ரே பூததயையுடையவனென்று முன்னமேயே ஸூசிப்பித்திருக்கிறோம். துக்கத்திலாழ்ந்த லீயைப்பார்த்தவுடன் ரேய்க்கும் கண்ணில் தாரைதாரையாய் நீர் பெருகிற்று. ஆர்டெனுடைய பெண்ணும் பிள்ளையும் அநாதைகள் போல நிற்பதைக் கண்டு, ரே, "அன்னிலீ, உன்னை இந்தத்துக்கத்தில் பார்த்தல் என் மனத்திற்கு மிகுந்த வருத்தத்தை யுண்டாக்குகின்றது. ஆர்டெனும் நீயும் என்னிடத்தில் எக்காலத்தும் மாறாத அன்பு பாராட்டினதற்கு ஒரு பிரதியுபகாரம் நான் செய்ய நீ அனுமதி தரல்வேண்டும். ஜீவந்தர்களாயுள்ள உன் மக்களிருவரும் பாடசாலைக்குப் போகாமல் கெட்டுப் போகிறார்கள். ஆர்டென் தன் மக்களை இந்த ஹீனஸ்திதியில் கண்டால் கண்ணால் இரத்தம் விடுவான். எனக்கு மனைவிமக்கள் ஒருவருமில்லை. மிகுதியான திரவியம் படைத்திருக்கிறேன். உன்னுடைய மக்களுக்கு வித்தியாப்பியாஸம் செய்வித்து அவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருதலில் என் பணம் விரயமாவதிலும் உயர்ந்த புண்ணியம் கிடையாதென்றெண்ணுகிறேன். என் வீட்டிற்கே அவர்களிருவரையும் அழைத்துப் போகின்றேன். பெரிய மனஸு செய்து அனுப்புவாயாக," என்றான்.

நடுக்கடலில் திசைதப்பிமயங்கும் மாலுமிக்குத் துறை ஒன்று தோன்றினாற்போல், பிலிப் ரே தோன்ற, அன்னிலீக்கு உண்டாயிருந்த வியாகூலம் சற்றுத் தணிந்தது. ரேயினுடைய உதார குணத்தால் மனந்துணிந்து அன்னிலீ, "தாம் எனக்கு ஒரு தேவதூதன். மனிதர்க்கு வரும் துக்கத்தைக் கடவுள் மனிதர்மூலமாகவே நிவாரணஞ் செய்கிறார். அநாதையாயும் நிர்ப்பாக்கியையாயுமிருக்கிற எனக்கு ஒத்தாசை செய்யப் பரமகாருணியரான கடவுளே உம்மை என்னிடத்திற்கு அனுப்பியிருக்கிறார். உமது குலமும் குணமும் தர்மமும் ஆயுளும் வளர்வதாக என் மக்களுக்குத் தாமே அன்னையும் பிதாவுமாயிருத்தல் வேண்டும்," என்று வாய் குழறிப் பேசினாள். ரேயும் லீயிடத்தில் வேறு பேச்சுப் பேசாமல் மக்களிருவரையும் பக்கத்திற்கொருவராயிட்டுக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

ரேயின் பிரியத்தினால் லீயின் மக்களிருவரும் அவனைப் பிதாவென்றே கூவி வழக்கமாய் விட்டது. அவன் வீட்டில் இவ்விரு குழந்தைகளும் வைத்தது சட்டம். ரே சொற்பனத்திலும் சிறுவரிடத்தில் கடுஞ்சொற் சொல்வதில்லை. பரஸ்பரம் அன்பு பெருகியே வந்தது. ஒவ்வொரு காலத்தில் மக்கள் மூலமாய் அன்னிலீக்கு ரே அருமையான பழவர்க்கங்களையும் உணவுப்பொருள்களையும் அனுப்புவான். அன்னிலீ அவற்றை அன்புடனே பெற்றுத் தனது நன்றியைப் பாராட்டி வந்தாள்.

ஆர்டென் சீனாவுக்குப் போய் ஐந்து வருஷமாகியும் அவனிடத்திருந்து கடிதம் ஒன்றும் வரவில்லை. போன கப்பலும் வரவில்லை. கப்பல் மூழ்கி அதிலுள்ளவர்களெல்லாம் மாண்டார்களென்றே ஊரில் வதந்தி பிறந்தது. உண்மையிலோ ஆர்டென் சீன தேசத்தில் பல முயற்சி செய்து மிகுந்த திரவியந் தேடினான். யஜமானுக்கும் வியாபாரத்தில் லக்ஷம் லக்ஷமாய் லாபங் கிடைத்தது.

ஆறாவது வருஷத் தொடக்கத்தில் ஆர்டென் ஜன்ம பூமிக்குத் திரும்பினான். பாதிவழி வந்த பிறகு ஒரு பெரிய புசலடித்துக் கப்பலுடைந்து அதிலுள்ளவர்களில் மூவரைத் தவிர மற்றவர்களெல்லோரும் மாண்டார்கள். மூவரில் ஆர்டென் ஒருவன். ஒடிந்த பாய்மரமொன்றைப் பிடித்துக்கொண்டு மூவரும் வெகு கஷ்டப்பட்டு ஒரு சிறு தீவிற்போய்ச் சேர்ந்தார்கள். அத்தீவு நிர்மானுஷமானது; தென்னை மரங்களடர்ந்தது; வெள்ளாடுகள் மிகுதியாய் அங்கு மேய்ந்துகொண்டிருந்தன. ஆர்டெனும் அவன் தோழரிருவரும் சிலகாலம் தேங்காயையும் ஆட்டிறைச்சியையும் தின்று ஜீவித்து வந்தார்கள். நிரக்ஷரேகையிலுள்ள தீவானமையால் உஷ்ணம் ஜாஸ்தியாயிருந்தது. ஆர்டனுடனிருந்த இருவரும் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு இறந்தார்கள். ஆர்டென் அத்தீவில் ஒண்டியாயிருக்கும்படி ஸம்பவித்தது. பொருளை யிழந்ததை அவன் பொருளாக நினைத்தானில்லை. தன் மனைவி மக்களையே ஸதாகாலமுஞ் சிந்தித்துக்கொண்டிருந்தான். தினம் மும்முறை முழந்தாளிட்டு ஆபத் பாந்தவரான கடவுளைத் தொழுது ஜன்ம பூமிக்குத் தன்னை மறுபடியும் இட்டுப்போக மரக்கலம் ஒன்று வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டிருந்தான்.

வருஷத்திற்கு ஒருமுறை, கதையின் ஆரம்பத்திற்குரிய துறைப்பட்டணத்திற்கு அருகிலுள்ள முந்திரிக் காட்டில் கொட்டை பொறுக்குவதற்குச் சிறுவர் சிறுமியர் போவதுண்டென்றோம். அந்தக் காலம் வந்தது. லீயின் மகளும் மகனும் காட்டிற்குப்போக விரும்பினார்கள். ரேயும் ஸம்மதித்தான். அவ்விரு மக்களும் தமது அன்னையையும் காட்டிற்கு அழைத்துப்போக எண்ணினார்கள். நால்வருஞ் சேர்ந்தே குன்றின் மீதேறி உச்சியில் கொஞ்சநேரம் உட்கார்ந்தார்கள். மக்களிருவரும் காட்டிற்குள் சென்றார்கள். ரேயும் லீயும் தனியே இருந்தார்கள். புருஷன் பரதேசம் போனநாள் முதல், லீக்கு முகமலர்ச்சி கிடையாது. மலையின் உச்சியில் தலைகுனிந்து முகம்வாடி உடம்பு வெயர்த்து லீ பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். இந்தக் கோலத்தைக் கண்ணுற்ற ரே, "அன்னிலீ, உன் மனத்தை வாட்டுவது என்னென்று நானறிவேன். உன் கணவன் ஆர்டெனையே நினைத்து வருந்துகிறாய். அவன் சீன தேசத்திற்கு ஏறிப்போன கப்பலுடைந்து போயிற்றென்று அவ்வூரிலிருந்து நமது கரைக்கு வந்த கப்பற்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆர்டெனைப்பற்றித் துக்கிப்பது வீணாகும். உன் மனத்தைத் திடஞ்செய்துகொள்," என்றான். இம்மொழிகள் லீயின் செவியில் நாராசம்போற் பாய்ந்தன; மூர்ச்சை போய்க்கீழேவிழுந்தாள்; விம்மி விம்மி அழுதாள். இவற்றாலாவதென்ன? கொஞ்சநேரஞ் சென்றபிறகு மனத்தை ஏகதேசம் திடப்படுத்திக்கொண்டு "ஐயா, முன்னொருமுறை உம்மைத் தேவதூதரென்றேன். அதனுண்மை நீர் என் மக்களிடத்து வைத்திருக்கிற அன்பினால் உதாகரிக்கப் பெற்றது. உம்மை இந்த ஸமயம் ப்ராகிருத ஜனங்கள் யமதூதரென்பார். நான் அப்படிச் சொல்வேனாயின் கொடிய நரகில் வீழ்வேன். அவனன்றி அணுவும் அசை

யாது. கடவுளின் நியமனம் அவ்வாருயின் நான் செய்யக் கூடியதென்ன?" என்ருள். அளவு கடந்த துக்கத்திலாழ்ந்த லீ யிடத்தில் அன்று வேறு பேச்சுக்களைப் பேசுதல் உசிதமன்றென்று தெரிந்து ரே சும்மா விருந்தான். லீயின் மக்களிருவரும் முந்திரிக்கொட்டை பொறுக்கிக் கொண்டு வந்தார்கள். நால்வரும் மலையினின்று கீழிறங்கி லீ தன்வீட்டிற்கும், அவள் மக்களும் ரேயும் ரேயின் வீட்டிற்கும் சென்ருர்கள். அன்றிரவு லீ தூங்கவில்லை. வேதபுத்தகத்தை விரித்துவைத்து ஓதிக் கொண்டிருந்தாள்.

மேலே சொன்ன விஷயங்கள் நடந்து பத்து பதினைந்து தினமான பிறகு ரே லீயின் வீட்டுக்கு வந்தான். லீ அவனுக்கு உபசாரங்கள் சொல்லி ஆஸனத்திலிருக்கச் சொன்னுள். ஊர்ப்பேச்சு சிறிது காலம் பேசியான பிறகு ரே, "நாம் குன்றின் உச்சியில் உட்கார்ந்திருக்கையில் உன்னிடத்தில் என் கருத்தைச்சொல்ல எண்ணினேன். அன்று உன் மனம் நொந்திருந்தது. புண்ணிற் கோலிடுவதுபோல் வார்த்தைகள் ஒன்றையுஞ் சொல்லலாகாதென்று சும்மாவிருந்தேன். உன்னுடைய க்ஷேமத்தையும் ஸந்துஷ்டியையுந் தவிர வேருென்றையும் பெரிதாக நான் எண்ணவில்லை. எனக்கு மிகுந்த பொருளிருந்தும் அதனை உடனிருந்து அனுபவிக்கத் துணையில்லாமல் உன் அருமை மக்களால் என் வீடு சற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நீ என்னை மணம் புரிந்து வீட்டுக்கு வந்து விட்டால், அதிலும் பெரிய பாக்கியம் எனக்கு உலகத்திலில்லை. ஆர்டெனைப்போல நான் பேசுவதிற் சதுரனில்லை. அதுவும் உனக்குத் தெரியும். நானும் உன்னை ஏழாவது வயது முதற்கொண்டு காதலித்தவனென்று உன் மனத்துக்கே தெரியும்," என்று சொல்லி அவளிடத்தில் விடை பெருமலே வெளியே போய்விட்டான். அன்று மாலையில் சில பழங்களை யெடுத்துக்கொண்டு அன்னிலீயின் மகள் தாயிடத்திற்கு வந்தாள். தாய் வழக்கம்போலப் பெண்ணை அணைத்து முத்தமிடாமல் விஸனமா யிருந்ததைக்கண்டு பெண் "அம்மா, இன்று துக்கமாயிருக்கிருயே. சீனுவிலிருந்து செய்தி வந்ததோ? வேறென்ன விசேஷம்? நான் கேட்க ஆவலாயிருக்கிறேன்," என்ருள். லீ, "நான் பெண் பிறந்த கதையை என்ன சொல்வது? பரதேசம்போன புருஷனிடத்திலிருந்து ஒரு ஸமாசாரமும் வரவில்லை. அவர் யாத்திரை செய்த கப்பலே மூழ்கிவிட்டதாம். அவர் பிழைத்திருப்பாரென்று எண்ணுவதெப்படி? நேற்றிரவு நமது வேதபுத்தகத்தைப் பணிந்து அதிற்கயிறு போட்டுப்பார்த்தேன். "தென்னை மரத்தடியில்" என்ற சொல் முதலாக விருந்தது. அச்சொல்லுக்கு உன் ஜனகபிதா ஜீவந்தராயிருக்கிருரென்றுஞ் சொல்லலாம். காலஞ் சென்ருரென்றுஞ் சொல்லலாம். உன் ஸ்வீகார பிதா இன்று வந்து தன்னை மணம்புரிய வேண்டுமென்று என்னைக் கேட்டார். ஒரு புருஷனிடத்தில் அன்பு வைத்த நான் மற்ருெருவன் தெய்வமாயிருந்தாலும் காதல் கொள்வதெப்படி? ரே தர்ம குணசீலர். பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காமலே உங்களுக்கு உபகாரஞ் செய்வதுடன் தன் பிள்ளைகளைப்போலவே பாவித்து வருகிருர். எனக்கு எது செய்வதென்று தோன்ருமல் திகைக்கிறேன்," என்ருள்.

லீயின் மகள், "அம்மா, எனக்கு ஒன்று தெரியும். நம்மூவருக்கும் பிரத்யக்ஷ தெய்வமாயிருப்பவர் ரே என்னும் எனது பிதா. என் சொந்தத் தகப்பன் சிவப்போ கருப்போ ஞாபகத்திற்கு வரவில்லை. உபகாரிகள் மனங் கோணுமல் நடப்பது உசிதம். உன்னைப்போல் உலக அனுபோகமுடையவர்களுக்கு நான் யோசனை சொல்வது சரியல்ல," என்று சொன்னுள்.

இவ்விருவரும் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ரே திடீரென்று உள்ளே வந்தான். பெண் எதிர் சென்றழைத்து ஆஸனத்தில் இருக்கச் செய்தவுடனே ரே லீயை நோக்கி, "ப்ரியே, நான் பகலிற் சொன்னதைக் கவனித்தாயோ? ஆர்டென் இறந்துவிட்டானென்பதில் ஸந்தேகங் கிடையாது. இப்போது சீனுவிலிருந்து ஒரு கப்பல் நம்முடைய துறையில் வந்திருக்கிறது. அங்குப் போய் விசாரித்தேன். ஆர்டென் ஏறிப்போன கப்பலுடைந்து அதிலிருந்தவர்கள் பரலோகமடைந்தது வாஸ்தவந்தானும். அவனைத் திரும்பி வருவானென்று இனி ஸந்தேகமே படுதல் வேண்டாம்," என்ருன்.

அன்னிலீ உடனே "ஐயா, பெண்ணுப் பிறந்தவர் ஒரு புருஷனை வரித்தான பிறகு மற்ருெரு புருஷனை இச்சித்தல் தெய்வ ஸம்மதமாகுமா? முதற் புருஷன் இறந்தானென்று நிச்சயச் செய்தியும் வரவில்லை. பாம்பென்று தாண்டவுங்கூடவில்லை! பழுதை யென்று மிதிக்கவுங்கூட வில்லை. பால்யத்திலுண்டான தர்ம ஸங்கடம் என் ஆயுள் முழுதுமே நிலைத்திருக்கிறது. தம்மால் நான் பெற்றிருக்கிற உபகாரங்களுக்குக் கைம்மாறு செய்தல் என் கடமை. என்னுடம்பின் தோலைத் தமது பாதத்திற்குச் செருப்பாகவும் தைத்துப் போட நான் கடமைப்பட்டவள். என் புருஷன்

ஊரை விட்டுப்போன எட்டு வருஷம் காத்திருந்த தாம் இன்னும் ஒருவருஷம் காத்திருந்தால் அவ்வருஷத்திறுதியில் தமக்குத் தக்க உத்தரஞ் சொல்வேன்" என்றாள். ரே, "ஒரு வருஷமா: நாலு வருஷமாகிலும் ஆகட்டும். எனக்குச் சம்மதம். இந்த வருஷக் கடைசியில் நான் மறுபடியும் உன்னை வந்து பார்க்கிறேன்," என்று சொல்லிவிட்டுப் பெண்ணையும் இட்டுக்கொண்டு வீடுசென்றான். அன்னிலீ அன்றுமுதல் இரவும் பகலும் உண்ணும்போதும் உறங்கும்போதும் தவிர்த்து எந்த ஸமயத்திலும் ஆர்டெனையே தியானம் பண்ணிக்கொண்டவளாயும், கடவுள் ஆர்டெனை க்ஷேமமாய்க் கரைகொணர்ந்து சேர்க்க வெண்டுமென்று பிரார்த்தித்தவளாயுமிருந்தாள். ஒரு வருஷம் ஒரு நிமிஷம்போற் போய்விட்டது. ஆர்டெனைப்பற்றி ஒரு ஸமாசாரமும் கிடைக்கவில்லை. ரேயும் அன்னிலீயிடத்தில் வந்து வாக்குத்தத்தத்தை நிறைவேற்றக் கேட்டான். அன்னிலீ இன்னும் ஒரு மாஸமாகட்டுமென்றாள். அதற்கும் ரே உடன்பட, மாதமானவுடனே ஒருவார ஸாவகாசம் கேட்டாள். தாமசப்படுத்துவதால் ரே எள்ளளவேனும் கோபித்தானில்லை. ஊரிலுள்ள வம்பர்களிற் சிலர், "சோற்றுக்குப் பறக்கிற அநாதையாகிய அன்னிலீ என்ன பிகு செய்கிறாள், பார்த்தீர்களா," என்றார். வேறுசிலர் "காசுக்கொழுப்பெடுத்த ரே அந்த அநாதைப்பெண்ணைக் கலியாணஞ் செய்கிறேன் என்று சொல்லி ஒரு வருஷமாய் ஏமாற்றி வருகிறான்: இது என்ன அநியாயம். பணக்காரரை நம்புகிறது மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவதுபோலாகும். வறுமை கொடிதென்பாராயினும் செல்வம் அதினினுங் கொடிதென்பதிற் சந்தேகமில்லை," என்றார்கள். இவ்விருவகைப் பேச்சுக்களும் அவ்விருவர் காதிலும் பட்டிருந்தது. இருவரும் அபவாதத்திற்குப் பயந்தவர்கள். மூன்று கெடுக்களும் கடந்தவுடனே அன்னிலீயின் மனமும் ஒருவாறு உறுதிப்பட்டது. அவள் ரேயை நோக்கி, "மகா புருஷனே, என்னைப்போன்ற தைனிய ஸ்திதியிலிருப்பவளிடத்தில் தங்களுக்குக் காதல் உண்டானதும் கடவுளின் செயல். தங்கள் அபீஷ்டப்படி நாளையே தங்களுக்கு மனைவியாகின்றேன். இதுவே பிரமாணம்," என்றாள். ரேயின் மனம் பூரித்து, முகமலர்ச்சிகொண்டு அன்னிலீயின் கையைப்பற்றிக்கொண்டு "மாதர் சிரோமணியே, உன்னை மனையாளாக அடைய முப்பது வருஷம் தவஞ்செய்தேன். அது இன்று ஸபலமாயிற்று. எல்லாம் வல்ல கடவுள் நம்முடைய கருத்தை நிறைவேற்றி வைப்பாராக" என்று சொல்லிவிட்டு வீடு சென்றான்.

வாத்யங்களும், மணிகளும், புரோஹிதர்களுடைய ஆசீர்வசனங்களும் முழங்க மறுதினமே அன்னிலீ ரேக்கு வாழ்க்கைப்பட்டாள். ஒருவருஷத்திற்கெல்லாம் ரேக்கு ஒரு பெண்பிறந்தது.

கலியாணஞ் செய்துகொண்ட பிறகு, சிறிது காலம் அன்னிலீக்கு யாரோ ஒருவன் தன்பின்னால்தொடர்ந்து வருவதுபோலத் தோற்றிக்கொண்டிருந்தது. அதனை ரேயிடத்தில் அவள் சொன்னபோது அவன் வெறுந் தோற்றமே ஒழிய யதார்த்தத்தில் ஒன்று மில்லையென்று அவளுக்குத் தைரியஞ் சொல்லித் தேற்றினான். என்றும் ஆர்டெனை மாத்திரம் லீ மறந்தாளில்லை.

நிரக்ஷரேகையிலுள்ள ஒரு தீவில் ஆர்டென் தேங்காயையும் வெள்ளாட்டு மாமிசத்தையும் புசித்துத் தாடி மீசை வளர்ந்து ஆட்டுத்தோலாடை யுடுத்துப் பார்வைக்குக் காட்டுமிருகாண்டிபோலாகி, ஜன்மதேசம்போகும் கப்பல் எப்போது வருமென்று எதிர்பார்த்திருந்தான். கடவுளையும் ஆங்கிலேய தேசத்தையும் தன் மனைவி மக்களையுமே எப்போதும் சிந்தித்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் குடிதண்ணீர் குறைந்துபோன கப்பல் ஒன்று ஆர்டெனிருந்த தீவுக்கு வந்தது. ஆர்டெனைப் பார்த்த கப்பலாட்கள் அவனைப் பேயோ பிசாசோ என்று நினைத்து ஓடினார்கள். ஆர்டென் கைசமிக்கை காட்டி வேண்டுவதென்னவென்று கேட்டான். அவர்களும் ஊமை ஜாடையாய் குடி தண்ணீர் வேண்டுமென்று தெரிவித்தார்கள். உடனே ஆர்டென் அவர்களையெல்லாம் மலை அருவி ஒன்றிற்கு அழைத்துப்போய் நல்ல ஜலத்தைக் காட்டினவுடனே அவர்களும் மனமிரங்கித் தமது பாஷையில் ஆர்டெனிடத்தில் சில பேச்சுக்களைச் சொன்னார்கள். சுயபாஷையைப் பேசும் ஜனங்களைப் பார்த்த நிமிஷத்திலேயே களிகூர்ந்து ஆர்டென் கூத்தாடினான். தன் சரித்திர முழுவதும் அவர்களுக்குச் சொல்ல, அவர்கள் கப்பல் தலைவனிடத்தில் சொல்லி ஆர்டெனைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு ஆங்கிலேய தேசத்தில் கொண்டு விடுவதாக வாக்களித்தார்கள். ஆர்டென் மனம் பூரித்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? கையிலே ஒரு தம்பிடியும் கிடையாது. உடுக்கக் கோவணமுமில்லை. கடவுளுடைய அருமைபெருமைகளை யார் அறிவார். ஆர்டெனுக்கு ஆடை, உணவு முதலானவைகளைக் கப்பற்காரர்கள் அளித்து, மூன்றுமாதத்தில் ஆங்கிலேய தேசத்தில் ஒரு துறையில் இறக்கினார்கள். தன்னூர்

போய்ச்சேர்கையில் ஐவேஜி யில்லாமை கண்டு கப்பலிலிருந்தவர்களெல்லாரும் தலைக்குக் கொஞ்சமாய் சந்தா எற்பாடு பண்ணிப் பத்து ஸவரென்கள் சேர்த்து ஆர்டென் கையில் கொடுத்தார்கள். ஆர்டெனும் அவர்களுக்கு நன்றி பாராட்டிக் களித்தான்.

ஆர்டென் ஒருநாள் மாலையில் தன்னூரெல்லைக்கு வந்தான். அன்று மழைக்காலிருட்டாயிருந்தது; ஒற்றையடிப்பாதையாய் வந்துகொண்டிருந்தான். தன் வீட்டண்டை வந்து பார்த்தபொழுது அங்கு விளக்கெரியவில்லை. தெருப்புறத்தில் அந்த வீட்டை விற்பதாக எழுதியிருந்த விளம்பரமொன்றை அருகிற் சென்று வாசித்துத் தெரிந்துகொண்டான். வெகு காலமாய்ப் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருந்த தன் மனைவி மக்கள் ஒருரையுங் காணாமலிருந்தபொழுது அவன் மனம் பதை பதைத்தது. ஆயினும் பக்கத்திலுள்ளார் ஒருவரையும் போய் அவன் விசாரிக்கவுமில்லை. அவ்வூரில் சோற்றுக்கடை ஒன்றுண்டு. அதை நோக்கிச் சென்று கதவையிடித்தான். கையில் பத்து ஸவரென்களிருந்ததால் கொஞ்காலமாவது வேலை ஒன்றுஞ் செய்யாமல் சாப்பிட்டுக் காலப்போக்குச் செய்யலாகும். அச்சோற்றுக்கடைக்காரி ஓர் கிழவி: அவள் பெயர் **மிரியாம்**லேன். ஸ்வபாவத்திலேயே பெண் பிள்ளைகள் அளவுக்குமிஞ்சிப் பேசுவார்கள். வயது முதிர்ந்தாலோ வாய் சற்றேனும் சும்மா விராது. சோற்றுக்கடைக்காரிகள் வம்புப் பேச்சு அதிகமாகப் பேசுவார்கள். தான் வந்து இரண்டு மூன்று நாள்வரையில் ஒன்றும் பேசாமலிருந்து விட்டு, நாலாநாள் ஆர்டென், தன் மனைவி மக்களைப்பற்றி வழிப்போக்கன் விசாரிப்பது போல் விசாரித்தான். அதற்கு அவள் அன்னிலீயின் சரித்திரத்தைச் சொல்லுங்கால் அவள்மேல் ஒரு குற்றத்தையும் சுமத்தாமல் ஆர்டென் கைவிட்டுப் போனமையால் மாத்திரம் அவள் பிலிப் ரே என்பவனை மணம்புரியும்படி நேர்ந்த தென்றுஞ் சொன்னாள். ஆர்டென் தாடி மீசையுடையவனா யிருந்தமையால் அவனை அடையாளங்கண்டு பிடிக்க ஒருவராலும் முடியவில்லை.

ரே இலவுகாத்த கிளிபோலானான் என்றோம். இப்போது ஆர்டென் அந்த ஸ்திதிக்கு வந்தான். வண்டி ஓடத்தின்மேலேறுவதும் ஓடம் வண்டியின்மேலேறுவதும் உலக இயற்கைதானே. அன்று முதல் ஆர்டென் அற்றைக்கூலி வேலைசெய்து சோற்றுக்கடையில் வந்து சோறுண்டு உறங்கியிருந்தான். லீயையும் தன் மக்களையும் பார்க்க ஆர்டென் இருதயம் தவித்தது. பிலிப்ரே வீட்டின் பின்புறத்தில் ஒரு தோட்டமும் அதில் ஒரு பெரிய வாதுளமரமும் இருந்தது. அதன் உச்சியிலிருந்து பார்த்தால் ரேயின் வீட்டின் உப்பரிகையில் நடக்கிற காரியங்கள் நன்றாய்த் தெரியும். ஒரு நாளிரவில் ஆர்டென் அந்தத் தோட்டத்துச் சுவரை எறிக்குதித்து மரத்தின்மேலேறி ஒரு கிளையில் உட்கார்ந்துகொண்டு உப்பரிகை நடவடிக்கைகளைப் பார்த்தான். அங்குக் கண்ணாடி விளக்குகளும் ஸலவைக்கல் மேஜைகளும் வைத்திருந்தன. பெரிய நாற்காலி ஒன்றில் பிலிப்ரே உட்கார்ந்து தனக்கும் லீக்கும் பிறந்திருந்த பெண் சிசுவைச் சீராட்டிக்கொண்டிருந்தான். அன்னிலீ அவன் பக்கத்தில் நின்றுகொண்டு முகமலர்ச்சியோடு தன் புதல்வியின் முகத்தையும் புதிய மணமகன்முகத்தையும் முறையே பார்த்துப் பார்த்துக் களித்து வந்தாள். ஆர்டெனுடைய மூத்தபெண் ஒரு கயிற்றில் வயிரமோதிரமொன்றைக் கட்டிக் குழந்தையினெதிரே ஆட்டி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். ஆர்டென் மகன் ஓர் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு சற்றுநேரம் படிப்பதும் சற்றுநேரம் சிறிய சகோதரியின் முகத்தைப்பார்த்துச் சிரித்தும் ஸந்தோஷமாயிருந்தான். அந்த உப்பரிகையில் அன்று இரவு ஸந்தோஷம் குடிகொண்டிருந்தது என்னலாம்.

ஆர்டென் பூததயை இல்லாதவனாயின் மரத்தை விட்டுக் கீழே இறங்கி உப்பரிகைக்குப்போய் அங்குள்ள எல்லோருக்கும் மனக்கலக்கத்தை உண்டாக்கியிருப்பான். பிறர் துக்கஞ்சகியாத இளகிய மனத்தனாயிருந்தபடியால் ஆர்டென் மரத்தை விட்டிறங்கி நிச்சப்தமாய் சுவரேறிக் குதித்துச்சோற்றுக்கடைக்கு வந்து வழக்கம் போல் உண்டுறங்கி வந்தான்.

மனத்தில் பாரமொன்றிருந்ததை எப்படியாவது இறக்க வேண்டுமென்ற எண்ணம் மாத்திரம் அவனுக்கிருந்தது. ஒருநாளிரவு மிரியாம்லேனைப் பக்கத்தில் கூவி இருத்தி அவளிடத்தில் “மிரியாம், உனக்கு நான் யாரென்று தெரிகிறதா?” என்றான். அவள் உற்றுஉற்றுப் பார்த்தும் தெரியாமையால் “ஒன்றுந் தெரியவில்லை” என்றாள். அப்போது அவன் “நான்தான் ஈனக் ஆர்டென்: அன்னிலீயின் முதற் புருஷன்: என் மக்களிருவர் மாத்திரம் உப்பரிகையிலிருப்பதைக் கண்டேன். நோய் கொண்ட பிள்ளை இறந்ததென்று நீ முன்னமே சொல்லிவிட்டாய். இந்த இரகசியத்தை நீ ஒருவருக்கும் என் உயிருள்ள வரையில் சொல்ல

லாகாது" என்றான். மிரியாம்லேன், "ஆர்டெனை நான் நன்றாயறிவேன். அவன் உன்னிலும் உயரமாயிருந் தானே. உன்னிலும் நிறத்தில் வெளுத்தவனாயிற்றே. உனக்குக் கூன் விழுந்துபோயிருக்கிறது. தாடி மீசை மிகுந்திருக்கிறது. எனக்கு அடையாளந் தெரியவில்லை. ஆனாலும் உற்றுப் பார்க்கிறேன்," என்று அவன் தலை யை இப்படியும் அப்படியும் திருப்பித்திருப்பிப்பார்த்து "ஆ, ஆ, வயதான எனக்குக் கண்பார்வை சிறிது மங்கலாயிருப்பதால் உன்னை நன்றா யறியவில்லை. நீ ஈனக் ஆர்டென் என்பதில் இப்போது ஐயமில்லை. நான் இப்போதே ஓடி நீ வந்திருப்பதை அன்னிலீக்குத் தெரிவிக்கின்றேன்," என்று வேகமாய்த் தெருப்புறத் தில் போனாள். அப்படிப் போனவளை ஆர்டென் இர ண்டு கையையும் பிடித்துக்கொண்டு "மிரியாம், நீ என க்குத்தாய் போன்றவள். நான் சிறுவனாயிருந்த காலம் முதல் உன்னை அறிவேன். உன் கடைக்குச் சாப்பிட வருகிறவர்களை உன் மக்களைப்போல் பாதுகாத்து வந் திருக்கிறாய். என்னாயுளில் நான் பட்டிருக்குங் கஷ் டங்களுக்குக் கணக்கு இல்லை. மனித ஜன்மமெடுத்த வரெல்லாம் செய்யவேண்டிய காரியம் ஒன்றே: அதா வது, தன்னைச் சுற்றியிருக்கும் ஸகல பிராணிகளுக்கும் ஸந்தோஷத்தை விருத்தி பண்ணவேண்டியது, "பாவி" என்று ஒருவரும் சொல்ல இடங்கொடுத்தலாகாது. என்னாயுளில் விசேஷ பாகமும் இந்தக் கொள்கை நழு வாமல் கழிக்கப்பெற்றது. இன்னும் நானிருப்பது மூன்றுநாள்தான். அதற்குள் ஆனந்தக்கடலில் ஆழ்ந்து சுகித்திருக்கும் என் பண்டை மனைவி, மக்கள், புதிய மணமகன் இவர்களுக்குத் துக்கம் விளைவிப்பா னேன்? அது பாவம்: நான் செய்யேன்: நீயும் பிர மாணமாய் நான் இறக்கும்வரையில் ஒருவரிடத்திலும் இந்த இரகசியத்தைச் சொல்வதில்லை என்று நமது வேத புத்தகத்தை வைத்து ஆணை இடு," என்றான்.

மிரியாம் சற்றுயோசித்து "நீ ஆர்டென் தான் என்ப தற்கு உன் வாக்கையும் என் அபிப்பிராயத்தையும் தவிர்த்து வேறு ருஜுக்களுண்டா" வென்றாள். அப் போது ஆர்டென் தன் சட்டைப்பையில் வைத்திருந்த ஓர் ஸம்புடத்தை எடுத்துத் திறந்து "இதற்குள் வைத் திருக்கும் கேசம் எனது நோய்கொண்ட மூன்றாவது பிள்ளையின் தலையிலிருந்து எடுக்கப்பட்டது. நான் சீனாவுக்குப் புறப்பட்ட தினத்திற்கு முதல் நாளிரவில் கத்தரித்துப் பத்திரப்படுத்தினது. இது அன்னிலீக்கு மாத்திரம் தெரியும். நானிறந்தபிறகு ஸம்புடத்தை அவளிடத்திற் கொடுத்து என் வரலாற்றையும் சொல் வாயாக. என் பிராணனுள்ள வரையில் ஒருவர் மனமும் நோகும்படி ஒன்றையுஞ் செய்யேன். இது உறுதி, இது உறுதி" என்று கைதட்டிச் சொன்னான். புருஷர்களே இரகசியத்தை வெளியிடாமலிருப்பது துர்லபம்: ஸ்த்ரீ களுக்கு இரகசியத்தை வேறொருவரிடத்திற் சொல்லா விடின் வயிறு வெடித்துப்போம். மிரியாம் அகோர பிரமாணஞ் செய்துவிட்ட படியால் சும்மா விருந்தாள் ஆர்டென் சொன்னபடியே மூன்றாநாளிரவில் அவ னுக்கு உடம்பு சற்று அசௌக்கிய மென்றான். மிரியாம் லேன் அவனைத் தன் பிள்ளைபோலெண்ணி "அப்பா, ஈனக், உனக்கு எவ்வகையான ஆறுதலை நான் செய் வேன்? அதைச் சொல்லு," என்றாள். ஈனக் ஆர் டென் "தாயினும் சிறந்தவளே, எனக்குப் பிராண வியோகம் வந்தவுடன் நால்வருக்கும் சொல்லியனுப்பல் வேண்டும். என் சரித்திரத்தை முற்றிலும் சொல்: ஸம்புடத்தை அன்னிலீ யிடத்திற் கொடு. எனது ஆசீர்வாதங்களையும் அவர்கள் எல்லோருக்கும் அறிவி: இறந்துபோன என் மகனிருக்கும் சொர்க்கலோகத் திற்குப் போகின்றேன். அங்கும் நமது பரம பிதா வாகிய கடவுளின் கிருபையை எல்லோரும் பெற வேண்டியதற்கு முயற்சி செய்கின்றேன். நான் அஜாத சத்ரு. பிறருக்கு இதுகாறும் தீங்கை எண் ணினதேயில்லை. இனியும் அதை நினைப்பதில்லை. உனக்குக் கடவுள் அனுக்கிரகம் செய்வாராக" என்று சொல்லி ஒரு பெரிய மூச்சுவிட்டான். மிரியாம் லேன் உற்றுப் பார்த்தபோது ஆர்டென் மூச்சு விடுவதாகத் தோற்றவில்லை. துராத்மாக்கள் விக்கலும் கக்கலுமாய்ப் பக்கத்திலுள்ளோர் வெறுப்படையும்படி மரண வேத னைப் படுவார்கள். அவ்வுபத்திரவங்கள் ஒன்றுமில்லா மல் ஆர்டென் அசைதியாய்த் தூங்குவது போலக் காலை நீட்டிக்கொண்டு பரமபதத்தை யடைந்தான்.

மிரியாம் லேன் மறுநாள் அன்னிலீக்குச் சொல்லி யனுப்ப, ஊரரெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஈனக் ஆர் டெனுடைய ஈமக்கடன்களை அரசர்க்குச் செய்வது போல வெகு ஆரவாரத்துடனும் அன்போடுஞ் செய் தார்கள்.

(முற்றிற்று.)

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

**கொன்ற பாபம் தின்றால் போகும்.**—இது ஸாதாரணமாக எல்லோர் வாக்கிலும் இருக்கும் பழமொழி. மாம்ஸபக்ஷணம் செய்பவர்களிடம் 'ஏன் அநியாயமாகப் பிராணிகளை ஆகாரத்தின் நிமித்தம் கொல்லவேண்டும்; அது கொடியபாபம் அல்லவா?' என்றால் ; அவர் வாய் கூசாது, கொன்ற பிராணியின் மாம்ஸத்தை உபயோகப்படுத்திவிட்டால் கொன்ற பாபம் போய்விடும் ; தம்மை வந்து தாக்காது என்று கூறுவது வழக்கம். பிறரைக் காக்கும் விஷயத்தில் இவ்வாறு செய்தால், ஒருவனுக்குக் கொன்றதனால் உண்டாகும் பாபம், கொன்ற பிராணியின் மாம்ஸத்தால் பிறரைத் திருப்தி அடையும்படி செய்த புண்யத்தால் தொலைக்கப்படும் என்று கூறலாம். அப்பொழுது இந்தப் பழமொழிக்குப்பொருள், கொன்றபாபம் அதன் மூலமாகச் செய்யும் பரோபகாரத்தால் நீங்கும் என்பதாகும். இப்படி இருந்தும் இந்த அர்த்தத்தைக்கூட 'பசுவைக்கொன்று செருப்பு தானமும் செய்வதால் என்னபயன்?' என்ற பழமொழி மறுக்கின்றது. ஆகவே இப்பழமொழி ஸரியான பொருளில் உபயோகப்பட்டு வரவில்லை. இதன் பொருளை ஸாதாரண ஜனங்கள் அறிந்திருப்பதாகவும் காணப்படவில்லை.

இப்பழமொழியில் கொல்லுதல் என்னும் தொழில் ஸகலவித கர்மத்திற்கும் குறியாக நிற்கின்றது. இம்மாதிரியே தான் 'நான் கொல்லுகிறவன், நான் கொல்லப்படுகிறவன் என்று உணருபவர் இருவரும் உண்மையை உணர்ந்தவர் அல்லர்' என்ற பகவத்கீதா வாக்கியத்திலும், கொல்வது மற்றைய கர்மங்களைக் குறிப்பிக்கும் ஓர் கர்மம். பாபம் என்பதனால் புண்யம் என்பதையும் வருவித்துக்கொண்டு செய்த கர்மங்களின் பலன்கள் என்று கொன்றபாபம் என்ற தொடருக்குப் பொருள் படுத்தவேண்டும்.

தின்றால் போகும் என்ற தொடரை எடுத்துக் கொள்ளுவோம். தின்னுதல் என்பது வாயின்தொழில், இங்கு மற்றைய இந்திரிய வ்யாபாரங்களையும் அடக்கியுள்ளது. இதே மாதிரியான விரிவான பொருளில் தான் தாயுமானவரும் 'எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்றார். இங்கு உண்பது உறங்குவது என்பதைப் புஜிப்பதும் தூங்குவதும் என்பதாகக் கொண்டால் ; எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையும் 'சாப்பிட்டவுடன் தூங்கவேண்டும், தூங்கி எழுந்ததும் சாப்பிடவேண்டும்' என்று கூறிய சிஷ்யப்பிள்ளை கதையாக முடியும். உண்ணுவதும் உறங்குவதும் ஒருநாளில் சில காலங்களில்தான் நடப்பவை. ஆகவே இவைகளே மானிட வாழ்க்கை, வேறு அதில் ஒன்றுமில்லை, என்று தாயுமானவர் வாக்குக்குப் பொருள் கூறுவது பொருந்தாது. ஆகவே அந்த வாக்கிற்கு 'திருப்தி வருகிறவரை இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிப்பதும் பின்னர் விஷய ஸுகங்களில் கொஞ்சநாழிகை வெறுப்புத் தட்டி அவைகளை அனுபவியாது விட்டிருப்பதுமே மாறிமாறி நடந்துகொண்டு வருவது. இது தான் மானிட வாழ்க்கையின் உண்மையான ஸாரம்' என்று பொருள் கொண்டால்தான் பொருந்தும். இதுபோல இப்பழமொழியிலும் 'தின்றால்' என்பதற்கு 'அநுபவித்தால்' என்று பொருள் கொண்டு, இப்பாகத்திற்கு 'அனுபவித்தால்தான் தொலையும்' என்று பொருள் படுத்த வேண்டும்.

ஆகவே இப்பழமொழிக்கு 'ஒவ்வொரு கர்ம பலனையும் அனுபவித்தே தொலைக்கவேண்டும். இல்லாவிடில் அது தீராது' என்பது பொதுவான பொருள். அடாது செய்தால் படாதுபட்டே தீரவேண்டும் என்பது இதன் கருத்து.

இந்த அனுபவம் இரண்டு விதமாக இருக்கலாம். ஜன்மாந்தர அனுபவம் என்றும் ; இந்த ஜன்மத்திலேயே தண்டனை, பச்சாத்தாபம், இவைகளால் வரும் அனுபவம் என்றும் இருவகைப்படும். முதல்விதம் அதிர்ஷ்டமான விதம். அது இன்னவிதமாக இருக்கும் என்று இப்பொழுது கூறமுடியாது. பிந்தியதனால் ஏற்படக் கூடும் பாப விமோசனமே நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இதில் தண்டனையைக் கூட ஸரியான அநுபவம் என்றுகூற இடமில்லை. அதுபலாத்காரம் போன்றதாதலால் அவ்வளவு சிறந்த பாபவிமோசனமான அனுபவம் என்று கூற இடமில்லை. ஆதலால் பச்சாத்தாபமே அநுபவம் என்பதன் முக்யகருத்து. ஆகவே 'கொன்ற பாபம் தின்றால் போகும்' என்பதற்கு 'எந்தக் கொடிய கர்மம் செய்தபோதிலும் உள்ளபடி பச்சாதாபப்பட்டாலன்றி அதனால் உண்டாகிய பாபம் நீங்காது' என்றும் பொருள் கொள்ளலாம். இந்த ஸந்தர்ப்

பத்தில் யக்ஷன் 'பச்சாதாபத்தின் லக்ஷணம் என்ன?" என்று கேட்ட காலத்தில், 'பச்சாதாபத்தின் லக்ஷணம் பாபத்தை மறுமடியும் செய்யாமை' என்று தருமபுத்திரர் கூறிய விடையை மறந்து விட்டால், முற்கூறிய விஷயங்கள் எல்லாம் வெறும் வாசாஞானமாக முடியும்.

இந்தவிஷயமாக மஹாபாரதம்சாந்திபர்வத்தில் **சங்க லிஹிதர் உபாக்யானம்** என்ற ஓர் கதையும் உண்டு.

முன்காலத்தில் **சங்கர்** என்றும் **லிஹிதர்** என்றும் இரண்டு ஸகோதரர்கள் இருந்தார்கள். இவர்கள் இருவருக்கும் இரண்டு வேறான ஆச்ரமங்கள் இருந்தன. அவைகளில் நல்ல பழங்கள் கொடுக்கும் மரங்களிருந்தன. ஒருநாள் லிஹிதர், சங்கர் ஆச்ரமத்தில் இல்லாத ஸமயத்தில் அங்குத் தற்செயலாக வந்து, அங்குள்ள மரங்களில் இருந்த பழங்களை முன்பின் யோசிக்காது தின்னத் தொடங்கிவிட்டார். இப்படி இருக்கையில் சங்கர்வந்து பார்த்து, 'நானில்லாத ஸமயத்தில் என் பொருளை அபஹரித்ததால் நீ திருடனாய் விட்டாய். ஆகையால் இவ்வூர் அரசன் **ஸுத்யும்னனிடஞ்** சென்று தண்டனை பெற்றுப் புனிதனாகிவா' என்று சொல்லி அனுப்பினர். லிஹிதர் அவ்வாறே அரசனிடம் வந்து தான் கேட்பதைக் கொடுப்பதாக அவனிடமிருந்து வாக்குப் பெற்றுக்கொண்டு, தனக்குத் திருடனுக்குத் தகுந்த தண்டனை விதிக்கும்படி கேட்டார். அரசன் இவர் நேர்மைக்கு மெச்சி மன்னித்து விட்டதாக எவ்வளவோ மன்றாடினான். இவர் ஒப்பவில்லை. முடிவில் அரசன் திருடர்களுக்குச் செய்வது போல லிஹிதர் கைகளை வெட்டிவிட்டான். லிஹிதர் சங்கரிடம் வந்து, தான் தண்டனை பெறறதாகச் சொல்லித் தன்னை மன்னிக்கும்படி கேட்க, அவர் அருகாமையிலுள்ள 'பாகுதா' நதிக்குப் போய் ஸ்நாநம் தர்ப்பணாதிகள் செய்து நீ செய்த பாவத்தை மறந்துவிடு, என்று கட்டளையிட்டார். அவ்வாறே செய்யக் கைகள் முன்போல முளைத்து விட்டன. மிகுந்த ஆச்சர்யத்துடன் சங்கரிடம் வந்து நடந்ததைக்கூற 'அப்பா! நான் உன்னைத் தண்டிக்க ஏற்பட்டவனல்லன். அரசன் இந்தத்தொழிலைச் செய்து மேன்மை அடைந்தான். நீயும் செய்தது பாவம் என்று துக்கித்தலும், தண்டனையாலும் பரிசுத்தமாக உனக்குக் கைகளும் முன்போல முளைத்தன' என்றார்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## த்ரௌபதி அல்லது மனத்திண்மை

### 7. பழம்பொருந்து காதை

**கா**ம்யக வனத்தில் கண்ணபிரானுடைய அருளாலும், ஸூர்யன் தந்த பாத்திரத்தின் உதவியாலும், ப்ராஹ்மண பரிவாரம் தம்மைச் சூழ்ந்து வாழ பெருமையடைந்து பாண்டவர்கள் ஸுகமாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குத் தாம் இருப்பது ஓர் காடாகவே படவில்லை. மரம் அடர்ந்து இருள்நெருங்கிய காட்டிலிருந்தாக அவர்கள் எண்ணவே இல்லை. தனித்து வாழ்ந்தாலன்றிக் காட்டின் பயம் எவ்வாறு தெரியும்? கல்லும் முள்ளும் பரலும் ஓர்பால் காலை வருத்த, ஸூர்யனது வெளிச்சமில்லாமல் எங்கும் இருளடர்ந்து மரக்கூட்டங்களின் நடுவில் அகப்பட்டு புலிமுதலிய கொடிய மிருகங்கள் பயத்தை ஊட்டி மனதைக் குழப்பினாலன்றி மனங்குறையில் மூழ்கி மயங்குவதாகுமா? மூச்சுவிட்டால் தன்னை எந்த மிருகம் தேடிவருமோ என்று ஒடுங்கி இருந்தாலல்லாது, நடுக்கம் எவ்வாறு உண்டாகும்? காலில் முள் பாய்ந்து, ரக்தம் ஒழுக, உணவில்லாமல் இரவும் பகலும் தனித்து, ஒன்றுந் தோன்றாமல், கதியற்றவனாகி, எவ்வழிப் போனால் ப்ராணத்திற்கு என்ன கேடு வருமோ என்றும், எந்தப் பொந்தில் எந்த மிருகம் ஒளித்து இருக்குமோ என்றும், மனம் நடுங்கி, குழைந்து, காலடி வைக்கவும் மூச்சு விடவும் தைர்யமில்லாமலும், காற்றில் இலை அசைந்தாலும் ஏதோ தன்னைக் கொல்ல வந்து விட்டதென்று எண்ணி எண்ணி ஏங்கியும் நடுங்கியும், உயிரைக் காப்பாற்ற முயன்று, ஊக்கம் அழிந்து, முகத்தின் களை நீங்கி, சிந்தனையே மேலிட்டு, பித்துப் பிடித்து செய்வதொன்றும் அறியாமல் மதி மயங்கி, அலைந்து, நடைப்பிணமாகி விளங்கினாலல்லவா அவனுக்குக் காட்டின் கஷ்டம் தெரியும். தனியாகக் கடல்சென்றால் நீராடுவதற்குப் பயமில்லாமலிருக்கமுடியுமா? கூட்டங்கூட்டமாகச் சென்றால் அலைமேல் அலைகடந்து அப்புறம் போயும் நீராடுவார்கள். அவர்களுக்கு அது ஓர் விளையாட்டாகவும் மனோஹரமாகிய செயலாகவும் தோன்றும். அதுபோல் தனியாயிராது தம்பிகளோடும், மனைவியோடும், நேசர்களோடும், வேண்டிய துணைகளோடும், பொழுதைப் போக்க நல்ல நல்ல கதைகளைக் கூறியும், மனத்தினது நிலைமை குன்றிய காலத்தில் ஹிதம் கூறியும் உத்ஸாகமூட்ட, ப்ராஹ்மண

ச்ரேஷ்டர்களின் கூட்டமும் இருந்தால் கஷ்டமெப்படித் தெரியும்? அடர்ந்து பழம் குலுங்க நிற்கும் மரங்கள் கிளிக்கூட்டத்திற் கிடம் தந்து, குயிலும் வானம்பாடியும் இனத்திற்குத் தகுந்தவாறு நாதம் எழுப்பி, பஞ்சமஸ்வரத்தில் இனியகானம் செய்யவும், மலர் கொழித்து, வாஸனை வீசி, பசேலென்று சோபையை இலைகள் காட்ட, இளம் தென்றற் காற்று உலாவ, அசைந்து அசைந்து ஆடும் மரக்கூட்டத்தின் இடையில், ஜாஜி முதலிய கொடிகள் தவழ்ந்து, அவற்றின் வாஸனை மலர்களின், மனத்திற்கு உகந்த மணத்தை அனுபவித்தும், என்றும் வற்றாது பனிக் கசியக் கசியப் படர்ந்து வரும் கங்கா நதியின் பெருக்கத்தின் வளமையால் ஸுகமாக ஸ்நாநபானங்களுக்குத் தமக்கு உதவுவதைப் பெற்றும், என்றும் தேடாது, கவலைப் படாது, ஆலோசனை இன்றி, ஸூர்யன் தந்த பாத்திரத்தின் வளமையால் உண்டும், பொழுதுபோகாத காலங்களில் மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் கதைகளைக்கூறிப் பொழுதைப்போக்கவும் பெற்று, புலி முதலிய விலங்குகளை நாசஞ்செய்ய வில்திறமை வாய்ந்தவர்களாய், எதிர்ப்பதற்கு நாட்டிலிருப்பினும் காட்டிலெதிர்ப்பவரின்றி வாழ்ந்தவர்களுக்குக் கஷ்டமின்னதென்று தெரியுமோ?

அது எவ்வாறு தெரியும்? காட்டின் அழகையும், அதினிடையுள்ள மரங்களின் செழுமையையும், பூக்களின் விதங்களையும், வாஸனையின் மேன்மையையும், மலையின் ஏற்றத்தையும், அதில் வளர்ந்தோங்கும் மரக்கூட்டத்தின் வரிசை ஒழுங்கையும், உச்சியிற்பொருந்திய வெள்ளிக் கவசம் போன்ற பனியின் திரளையும், வெள்ளிக்கம்பிகள் இடை அமைந்தாற்போல வழிந்து வரும் நீர்ப்பெருக்கையும், அந்நீரில் ஸூர்யனது வொளியின் ப்ரதிபலனத்தால் உண்டாகும் ஒளி மிகுதியையும், மரங்கள் அசைந்தசைந்துண்டாக்கும் சப்தத்தையும், பக்ஷிகளின் குரலையும், காற்றில் பறந்த ஸூர்யனது வொளியில் சிறு சித்ரங்கள் பறப்பதுபோல் பறக்கும் தட்டாரப்பூச்சிகளின் அழகையும், நீரோரம் வளரும் புல்லின் செழுமையையும், மனிதனது கவலை சற்றுமின்றி மிக உயர்ந்து வளர்ந்து இருக்கும் பலமரங்கள் இவற்றின் வளர்ச்சியையும், அவைகள் இடையே பொதிந்து கிடக்கும் பழவர்க்கங்களையும், அப்பொழுது மலரும் பூக்கள் கொழிக்கும் பசுந்தேனையும் விமரிசையாகக் கண்டும், உண்ணத் தகுந்தவைகளை உண்டும் அனுபவிக்கத் தகுந்தவைகளை அநுபவித்தும் வாழ்ந்தால் கஷ்டமெப்படித் தெரியும். அது தெரியாது, ஓர்விதமாகிய ஆநந்தம் உண்டாகிவிடும். அதுவும் மிகுந்து ஓர்விதப் பித்துப் பிடித்துவிடும். பின் எல்லாவற்றையும் அதன் வழியே அடையவேண்டும் என்னும் ஆசை உண்டாகும். அது எப்பொழுதும் தனக்கு வேண்டியவை வந்துகொண்டிருப்பதால் தனக்கு ஏதேனும் கிடைக்காவிடினும் அதை அடையும்படி யத்னப்படவும் செய்யும். இந்த நிலைமையில் மனத்தை ஜயிக்காது மனத்தின் வழியே ஐம்புலன்களும் இழுக்கப்படும். அவ்வாறு தனக்கும் தெரியாது தனக்கு ஆகாத பொருளை விசாரியாதே அடைய விரும்புவது மனத்தின் வழி.

அதுபோலவே காம்யக வனத்தில் ஸுகமாகக் காலங் கழித்துவந்த த்ரௌபதி இயற்கை அழகில் மனமுழுதையும் அலையவிட்டு, களித்து, ஆனந்தித்துக்கொண்டு இருந்ததால் மனத்தின் நிலைமை சாயும்படியான இடமுண்டாக நேர்ந்தாலல்லது ஆஸ்சரியமாகாது. மரங்களின் பழங்களையும், மலர்கள் உருக்கும் தேனையும் உண்டு தேக்கி வந்ததால், பழம் நிறைந்த மரமெதைக் கண்டாலும் அப்பழங்களை உண்ணவேண்டும் என்று எண்ணம் வருவது ஆஸ்சரியமாகாது. தன் மனத்தில் ஒரு எண்ணம் உண்டாகிவிட்டால் வேறு எண்ணம் உண்டாகாது மயங்கிவிடுவதும் ஆஸ்சரியமாகாது. அது மனத்தின் மயக்கம். ஓர் எண்ணத்தில் மனமயங்க மற்றோர் எண்ணம் தோன்றாது மயங்குவது இயற்கை. இதையே ஞானிகள் மாயை என்பர். மரத்தால் செய்யப்பட்ட யானையை, யானை என்று வெருண்டவர்களுக்கு அது மரமென்று தோன்றாது. அதை மரமென்று தெரிந்தவர்களுக்கு அது யானை என்னும் தன்மை மனத்தில் தோன்றாது.

த்ரௌபதிக்கும் அவ்வனத்தில் ஓர் நெல்லி மரத்திலிருந்த பழுத்த கனியைக் கண்டதும் நாவில் சுவைக்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிவிட்டது. அது யாருடையது, அதைத் தான் அடையலாமோ என்னும் எண்ணங்கள் அவளுக்குத் தோன்றவில்லை. எண்ணம் உண்டானதும் அர்ஜுனன் அருகிருப்பதைக் கண்டு "எனக்கந்த நெல்லிக்கனி வேண்டும். அப்பழத்தைப் பார்க்கும்பொழுதே என் நாவில் இனிப்பு உண்டாகின்றது" என்று கேட்டுக்கொண்டாள். அவனும் யோசி

யாது, தன் வில்லை வளைத்து அப்பழத்தை அம்மரத்தி லிருந்து கீழ் அறுந்து விழும்படி எய்தான்.

பழமும் கீழ் வீழ்ந்தது. "ஆ! என்ன நினைத்து என்ன செய்தாய்! இனி என்னகேடு விளையுமோ" என்னும் மொழிகளும் அவர்கள் இருவருடைய காதி லும் வீழ்ந்தது. அர்ஜுனன் திரும்பிப் பார்த்ததும் "என்ன காரியம் செய்தாய்! இந்நெல்லிக்கனி மித்தி ரர் என்னும் மஹா முனிவருக்காகக் கனியா நிற்கின் றது. ஆதலால் நாங்களும் அப்பழத்தைக் கண்ணு லும் பாரப்பதில்லை. நீயோ அப்பழத்தை அறுத்து வீழ்த்திவிட்டாய். அம்முனிவர் உன்னைக் கண்டால் என்ன செய்வர்?" என்று முனிவர்களது கூட்டம் கூறிற்று.

கேட்டதும் சிந்தாகிராந்தனைத், தர்மர் முன்வந்து அக்கனியை வைத்து "நெருப்பிற் பிறந்த இவளு டைய மொழியைக்கேட்டு மதிகெட்டுச் செய்யத்தகாத வேலை இதை நான் செய்தேன்" என்றான் அர் ஜுனன்.

"காட்டில் வந்து காய் கனி கிழங்கு இவைகளை யேனும் தின்று ஸுகமாகக் காலத்தைக்கழித்து நாம் பிரியாதிருக்கலாம் என்றாலும், ஒருநாளாவது ஏதா வது ஒரு கஷ்டத்தை உண்டாக்காது இருக்கக்கூடா தோ? இது இப்படியே நமது விதிபோல் சேர்ந்தால், இனி என்னதான் செய்வது?" என்றார் தர்மர்.

"ஒன்று நிச்சயம்! அம்முனிவர் நம்மைக் காண்பார். ஆனால் நம்மைச் சபிக்காது விடவேமாட்டார். அவர்க்கு வந்ததும் இந்த ஸங்கதி தெரியாமல் இருக்கமுடியாது. அவர் மனத்தில் கெட்ட எண்ணம் உண்டாவதற்கு முன்னமே அம்மித்திரமஹாமுனிவரது காலில் வீழ்ந்து நாம் செய்த தப்பிதத்தைச் சொன்னால் கோபித்துக் கொள்வாரோ? மாட்டார். நம்மைப்பொறுத்து ஆள் வர். அவர் ஐம்பொறிகளை அடக்கிய மஹான் ஆகை யால் நீர் சரணாகதமாகச் சொல்லும். உம்முடைய குற்ற மற்ற மொழியைக் கேட்டதும் கனிந்து பொறுத்திடு வர்" என்று வீமன் ஆழ்ந்து பதில் உரைத்தான்.

இதைக் கேட்டதும் அர்ஜுனன் "அண்ணா! மன வருத்தம் வேண்டியதில்லை. பன்னிரண்டு வருடங் களுக் கொருமுறை உண்ணும் அக்கனியை அறுத்த வன், யான். என்னையன்றி யாவரை அவர் சாபமிட லாகும். ஆகையால் உமது மனக்குழப்பத்தை விடுங் கள்" என்றனன். "அழகிது! நன்று! நன்று! ஓர் பெண் கூறியதை நன்றாக எண்ணாது இவ்வேலையைச் செய்துவிட்டாய். நீயும் சாபத்திற்குட்படத் துணிந்து விட்டாய். இனி உன்னைப் பிரிந்து நாங்கள் இருப் பது அது அழகு ஆகுமல்லவா?" என்று தருமர் கூறினர்.

இதற்குள் நகுலன், இதனால் தீங்கு நேரிடுமென் றெண்ணி "அண்ணா! இனி நீங்கள் வீண் ஆலோசனை செய்வதில் ப்ரயோஜனம் இல்லை. 'பட்டகாலிலே படும் கெட்டகுடியேகெடும்' அதைப்பற்றி நாம்யோசிப்பதில் பலன் இல்லை. அர்ஜுனன் சாபத்தால் இறப்பது! நாம் அவனிறந்தான் என்னும் தாபத்தால் மாய்வது! அழகிது! நமக்கவ்வாபத்தெல்லாமும் வேண்டுமோ! நமது கோபாலன், கருணாநிதி, குழந்தைபோல் நம் மிடந் தவழ்ந்து விளையாடும் எமதுநண்பன் கண்ணன், அழியா முதல்வன்,ஆபத்பாந்தவன் நம்மைக் காப்பதே வ்ரதமாக நிற்க, அவரைத் துதித்து இன்பமடைவதை விட்டு என்ன செய்யா நிற்கின்றோம்" என்றான்.

இதை எல்லாங்கண்ட த்ரௌபதி தன்னால் நடந்த இதுவென்று அறிந்தவளாகி மனமழிந்து வாய் புதை த்து திகைத்துத் மனங்குழம்பி திக்ப்ரமையாக நின்றாள். அவள் செய்தது எல்லார்மனத்திற்கு வருத்தமுண்டாக் கியதைக் காணக்காண அவள் மனம் புகைந்து புகை ந்து எரிந்தது. பெருமூச்சு வாங்க தனக்குத் தோன்றாது அவ்வைவரையும் நோக்கி "கொடியேன்! நான் என்ன செய்தேன். என்னுடைய நாவினது சிற்றின்பத்தை நாடி இப்பெருந்துன்பத்திற்காளாயினேனல்லவா? பெண்புத்தி பின்புத்தி, என்பதற்கு இணங்க அன்றே நடந்து விட்டேன். என்னால் அல்லவா உங்க ளுக்கு இவ்வளவு மனவருத்தமும் கஷ்டமும் உண் டாகியது. இதை எண்ண எண்ண என்மனம் வேகின் றது. என்செய்வேன்" என்று கண்ணில் நீர்த்ததும்பி ஆறாக வழிய துன்பமடைந்துசெய்வது இன்னதென்று தெரியாது மயங்கினாள்.

இதற்குள் தர்மரும், நகுலன் கூறிய மொழிகளையே உபதேச மொழியாகக்கொண்டு கண்ணபிரானைத் துதி செய்ய, பாற்கடலையும், சேஷ சயனத்தையும்விட்டு ஆயர்பாடியில் குரவையாடி விளையாடிய எம்பெரு மானும், வனமாலையினுடைய தேன் வண்டிற்கிடந் தந்து தனது வரவை எச்சரிக்கத் தர்மர் முன்தோன்றி னார். தர்மரும் நிகழ்ந்ததைக் கூறினர். செவிகொடுத்துக் கேட்ட கண்ணனும், "நீங்கள் ஐவரும், த்ரௌபதியும், உம்முடைய மனத்தில் உள்ள உண்மையாகிய எண்ண த்தை வெளியிடுவீர்களாகில் அப்பழம் முன் இருந்த இடம் அடைந்து முன்னின்ற நிலைமையை அடையும்" என்றார். அவரும் கூறலாயினர்.

"பூதனையுடைய உயிரைப் பாலாக உண்ட பெரு மானே! தர்மம், வாய்மை, பொறுமை இவைகள் வழியே என்மனஞ் சென்று அவற்றிற்கு ஆள் ஆகட் டும்! நீலமேகம்போன்ற திவ்ய தேஜஸை உடைய எம்பெருமான், என் மனத்தை இழுத்து அதைத் தனக் காளாக்கிக் கொள்வானாக! பாவம் பழி இவை எனது மனத்தை விட்டோடட்டும். கீழ்மையோர் தாழவேண் டும்" என்பதே என் மனத்தில் ஊன்றி நிற்கும் உண்மையான எண்ணம் என்றார் தர்மர்.

"பிறர் மனைவியை எனது தாயென்றும், பிறரது பொருளைக் கண்டால் அதை அடைவதற்குத்தகாத எட்டிபோல் வெறுக்கத்தக்கதென்றும், அன்னியரைப் புறங் கூறுதல் பெருமையாகாதென்றும், பிறர்களுடைய

துன்பத்தை என்னுடைய துன்பமே என்றும் எண்ண வேண்டிய பாவனைகளை எத்தகைய தர்ம ஸங்கடங்களையும், பெருந்துன்பங்களையும், எண்ணாது, மனத்திடங் கொண்டு திடச்சித்தனாக ஒழுகவேண்டிய தென்பதே என் முடிந்த நினைவு" என்றான் வீமன்.

"ஞான நிலயமாக விளங்கும் எம்பெருமானே! சதைத் துண்டங்களால் அமைந்த இந்த உடலாகிய கூண்டைத் துறந்து உயிர் துறந்து விடினும் மானம் என்பதொன்றே யாவர்க்கும் பெருமையும் மதிப்பும் இவை முதலாகிய அனைத்தையும் தரும். உயிர் நீங்குந் தன்மைபோல் மானத்திற்கென்று மழிவில்லை. உலக முள்ளவரை நிலையுள்ளது. உயிர்க்கு ஹீனமே குணம். ஆகையால் உயிரினும் மானமே சிறந்தது. உயிர் நீங்கினும் மானத்தைக் காப்பாற்றலே எனது திடமாகிய எண்ணமும் நம்பிக்கையும்" என்றான் அர்ஜுனன்.

"நற்குடியில் பிறந்திருப்பினும் என்ன? அன்று அழகே திரண்டு உருவங்கொண்டாலுந்தான் என்ன? குபேரனாக வாழ்ந்தால்தான் என்ன? மற்றெந்த வளமை இருப்பினுந்தான் என்ன? அதை யான் கவனியேன். கல்வியும் அதற்குத் தக்க ஞானமும் இல்லாதவனை ஓர் சிறு துரும்பென எண்ணுவது என் இயற்கை" என்றான் நகுலன்.

"ஒவ்வொருவற்கும் உறவினர் அறுவர். வாய்மையே தாய். வரம்பிட முடியாத ஞானமே தந்தை. தர்மங்களே உடன்பிறந்தவர். கருணை ஒன்றே நண்பன். சாந்தம் தான் மனைவி பொறுமையே அவளிடம் பெற்ற பிள்ளை. இவ்வறுவரே எனது உறவினரன்றி வேறெவரையும் உறவினராக எண்ணுவதில்லை" என்று தன்னுடைய ஹ்ருதயத் தாமரையின் பசுந்தேனை யாவருமுண்ண ஸஹாதேவன் திருவாய்மலர்ந்தனன்.

"பஞ்சேந்த்ரியங்கள் மனத்திற்கிசைந்தவாறிருக்க ஐவர் கணவர்களை அடைந்திருந்தும், வேறொருவனும் எனக்கு கொழுநன் ஆவதற்கு எண்ணமும் தோன்றும். ஆகையின் பூமியில் ஆண்மக்களது பிறவி இல்லாது இருந்தாலன்றிப் பெண்களை நன்னடத்தையுடையவர்கள் என்று நம்புவதற்கு இடமும் உண்டோ?" என்றாள் த்ரௌபதி.

யாவரும் உண்மையையே உரைத்ததால் பழமும் முன்னிருந்த இடத்தை அடைந்தது. த்ரௌபதியின் சலன மடைந்த மனமும் தன்னிலை அடைந்தது. *

* இந்தபாகம், வ்யாஸபாரதத்தில் கிடையாது. இங்கு வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது. இதை இன்னமும் விஸ்தாரமாக விரித்து நல்லாப்பிள்ளை எழுதியிருக்கின்றனர். அவர் நெல்லிமரத்தின் தன்மையையும், அது எவ்வாறு மித்ர மஹாமுனிக்கு உணவாகியதென்பதையும், மித்ரமஹாமுனிவர் அதை எவ்வாறுட்கொள்வா ரென்பதைப்பற்றியும் கூறியுள்ளார். இக்கதை இங்கு மனத்தின் சலன நிலையைக் காட்டி, சலித்ததும் கீழ்வழியில் பாயாது, தனது நிலையை அறிந்து பச்சாத்தாபமுற்று மேல் வழி யடைவதற்கு உதாஹரணமாக எழுதப்பட்டுள்ளது.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

**நம்மவரைக் கவர்ன்மெண்டார் நன்கு மதித்தல்.**—சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜ் வேலைபார்த்து வந்த ஆனரபில் மிஸ்டர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களைச், சென்னை கவர்னர் நிர்வாகஸபை மெம்பராக நமது மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியவர்கள் நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக ஹைகோர்ட்டு வக்கீலாயிருந்த மிஸ்டர் பி. ஆர். ஸுந்தரய்யரவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நியமனங்கள் நமக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றன.

* *
*

**புதிய சென்னை கவர்னர்.**—சென்னை ராஜதானிக்குப் புது கவர்னராய் ஸர் தாமஸ் கிப்ஸன் கார்மைகேல் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இப்போது விக்டோரியா என்ற ஆஸ்ட்ரேலியா குடியேற்ற நாட்டுக்குக் கவர்னராயிருந்து வருகிறார். அவர் மே மாதத்தில் மெல்போர்னை விட்டுப் புறப்பட்டு இங்கிலாந்துக்குப் போவார். அக்டோபர் மாதத்தில்சென்னை வந்து சேருவர்.

* *
*

**குண்டூர் கல்விப் பொருட்காட்சி.**—குண்டூரில் எடுகேஷனல் எக்ஸிபிஷன் என்ற கல்விப் பொருட்காட்சி யொன்று வித்தையிலாகாத் தலைவர் ஆனரெபில் மிஸ்டர் J. H. ஸ்டோன் அவர்களால் திறக்கப்பட்டது. அந்தப் பொருட்காட்சியை அவர் ஓர் ஆரம்பப் பிரசங்கத்துடனே திறந்தார். அக்காட்சியை யொட்டி ஒரு வாரம் தினந்தோறும் கல்விச்சபை யொன்றுகூடிற்று. அச்சபையில் கல்விச் சம்பந்தமான வியாசங்கள் சில தக்க கல்விமான்களால் வாசிக்கப்பட்டுத் தர்க்கிக்கப்பட்டன. அக்காட்சியைப் பார்க்கக் கூடியிருந்த உபாத்தியாயர்களையும் மற்றவர்களையும் இரண்டாவது சர்க்கில் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் G. V. சுப்பராயடு சாஸ்திரி அவர்கள் நல்வரவு கூறியழைத்ததாய்த் தெரிகிறது. இம்மாதிரிக் கல்விப் பொருட்காட்சிகள் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்திருப்போர் மனதில் போட்டி போடும் உணர்ச்சியை யுண்டுபண்ணி, அவர்களை உபாத்திமைத் தொழிலில் உசாகங்கொள்ளும்படி செய்யுமென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

* *
*

**கும்பகோணம் ரேஞ்சு எலிமெண்டரி ஸ்கூல்கள்.**—சென்ற 1911-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ந் தேதி சனிக்கிழமை மாலை 3-மணிக்கு டவுன் ஹைஸ்கூல் புது ரோட்டிற்குத் தென்புறமுள்ள டவுன்ஹைஸ்கூலுக்குச் சொந்தமான கிரௌண்டில் (மைதானத்தில்) கும்பகோணம்ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் மேல் விசாரணையிலுள்ள ஸ்கூல் உபாத்தியாயர்களால் மாணாக்கர்களைத் தேகப்பயிற்சி, அதாவது

துப்பாக்கிகள் உபயோகித்தல், கொடி உபயோகம் முதலியவைகள் செய்யும்படி பயிற்சி செய்யப்பட்டுப் பரிட்சித்துப் பார்க்கப்பட்டது. இதற்கு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் J. O. ஆட்ஜஸ், காலேஜ் பிரின்ஸ்பால் மிஸ்டர் எட்ஸூம், அவர் மனைவியும், ஆனரெபில் திவான்பகதூர் R. ரெகுநாதராயர் அவர்களும் வந்திருந்தார்கள். இந்த ஸ்போர்ட்ஸ் வேடிக்கைக்குக் கும்பகோணம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் மிஸ்டர் A. கோவிந்தராஜ முதலியார் B. A., மிஸ்டர் R. சாமிநாதய்யர் B. A,. L. T., ராவ்பகதூர் அப்புசாஸ்திரியார் B. A., டவுன் ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயர் முதலியவர்களும் இன்னும் அநேக கனவான்களும், எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களும், செகிண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களும் விஜயம் செய்திருந்ததாகத் தெரிகிறது.

* *
*

**பர்மாவில் வாழைநார் செய்யும் கம்பெனி.**—வாழை மட்டைகளிலிருந்து நேர்த்தியான நார் எடுக்கலா மென்றும் அந்நாரைக் கயிறுகள் திரிக்கவும், துணிகள் நெய்யவும், உபயோகப் படுத்தலாமென்றும் இந்நாட்டு ஜனங்கள் அறிந்துகொண்டு சிறிது காலமாகிறது. சில இடங்களில் யந்திரங்களைக் கொண்டு வாழை நாரெடுத்துப் பார்த்தும் வருகிறார்கள். ஆனால் இந்நாட்டில் வாழை நாரெடுத்தலை ஒரு தொழிலாய்ச் செய்வோரைக் காணவில்லை. அதுபற்றி பர்மாநாட்டில் வாழைநார் எடுப்பதை ஒரு தொழிலாகவே மேற்கொண்டு செய்ய, ஒரு கம்பெனி ஏற்பாடாய் வருகிறதென்று கேள்விப்படச் சந்தோஷமாயிருக்கிறது. பர்மா நாட்டில் வாழைக்குக் குறைவில்லை யாதலால் வாழை மட்டைகள் கணக்கு வழக்கின்றி அங்குக் கிடைக்கும். அம்மட்டைகளிலிருந்து எடுக்கப்படும் நாரும் அந்நாரைக் கொண்டு திரிக்கப்படும் கயிறும் மேல்நாடுகளில் அதிகமாய் விலையாகிறபடியால், தகுந்தபடி மூலதனஞ் சேர்த்து ஒரு கம்பெனியை ஸ்தாபித்து அதனை நிர்வாக ஊழலின்றிச் செம்மையாய் நடத்தினால் அத்தொழிலால் லாபமில்லை யென்று சொல்லும்படியிராது. பர்மாநாட்டில் சேர்க்கப்பட்டு வரும் கம்பெனிக்கு 5-லட்சம் ரூபாய் மூலதன மென்றும் 50,000 பங்காளிகளிடம் பங்குக்கு ரூபா 10-வீதம் அந்தத் தொகையைச் சேர்த்து விடப்போகிறார்களென்றுந் தெரிகிறது. அந்த நாட்டைச் சேர்ந்த ஹென்ஸாடா ஜில்லாவிலுள்ளயாந்தலின் என்ற ஊரில், நார் எடுக்கும் முதல் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்படப்போகிறது. அத்தொழிற்சாலை லாபத்தைத் தருகிறதென்று தெரியத் தலைப்படுமாயின், அந்நாட்டிலே வாழைமிகுதியாய்ப் பயிராகும் அநேக இடங்களில் அம்மாதிரி தொழிற்சாலைகள் காலக்கிரமத்தில் தோன்றுவதில் சந்தேகமில்லை.

* *
*

**பயங்கரமான வேடி விபத்து.**—நியூயார்க் பட்டினத்தில் ஒரு பயங்கரமான வெடி விபத்து நேரிட்டது. ஒரு வீடு கட்டப்பட்டு வந்த தருவாயில் காஸ், டைனமிட், இரண்டினாலும் எதிர்பாராத விதமாய் வெடி விபத்து உண்டாயிற்று. அண்டை அயலிலுள்ள கட்டடங்களும், ஜன்னல்களும் நேர்ந்த வெடியினால் துகள் துகளாய்ப்போயின. ஒரு டிராம்வண்டி மேலே கிளம்பி ஒரு மோட்டார்வண்டியின் மீது விழுந்து விட்டது. நான்கு பிரயாணிகள் நசுக்குண்டு உயிர்துறந்தார்கள். மொத்தத்தில் பதினாறு பேருக்கு உயிர்ச்சேதமும், முப்பது நாற்பது பேருக்குப் படுகாயமும் நேர்ந்திருக்கின்றன. பின்னால் வந்த தந்தியால் இருநூறு பேருக்கு மேல், காயப்பட்டிருக்கிறார்களென்றும், 500,000-டாலர்கள் வரையில் நஷ்ட மேற்பட்டிருக்கிற தென்றும் தெரிய வருகிறது.

* *
*

**மின்சார கடிகாரம்.**—லிவர்பூரில், ராயல் இன்சுவரன்ஸ் கம்பெனிக் கட்டடத்தில் மிக விரைவில் ஓர் மணிக்கூடு வைக்கப்படும். இதன் விசேஷங்களாவன:—சாயங்காலங்களில் கடிகார வட்டத்திலுள்ளபடி நேரத்தைக் கணக்கிடுதற்கு வெளிச்சம் தானே அங்கு அவ்வக்காலத்தில் பிரகாசமாகும், இக்கடிகாரத்துக்கு நான்கு வட்டங்களுள. ஒவ்வொன்றும் 25-அடி குறுக்களவுடையன. நிமிஷத்தைக்காட்டும் கம்பி 14-அடி நீட்டும் 3-அடி அகலமுமுடையது. இக்கடிகாரம் இடைவிடாமற் செல்லக்கூடியதாகச் செய்யப்பட்டிருக்கின்றது. மணியைக் குறிக்கும் கம்பியை ஒரு யந்திரம் புலப்படாது தள்ளிச் செல்ல, அப்பரந்த வட்டத்தில் நிமிஷத்தைக் காட்டும் கம்பி, மற்றோர் இயந்திரத்தால் விரைந்து தள்ளப்படுகின்றது. மாரிகாலத்திலும் கோடைகாலத்திலும் வெளிச்சம் வேண்டியதாகக் குறிக்கப்பட்டிருக்கும் காலங்களில் தானே தீபம் ஏற்றிக் கொள்ளுகின்றது. எத்தனை வகையான நூதன கடிகாரங்கள் இதுவரையிற் செய்யப்பட்டன. இவற்றிற்கெல்லாம் காரணம் யாது? விடாமுயற்சியும் ஜன ஒற்றுமையுமேயாம்.

* *
*

**இங்கிலாந்தின் கிரீடம்.**—காலஞ்சென்று போன விக்டோரியா இராணியாரின் கிரீடம், 1838-ம் ஆண்டில், பழைய கிரீடங்களிலிருந்தெடுத்த விலையுள்ள ரத்தினக் கற்களால், "லண்டன்" நகரில் கீர்த்திபெற்ற நகை வியாபாரிகளாகிய "றென்டல் அண்டு பிறிஜெஸ்" என்பவர்களாற் செய்யப்பட்டது. இதில் ஒரு பெரிய நீலக்கல்லும், ஒரு பெரிய மாணிக்கக்கல்லும், 11-மரகதக் கற்களும், 16, சாதாரண நீலக்கற்களும், 4-சாதாரண மாணிக்கக் கற்களும், 1364-பட்டந்தீர்ந்த வயிர ரத்தினங்களும், 1420-சாதாரண வயிரக் கற்களும், 277-திறமான முத்துகளும் அடங்கி யிருக்கின்றன.

* *
*

**அடைக்கலாங் குருவி.**—இக்குருவிகளிலொன்று 6000-பூச்சிகளைத் தின்று விடுவதாக, பறவைகளைப் பற்றிய ஆராய்வில் மிகுந்த ஆங்கில பண்டிதர் ஒருவர் கூறுகின்றார்.

**பெருங்காட்சிச் சாலை.**—1915-ம் வருஷத்தில் லண்டன் நகரில் அங்கிலேய இராச்சியத்திலுள்ள சகல பொருள்களையுமடக்கிய ஓர் பெரும் நூதன காட்சிச் சாலை திறக்கப்போகின்றார்களாம்.

* *
*

**நீளமுள்ள பாலம்.**—இவ்வுலகத்திலுள்ள பாலங்களுள் மிகநீளமுள்ளது சீனதேசத்திலேயே யிருக்கின்றதாம். இது 23000-அடி நீளமும், 70-அடி அகலமும், 70-அடி உயரமும், தனித்தனி 75-அடி விஸ்தாரத்துக்கிடையிலுள்ள 300-தூண்களால் தாங்கப்பட்டுளது.

* *
*

**செம்படவனால் காப்பாற்றப்பட்ட பிராமணன்.**—கன்னியா குமரியில் ஒரு செம்படவன் தன்டையகட்டுமரத்தை போட்டுக்கொண்டு வெகுதூரம் கடலில்சென்று மீன் பிடித்துக்கொண்டிருந்தான். அப்போது சிறிதுதூரத்தில் ஒரு தேங்காய் மிதப்பதுபோல் ஏதோ காணப்பட்டது. அது என்ன பார்க்கலாமென்று அவன் தன் கட்டு மரத்தை அது மிதந்துகொண்டிருந்த இடத்திற்குக் கொண்டுபோனான். சமீபத்தில் போனதும், அது தேங்காயல்லவென்றும், ஒரு மனிதனுடைய தலையென்றும், அவன் இறந்துபோய் விடாமல் உயிரோடிருக்கிறானென்றும் தெரியவர, அவன் உடனே அந்த மனிதனை வெகு கஷ்டப்பட்டுத் தன்னுடைய கட்டுமரத்தில் தூக்கிப்போட்டுக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான். கரைவந்து சேர்ந்ததும் மற்ற செம்படவர்கள் வந்து கூடினார்கள். சமுத்ரத்துக்கு இரையாகாமல் உயிர் தப்பிக் கரைவந்து சேர்ந்த மனிதன் ஒரு பிராமணன் என்று தெரியவந்தது. உடனே அவர்கள் அவருக்கு வேண்டிய வழிசெலவுக்குச் சிறிது பணங்கொடுத்து அனுப்பினார்கள். அந்தப் பிராமணன் திருநெல்வேலி ஜில்லாக்காரரென்றும் அவர் சமுத்திர ஸ்நானஞ் செய்து கொண்டிருக்கையில் அவரை அலையடித்துக் கொண்டுபோய்விட, அவருடைய நல்ல காலமானது ஒரு செம்படவனை அவருடைய சகாயத்துக்குக்கொண்டுவந்து விட்டதென்றும் தெரிகிறது.

* *
*

**சென்னையில் ஜனன மரணம்.**—ஜனவரிமாதம் 28-ந் தேதியோடு முடிவான வாரத்தின் முனிசிபல் கணக்குபடி ஜனனம், 382; ஆண் 180; பெண் 202; மரணம் 414; ஆண் 197; பெண் 217; விவரம் பிளேக்0; வாந்திபேதி 4; பெரியம்மை 9; தட்டம்மை 9; ஜுரம் 88; சீதபேதி 48; அஜீர்ணபேதி 30; மற்ற காரணங்கள் 226; ஐரோப்பியர்கள் 4; தென் இந்தியர்கள் 4; சுதேசக் கிறிஸ்தவர்கள் 13; ஹிந்துக்கள் 333; மகமதியர்கள் 60.

* *
*

சென்னை கவர்ன்மெண்டார் வருஷா வருஷம் ஜனவரி மாதத்தில் பிரசுரம் செய்யும் விவஸாயப் பஞ்சாங்கத்தை இவ்வருஷம் ஏப்பிரல் மாதத்தில் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

**துஷ்டரைக் கண்டால் தூரவிலகு.**—"மெத்த நல்லது, பெண்மணியே எனது இரு கண் மணியே, ஆனால் உலகம் எவ்வளவு பொல்லாததென்றும், துஷ்டவினைகளடர்ந்த தென்றும், அதில் பாபமென்னும் படு விஷத்தையே தாய்ப்பாலோ டருந்தி வளர்ந்திருக்கும் அஞ்சாத நெஞ்சுபடைத்த வஞ்சகர் எவ்வளவோ மிதமிஞ்சி யெங்கும் சஞ்சரிக்கிறார்களென்றும் உனக்குச் சரியாய்த் தெரியாது. ஆயினும் அது உண்மையினும் உண்மை. தங்கள் மாயவலையை வீசி, வெகு நயமாய்ப் பேசி, மாசற்றவர்களை மயக்கி, ஏமாற்றித் தங்களைப்போல் (தறுதலைகளாய்ப்) பிறரையும் வஞ்சகராக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு திரியும் மிலேச்சர் அநேகருண்டு. அவர்களுக்குக் கடவுளுமில்லை—நீதியுமில்லை,நியாயமுமில்லை—பாபமுமில்லை, பழியுமில்லை—சிறியோர் பெரியோரென்னும் பேதமுமில்லை. நாணயமென்பதைக் கனவிலும் காணார். சோம்பேறிகளாய்த் திரிந்து வயிறு வளர்க்கும் நாஸ்திகர். இப்பேர்ப்பட்ட பாதகர்களைக் கண்டால் நீ சற்றுங் கவனியாமல் முற்றும் அப்பாலே போ. வலிய வந்து உன் சகவாசம் பண்ண எத்தனிப்பார்கள். உன்னை மெச்சிப் பேசுவார்கள். முகஸ்துதி கூறுவார்கள். புஷ்பத்தைச் சுற்றி மொய்க்கும் வண்ணாத்திப் பூச்சிகளைப்போல் உன்னைச் சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டு உனக்குத் தீங்கு நினைப்பார்கள். அவர்கள் பயமென்பதின்றித் தயவுடன் சொல்லும் நயமான பேச்சைக் காதால் கேட்காதே. அவர்கள் அளிக்கும் பரிசைக் களிப்புடன் கையால் தொடாதே. வாசனை வீசும் தாழஞ் செடியினடுவில் நாகம் பதுங்கி மறைந்திருப்பதுபோல் மெத்த உத்தமர்போல் உன்னிடம் வந்துறவாடும் மோசக்காரர் சீக்கிரம் உனக்கு நாசக்காரரான எமதூதராகி விடுவார். அப்பேர்ப்பட்ட துஷ்டரைக் காணும்போதெல்லாம் அவர்களை அருவருத்து அவர்கள் சகவாசத்துக் கிடங்கொடாமல் தள்ளி, பெண்களுக்குரிய நாணமென்னும் ஆபரணத்தை யணிந்தவளாய் அகன்றுவிடு. ஆனதால்

'கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினரைக் கண்டால் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.'

அப்படி நீ செய்யாவிடின் அம்மிலேச்சர் வலையிற் சிக்கிச் சீர்குலைந்து போவது திண்ணம்."

சத்தியவல்லி*—122-ம் பக்கம். விலை அணா **12**

---

## புத்தக வரவு.

கற்பகவல்லி*—ஒரு சிறந்த செந்தமிழ்க் கதை. திருவனந்தபுரம் சென்று ஜோஸப் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் S. முத்துஸ்வாமிப் பிள்ளை அவர்கள் எழுதியது. விலை அணா 8.

---

*இப்புத்தகங்கள் வேண்டுவோர், மயிலாப்பூர், ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருக்கெழுதிக்கொள்க.

# ஸ்ரீ
# இராமாயண வினாவிடை

அழகிய சித்திரப்படங்களுடன் கூடிய மூன்றாம் பதிப்பு.—இதில், இராமாயணக்கதையின் ஏழு காண்டங்களின் ஸாரமும், ஸந்தேகமுண்டாகக்கூடிய நிலைமைகளுள்ள விடத்து ஆக்ஷேப ஸமாதானங்கடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக்கூய விடத்துப் படிப்பினையும் அடங்கியுள்ளன. சிறுவரும் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோர் மனம் களிப்புறுமாறு அத்யாத்ம ராமாயணத்திலும், ஆனந்த ராமாயணத்திலும் கண்ட இராமாயணத்தின் உட்பொருளும் அனுபந்தமாக இப்புத்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் அநேக பாடசாலைகளில் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சின்னாட்குள்ளாகவே மூன்றாவது பதிப்பு வெளிவந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையை நன்கு விளக்கா நிற்கும். இதுவரையும் கண்டிராத புதிய சித்திரப்படங்கள் நமது புத்தகத்திற்கென்றே வரையப்பட்டு ஒவ்வோர் காண்டமும் அதனால் விளக்கப் பட்டிருக்கிறது. ... ... ... விலை ரூபாய் 1

---

# ஆரியமத உபாக்கியானம்

**நான்காம் பதிப்பு**

இப்புத்தகத்தைப் பற்றிப் புகழதார் இல்லை.—இது உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக் காட்டும் அநேக நீதிக் கதைகள் கொண்டது. இக்கதைகள் நம்முடைய பொக்கிஷங்களான ஸ்ரீ இராமாயணம், மஹாபாரதம், பாகவதம் முதலிய புராண விதிகாசங்களிலிருந்து எடுத்து மிகவும் எளிய நடையில் எழுதப்பெற்றன. அநேக பாடசாலைகளில் பாடபுத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இப்பதிப்பில் அநேக சீர்த்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அநேகர் வேண்டுகோளின் படி, இப்பதிப்பில் அநேக அழகான சித்திரப்படங்களும் சேர்க்கப்பட்டிக்கின்றன. விலை அணா 4

---

# சத்தியவல்லி

இது ஓர் சிறந்த கற்பனைக்கதை. பீமலா, எலேன் எனும் நாவல்களின் நூலாசிரியரான ம-ா-ா-ஸ்ரீ **R. P.** குழந்தைசாமிப் பிள்ளை **B.A., L.T,** அவர்களால் எழுதப்பெற்று, சென்னை ஸர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ம-ா-ா-ஸ்ரீ, **T.** ராமகிருஷ்ணப் பிள்ளை **B.A.**, அவர்களால், எழுதிய முகவுரையுடன் கூடியது. ஸத்தியமே ஜெயம் எனும் படிப்பினையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனை புகட்டும் பாகங்களும் இனிய நடையில் மனத்தை ப்ரமையுள் ஆழ்த்தும்படியாகக் கற்பனை வர்ணனை இயற்கையே ப்ரதிபலித்தாற்போலிருப்பதாழ் படிப்பவர் மனதைப்பற்றி இழுக்கும். தர்ம ஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைபிடிக்க வேண்டுமென்னும் நிலைமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும் பாஷையின் போக்கும், யுக்தியின் ஸெசகமும், கதையின் தாட்டியும் மனதை இழுக்கும் வன்மையும் வியக்கத்தக்கவை. விலை அணா 12

---

# கிரிஸெல்டா அல்லது பெருமையுள்ள மனைவி

இப்புத்தகத்தில் மனைவியின் கடமைகள் மிகவும் நன்றாய் எடுத்துக் காட்டியிருக்கிறது. பெண்பாலர் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டியதோர் புத்தகம். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது இக்கதையினின்று நன்றாய் வெளியாகும். ... ... ... ... ... விலை அணா 3

**விலாஸம்.—ஜனரல் ஸப்ளைஸ்கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்**